Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

மழைக்கான சாத்தியம் உண்டு.
27.°C 26.°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 338 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 14, வியாழன் 31.10.2013

## வலி.வடக்கு வீடுகள் அழிப்பு அமெ. தூதருக்கு விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 31

"வலி. வடக்கில் மேற்கொள்ளப் பட்டுவரும் வீடுகள் அழிப்பு தொடர்பான பிரச்சினை, இலங்கை அரசுடன் பேசித் தீர்க்க வேண்டிய ஒன்று. இது தொடர்பில் அமெரிக்கத் தூதுவருக்கு அனைத்தையும் எடுத்துக் கூறியுள்ளோம்" என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார் வடக்கு முதல்வர்.

இதன்போது வலி.வடக்கில் மக்களின் வீடுகள் இராணுவத்தினரால் இடித்தழிக்கப்படுவது தொடர்பில் அமெரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் பேசப்பட்டதா? என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்தபோதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

21

# வலி.வடக்கு வீடழிப்பு ஜனாதிபதியுடன் பேச்சு

### உதயனுக்குத் தெரிவித்தார் சம்பந்தன்



திருகோணமலை, ஒக். 31

வலி.வடக்கில் இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் வீடுகள் அழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இரண்டொரு தினங்களுக்குள் பேச்சு நடத்தப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று மாலை உதயனுக்குத் தெரிவித்தார்.

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 382 ஏக்கர் நிலத்தை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளது. இந்தப் பகுதிகளைச் சூழப் பாதுகாப்பு வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்குள் உள்ளடங்

21

ஓடும் பஸ்ஸுக்குள் தீ 45 பேர் கருகிச் சாவு 06


பணிந்தது அமெரிக்கா 07

மானிப்பாய் பரிஸ் அணி 44 ஓட்டங்க வெற்றி 22

பங்களாதேஷ் இலகு வெற்றி 23

# சர்வதேச உதவிகள் வடக்குக்கு கிடைக்கும்

### முதலமைச்சரைச் சந்தித்த பின்னர் அமெரிக்கத் தூதுவர் நம்பிக்கை



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 31

வடக்கு மாகாண சபைக்குத் தொடர்ந்தும் சர்வதேச உதவிகள் கிடைக்கும் என்று தாம் நம்புவதாக, வடக்கு முதலமைச்சரைச் சந்தித்துப் பேசிய பின்னர் அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு ஒருநாள் பயணமாக நேற்றுக் காலை வருகை தந்த அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்புத் தொடர்பாக வடக்கு முதலமைச்சர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஆகியோர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிட்டனர்.

சந்திப்புக் குறித்துத் தூதுவர் சிசன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சரைச் சந்தித்ததில் எனக்கு மகிழ்ச்சி. அவருக்கு எமது அரசின் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளேன். நாம் இருவரும் பல சவால்கள் தொடர்பில் கலந்துரையாடினோம். இங்குள்ள தேவைகள் தொடர்பில் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நாம் யு.எஸ்.எயிட் ஊடாக 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கவுள்ளோம். அதேபோன்று யாழ்.பல்கலைக்கழகத்தினூடாக ஆங்கிலப் பயிற்சி நெறியையும் வழங்கவுள்ளோம். இதைவிட வேறு பல திட்டங்கள்

21

## உடுவிலில் டெங்கு நோயாளி

வலி.வடக்கு, ஒக். 31

உடுவில் பகுதியில் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளான பெண் ஒருவர் இனங்காணப் பட்டுள்ளார்.

இதனையடுத்து அந்தப் பகுதியில் புகையூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடுவில் மகளிர் கல்லூரியில் தேநீர்ச்சாலையில் பணியாற்றும்பெண் ஒருவருக்கே டெங்கு தொற்று உள்ளமை இனங் காணப்

21

## வெளிநோயாளர் சிகிச்சைகள் நாளை இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்.போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவு, சிகிச்சைப் பிரிவுகள் (கிளினிக்) என்பன நாளை வெள்ளிக்கிழமை இயங்கமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நோயாளர்கள் நாளை வெள்ளிக்கிழமை வைத்திய சாலைக்கு வருவதை இயன்றளவு தவிர்க்குமாறு வைத்திய சாலைப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி பவானி பசுபதிராஜா அறிவித்துள்ளார்.

அரச தாதிமார் சங்கம் மற்றும் நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியம் என்பன நாளை சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடு

21

## காளி கோயில் உடைப்பின் பின்னணியில் படையினர்

### மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 31

தம்புள்ளை காளிகோயிலைப் பாதுகாப்புத் தரப்பினரே இடித்தழித்தனர் என்று தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், சிறுபான்மை மக்களின் மத நம்பிக்கைகளை உதாசீனம் செய்யும் இந்த நாட்டு அரசின் பொறுப்பற்ற தன்மைக்கு இதைவிட வேறு புதிய சான்றுகள் தேவையில்லை என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மனோ கணேசன் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர்

21

## வைத்தியசாலையில் முதல்வர்

யாழ்ப்பாணம், ஒக்.31

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக் காக யாழ். போதனா வைத்திய சாலை இருதய சிகிச்சைப் பிரிவில் நேற்று அனுமதிக்கப்பட்டார். அவர் பரிசோதனை ஒன்றுக்காகவே அனுமதிக்கப் பட்டார் என்றும் அந்தப் பரிசோதனை 24 மணி நேரம் மேற்கொள்ளப்பட வேண்டியதால் இன்று வியாழக்கிழமை 12 மணி வரை அவர் அங்கு தங்கியிருப்பார் என்றும் வைத்திய சாலை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

மாரடைப்பு ஏற்பட்டே அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று நேற்று வெளியான செய்திகளில் உண்மையில்லை என்று மருத்துவ வட்டாரங்கள் கூறின. அப்படி எந்த நிலைமையும் அவருக்கு ஏற்படவில்லை என்றும் சாதாரண பரிசோதனையின் நிமித்தமே அவர் அங்கு அனுமதிக்கப்பட்டார் என்றும், அந்தப் பரிசோதனை முடிந்த பின்னர் இன்று நண்பகல் 12 மணிக்கு அவர் வீடு திரும்புவார் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (த)

## வன்புணர்வின் பின்னரே கொல்லப்பட்டார் யுவதி

### ஆரம்பவிசாரணைகளில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 31

புத்தூர் பகுதியில் உள்ள கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இளம் பெண் வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புத்தூர் கிழக்குப் பகுதியிலுள்ள தோட்டக்கிணறு ஒன்றிலிருந்து அடிகாயங்களுடன் இளம் பெண்ணின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுப் பரிசோதனைகள் இடம்பெற்றுவருவதாகவும், ஆரம்பகட்டப் பரிசோதனைகளில் இருந்து குறித்த பெண் வன்புணர்வுக்குப் பின்னரே கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனத் தெரியவந்துள்ளதாகவும் வைத்திய சாலை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ந்

21

## இந்திய மீனவர் 19 பேர் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 31

சில மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 19 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றினால் நேற்று புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

எனினும் அவர்கள் வந்த படகுகளைத் தடுத்து வைத்துள்ள நீதிமன்றம், படகுகளின் உரிமையாளர்களை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு வழக்கை டிசெம்பர் மாதத்துக்கு ஒத்திவைத் துள்ளது.

ஊர்காவற்றுறை நீதி

21

## தென்கொரியப் புலமைப்பரிசிலில் வடக்கு இளைஞர் ஆர்வமில்லை

### யாழ். வந்த தூதுவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 31

தென்கொரியாவுக்கு மேற்படிப்புக்கான புலமைப் பரிசில் வாய்ப்புக்களை நாம் வழங்குகின்றோம். வடக்கு மாகாண இளைஞர், யுவதிகள் அதற்கு விண்ணப்பிப்பதில்லை என்று தென்கொரியாவுக்கான இலங்கைத் தூதுவர்

21

## கடை உடைத்து பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.31
யாழ்.மாவட்ட செயலகத்தை அண்மித்துள்ள வியாபார நிலையம் ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
கடையின் கதவைப் பிரித்து உள்ளே சென்ற திருடர்கள் 19 ஆயிரத்து 225 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

## ஆடுகள் திருட்டு

வடமராட்சி, ஒக்.31
நெல்லியடி கிழக்கு - மாலிசந்திப் பகுதியில் நேற்று அதிகாலை சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆடுகள் இனந்தெரியாதோரால் திருடிச் செல்லப்பட்டுள்ளன.
அதிகாலை 2 மணியளவில் வீட்டின் பின்புறக் கேற்றால் நுழைந்த திருடர்கள் இரு ஆடுகளையும் திருடிச் சென்றுள்ளனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-8)

# நடனத்துறை மாணவிகள் நேற்று கவனவீர்ப்பு போர்

### இராமநாதன் நுண்கலைப் பீட வாயில் முன்பாக

யாழ்ப்பாணம், ஒக்.31
யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலை நடனத் துறையின் மாணவிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி 6 நாள்களாக விரிவுரைகளை புறக்கணித்து வந்த நிலையில் நேற்றுப்புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இராமநாதன் நுண்கலைக் கழகப் பிரதான வாயிலில் நேற்று முற்பகல் மழைக்கு மத்தியில் சுமார் 200 மாணவிகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
'பரீட்சை முடிவுகளை உடனடியாக மாற்றுக', 'மாணவிகளாகிய எம்மிடம் விரிவுரையாளர்கள் பச்சோந்திகளாக நடந்துகொள்வது ஏன்?', 'தகுதியான விரிவுரையாளர்கள் என்றால் புள்ளியிடலின்போது எதற்காகப் பென்சிலைப் பாவிக்கின்றனர்?', 'பாரபட்சமின்றி புள்ளிகள் வழங்கப்படவேண்டும்?', 'எம்மைப் பாதிக்கும் பரீட்சை



முறையை உடனடியாக மாற்ற வேண்டும்', 'எங்கள் கோரிக்கைகள் இன்னும் ஏன் நிறைவேற்றப்படவில்லை', ' பெற்றோர்களே நடனத்துறைக்கு மாணவிகளை அனுப்பாதீர்' போன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள் வாயிலின் இருபுறமும் ஒட்டியிருந்தனர்.
இது குறித்து மாணவிகள் தெரிவித்ததாவது:-
பரீட்சை என்றால் அதற்கு முதல்நாள் பிற்பகலே எமக்கு அறிவிக்கிறார்கள். பரீட்சை நடைபெற்று முடிந்த பின்னர் பெறுபேறு வெளியாகின் அறிவித்தல் பலகையில் புள்ளிகளைக் காட்சிப்படுத்துவர். அவ்வாறு காலையில் காட்சிப் படுத்தப்படும் புள்ளிகள் பிற்பகலில் மாற்றப்படுகின்றன. புள்ளிகள் குறைக்கப்பட்டே அந்தப் பட்டியல் மீண்டும் காட்சிப்படுத்தப்படுகிறது. அல்லது பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டனர் என்பதற்கான 'டி' குறியீடு போடப்படுகிறது.
சிலருக்கு முதலாம் வருடத்திலிருந்து இறுதிவருடம் வரையான அனைத்துப் பரீட்சைகளிலும் சித்தியடையத் தவறியவர்கள் என்றே குறியீடு பதிவு செய்யப்படுகிறது.
அதனால் இதுவரை மூன்றாம் வருடத்தைச் சேர்ந்த 5 மாணவர்களும், இரண்டாம் வருடத்தைச் சேர்ந்த 6 மாணவிகளும் இறுதியாண்டில் பயிலும் 2 மாணவிகளும் இடைவிலகி மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளனர் - என்றனர்.
இது தொடர்பில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அந்த விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எதிர் வரும் 8 ஆம் திகதி அது தொடர்பிலான தீர்வை எடுக்க முடியும் என்று கூறினார். (த-4)

## ஆசிரியர் தினவிழா

வடமராட்சி, ஒக். 31
முன்பள்ளி ஆசிரியர் தினவிழா இன்று வியாழக்கிழமை பிற் பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (த-8)

## புத்தக கண்காட்சி

வடமராட்சி, ஒக்.31
வாசிப்பு மாதத்தை ஒட்டி வடமராட்சிப் பிரதேச எழுத்தாளர்களின் படைப்புகளான சிறுகதைத் தொகுதிகள், நாவல்கள், கவிதைகள் மற்றும் பல்வேறு ஆக்கங்கள் கொண்ட புத்தகக் கண்காட்சி இன்று வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பார் ஆர்.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-8)

# நகர சபைத் தலைவரையும் உறுப்பினர்களையும் தாக்குவதற்கு முனைந்த சமுர்த்தி அலுவலர்கள்

### சாவகச்சேரியில் நேற்றுக் காலை சம்பவம்

தென்மராட்சி, ஒக்.31
சாவகச்சேரி நகர சபையின் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரைக் கத்தி மற்றும் புல்வெட்டும் ஆயுதம் ஆகியவற்றால் தாக்க முற்பட்டனர் சாவகச்சேரி சமுர்த்திச் சங்க முகாமையாளரும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும்.
தாக்க முற்பட்ட இருவரையும் சாவகச்சேரி பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
சாவகச்சேரி நகர சபையின் புதிய மீன் சந்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெறவிருந்ததால் அனைத்து உறுப்பினர்களும் நகர சபைக்கு வந்திருந்தனர். அவ்வேளையில் நகர சபையின் சாவகச்சேரி நூலக விஸ்தரிப்புக்காக நூலகத்துக்கு அருகில் ஒதுக்கப்பட்டுள்ள காணியில் சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி ஆண், பெண் உத்தியோகத்தர்கள் அத்துமீறி உள்நுழைந்து துப்பரவு செய்ய முற்பட்டனர்.
விடயத்தை அறிந்த நகரசபைத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் அங்கு சென்று விசாரித்து குறித்த காணி நூலக விஸ்தரிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியப்படுத்தினர். அப்போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கையில் வைத்திருந்த கத்தியினால் அவர்களைத் தாக்க முற்பட்டார்.

> “ தென்மராட்சி பிரதேச செயலர் இரட்டை வேடம் போடுவதை உணரக் கூடியதாக உள்ளது. காணியைத் துப்புரவு செய்யுமாறு உத்தரவிட்டு அவர் பிரதேச செயலகத்திலிருந்து வெளியேறினார் என்றார்.

அவ்வேளையில் அங்கு நின்ற உறுப்பினர்கள் அதனைத் தடுக்க முற்பட்டனர். இதன் போது மற்றொரு சமுர்த்தி அலுவலர் கையில் வைத்திருந்த புல் வெட்டும் ஆயுதத்தினால் உறுப்பினர்களைத் தாக்க முற்பட்டார்.
இது தொடர்பாக நகரசபை செயலாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார். அங்கு வந்த பொலிஸார் சமுர்த்தி உத்தியோகத்தர்களை காணிக்குள்ளிருந்து அப்புறப்படுத்தியதுடன் தாக்க முற்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
இந்தக் காணிக்குள் நகர சபைக்குச் சொந்தமான பல மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனுமதியின்றி வளாகத்துக்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பாகத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்,
தென்மராட்சி பிரதேச செயலர் இரட்டை வேடம் போடுவதை உணரக் கூடியதாக உள்ளது. காணியைத் துப்புரவு செய்யுமாறு உத்தரவிட்டு அவர் பிரதேச செயலகத்திலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.
பிரதேச செயலர் சாவகச்சேரி சமுர்த்தி அலுவலர்களை இவ்வாறான செயல்களில் ஈடுபடுத்தியதை வன்மையாக கண்டிப்பதுடன் வருங்காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாமெனவும் நகர சபை சார்பில் கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (த-9)



*யாழ். கே.கே.எஸ். வீதியில் சிவலிங்கப்புளியடியில் நேற்று புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஹன்ரர் - ஓட்டோ விபத்தில் ஓட்டோ மிக மோசமாகச் சேதமடைந்தது. இதில் ஓட்டோச் சாரதியான அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.சுதாகரன் (வயது-21) தலையில் காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.*

# உப தவிசாளரின் தலைமையில் வலி.தென்மேற்கு பிரதேச சபைக் கூட்டம்


வலி.தென்மேற்கு, ஒக். 31
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஒக்ரோபர் மாதத்துக்கான கூட்டம் உப தவிசாளர் தலைமையில் அமைதியான முறையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
பிரதேச சபைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமான கூட்டம் பிற்பகல் 1.30 மணிக்கு முடிவுற்றது.
கடந்த 25 ஆம் திகதியிலிருந்து பதவி விலகுவதாக தவிசாளர் கடிதம் சமர்ப்பித்துள்ளார் என்று தெரிவித்துள்ள செயலாளர், தவிசாளர் அனுப்பிய கடிதத்தை சபையில் வாசித்துக் காட்டியதுடன் கடிதத்தின் பிரதியை சபை உறுப்பினர்களுக்கும் வழங்கினார்.
பிரதேச சபையின் சட்ட விதி முறைகளுக்கமைய தவிசாளர் கூட்டத்துக்குச் சமுகமளிக்காது விட்டால் உப தவிசாளர் தலைமையில் கூட்டம் நடத்தலாம் என்று ஆளும் கட்சி உறுப்பினர் கே.கௌரிகாந்தன் சுட்டிக்காட்டியதையடுத்து கூட்டம் உபதவிசாளர் சி.சிவகுமார் தலைமையில் ஆரம்பமானது.
நிகழ்ச்சி நிரலின்படி கூட்டம் ஆரம்பமான போதும் சமர்ப்பிக்கப்பட்ட 8 ஆம் மாத அறிக்கை ஒரு மணி நேரமாக ஆராயப்பட்டும் சபையில் அங்கீகரிக்கப்படவில்லை.
இதனால் திருத்தம் செய்வதற்காக எதிரணி உறுப்பினர் எஸ். செல்வராஜா, ஆளும் கட்சி உறுப்பினர் கே.கௌரிகாந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.
இதைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவு உட்பட ஏனைய விடயங்கள் அமைதியான முறையில் ஆராயப்பட்டு உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டன. (ஐ-115)




# தீபாவளி தினத்தன்று முதியோர் கௌரவிப்பு

### யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில்

தென்மராட்சி, ஒக்.31
யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து தீபாவளி தினத்தன்று கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர்களை மகிழ்விக்கும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளன.
மாவட்டத்தில் உள்ள அனைத்து லயன்ஸ் கழகங்களும் முதியோர்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கவுள்ளன.
சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட கழகங்களின் இணைப்பாளர் லயன் எஸ். சுந்தரேசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ கலந்து கொண்டு முதியோர்களுக்கு யாழ். மாவட்ட லயன்ஸ் கழகங்களின் உதவிப் பொருள் களை வழங்கவுள்ளார்.
அன்றைய தினம் பி.ப. 2 மணிக்கு தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நலனோம்புத் திட்டங்கள் யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகங்களின் ஏற்பாட்டில் மறவன் புலோ சகலகலா வல்லி வித்தியாலயத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



சாவகச்சேரி நகர சபையினர் சுமார் 8 மில்லியன் ரூபா செலவில் புதிய மீன் சந்தைக்கான கட்டடம் அமைக்கவுள்ளனர். அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நகர சபைத் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் நட்டார். (வ-9)

# யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அமெரிக்கத் தூதரால் உதவிகள்


யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடம், கணினிக் கூடங்களுக்கான உதவிகளை வழங்கவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் திருமதி மிச்செல் ஜே.சிசன் குறிப்பிட்டார்.

நேற்று புதன்கிழமை அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.ஒஸ்மானியா கல்லூரிக்கு வருகை தந்த அமெரிக்கத் தூதர் கருத்துத் தெரிவிக்கையில்,

கல்லூரியின் தேவைகளுக்கு உதவி வழங்க அமெரிக்க அம்சம் என்ற அமைப்பினது இலங்கை வலுவூட்டலுக்கான நிலையங்களினூடாக ஏற்பாடுகளை மேற்கொள்வேன். எனது இரண்டு பெண் பிள்ளைகள் தற்போது பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு வெளிநாடுகளைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு உதவ வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. கல்வியின் முன்னேற்றம் குறித்து மாணவர்களாகிய நீங்கள் அக்கறை கொள்ள வேண்டும். கல்லூரியின் பொன் விழா கொண்டாடப்படவுள்ள நேரத்தில் உங்களை வந்து சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உங்களது கல்லூரியின் தேவைகளை நிறைவேற்ற முடியுமானளவில் உதவிகளை வழங்க விருப்பம் கொண்டுள்ளேன் என்றார்.



தனது பிள்ளைகளால் வழங்கப்பட்ட மடிக் கணினிகளையும் அதிபர் எம்.எம்.முபாரக்கிடம் வழங்கினார். தூதரகத்தைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ரீல், மைக்கல் செறின் ஆகியோரும் அமெரிக்கத் தூதுவருடன் வருகை தந்திருந்தனர். அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.ரகீம், இலங்கை சமூக ஒற்றுமைக்கான சம்மேளனத் தலைவர் எம்.என்.எம்.நபீன்மற்றும்யாழ்.முஸ்லிம் மக்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (வ-7)

# 'வடமாகாணத்தில் காணி உரிமையும் பெண்களும்' நூல் நேற்று வெளியீடு



யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் 'வடமாகாணத்தில் காணி உரிமையும் பெண்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று புதன்கிழமை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.கிளை அலுவலகத்தில் நடைபெற்றது. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் யாழ்.மாவட்டத் தலைவி சரோஜா சிவசந்திரன் எழுதிய இந்தநூலை வடமாகாண உதவிக் காணி ஆணையாளர் கை.மகேஸ்வரன் வெளியிட்டு வைத்தார். அத்துடன் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களின் காணி தொடர்பான சந்தேகங்களுக்கும் விளக்கம் அளித்தார். இந்த நிகழ்வில் வடமாகாணத்தில் 'பெண் தலைமைத்துவ குடும்பங்கள்' என்ற தலைப்பிலான நூலும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-10)

# கூ.சங்க அங்கத்தவருக்கே மானிய விதை உ.கிழங்கு


அச்சுவேலி, ஒக்.31

மானிய விலையில் விதை உருளைக் கிழங்கைப் பெற்று நடுகை செய்ய விரும்பும் விவசாயிகள் உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக இணைந்து கொள்ள வேண்டும். அவர்களுக்கு உருளைக்கிழங்கு பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் யாழ்.மாவட்ட சமாசத் தலைவர் கே.என். ஜெயகிருஷ்ணன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு கடந்த வருடம் ஏற்பட்ட பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டும் உருளைக் கிழங்குச் செய்கையை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டும் 200 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு 50 வீத மானிய விலையில் இந்த வருடம் வழங்கப்படவுள்ளது.

மானிய உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பாக சமாசத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:-



யாழ்.மாவட்ட விவசாயிகளை உருளைக்கிழங்கு செய்கையில் ஊக்குவிப்பதற்காக விதை உருளைக்கிழங்கு 50 வீதம் மானிய விலையில் வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில் 200 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் விநி யோகிக்கப்படவுள்ளது.

விதை உருளைக்கிழங்கை மானிய விலையில் விவசாயிகள் பெற்றுக்கொள்வதற்கு உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூபா 120 செலுத்தி உறுப்பினராகச் சேர்ந்து கொள்ள வேண்டும். அத்துடன் உருளைக்கிழங்குச் செய்கை தொடர்பான நிலத்தின் அளவு, தேவையான கிழங்கின் அளவு என்பனவற்றை உள்ளடக்கிய தகவல் விண்ணப்பப் படிவத்தை விவசாய சம்மேளனம் மற்றும் உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பரிந்துரைகளுடன் சமாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சமாச நிர்வாகிகள் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கூட்டுறவுத் திணைக்கள அதிகாரிகள் உள்ளடங்கிய உயர்மட்டக் குழு பயிர் செய்கை நிலத்தின் அளவு மற்றும் நிலைமைகளை உரிய முறையில் பரிசீலனை செய்து விதை உருளைக்கிழங்கின் பங்கீட்டு அளவினை தீர்மானிக்கும்-என்றார். (வ-11)

# எழிலூர் பகுதியில் வெடிபொருள்கள் மீட்பு

கொழும்புத்துறை, ஒக்.31

கொழும்புத்துறை, எழிலூர் பகுதியில் ஷெல்கள் மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புக் காணியில் மூடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட கிணறு ஒன்றை துப்புரவு செய்யும் போது வெடி பொருள்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஐந்துக்கும் மேற்பட்ட எறிகணைகள் குண்டுகள் கிணற்றைத் தோண்டும் போது வெளிவந்ததை அடுத்து அந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்புப் படையினருக்கு தெரியப்படுத்தப்பட்டது. படையினர் குண்டுகளை எடுத்துச் சென்றனர். (வ-135)

# பயிர்ச் செய்கை வயல்கள் குடியிருப்பு நிலங்களாக மாறுகின்றன

## சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

கிளிநொச்சி, ஒக்.31

கிளிநொச்சி மாவட்டத்தில் நெற் செய்கைக் காணிகளை குடியிருப்பு நிலங்களாக மாற்றும் வகையில் மண், போட்டு மேட்டு நிலமாக மாற்றுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தயாரூபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள பயிர்ச் செய்கை நிலங்கள் (வயல் நிலங்கள்) மண் போட்டு நிரப்பப்பட்டு மேட்டுக் காணிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஏ-9 வீதியின் பரந்தன் முதல் கரடிப் போக்கு வரையான பகுதிகளிலும் ஏனைய பரவிப் பாஞ்சான், மருதநகர், பன்னங்கண்டி போன்றபகுதிகளிலும் இரணைமடு நீர் வரிக்குட்பட்ட சில காணிகள் மண் போட்டு மேட்டுக் காணிகளாக மாற்றப்பட்டு குடியிருப்புக் காணிகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தக் காணிகள் பயிர்ச் செய்கைகளுக்காகவே வழங்கப்பட்டன. அவை எந்தவித அனுமதிகளும் இன்றி மேட்டுக் காணிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இதனால் எதிர்காலத்தில் பயிர்ச் செய்கை நிலங்கள் அற்றுப் போகும் வாய்ப்புக்கள் அதிகமாகி உள்ளன.

குறித்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விவசாய அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது விவசாயிகள், விவசாய அமைப்புக்கள், உரிய திணைக்கள அதிகாரிகள் ஆகியோரால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரச அதிபர் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதனை அடுத்துக் கருத்துத் தெரிவித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தயாரூபன், ஏ-9 வீதியின் பரந்தன் முதல் கரடிப் போக்கு வரையான பகுதிகளில் உள்ள நீர்ப்பாசனக் காணிகள் எந்தவித அனு மதிகளும் பெறப்படாமல் சட்டவிரோதமாக மேட்டுக் காணிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.



இதனால் எதிர்காலத்தில் நெல் வயல்கள் அற்றுப் போகும் நிலைமைகள் அதிகரிக்க உள்ளன.

இவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கு தமது திணைக்களம் தயாராக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதேச செயலர்கள் இந்த விடயம் குறித்துக் கவனம் எடுக்க வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-6)

## மரண அறிவித்தல்

### சபாரட்ணம் பாலகிருஸ்ணன்



வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் பாலகிருஸ்ணன் 28.10.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், இராசதுரை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் பாசமிகு கணவரும், காலஞ் சென்ற மோகனராஜன் மற்றும் ஜெயராஜன் (பிரான்ஸ்), யுவராஜ் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளினி, கேம மாலினி ஆகியோரின் அன்பு மாமனும், ஐதுஷனின் பாசமிகு பேர னும், பத்மாவதி, காலஞ்சென்ற தனஞ்சயன் மற்றும் தயாளன், பத் மினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2013) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வட்டு தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.
தொடர்பு: 077 925 7455


(சி/13494) (10,14)

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராதேவி சிவலோகநாதன்

(உரிமையாளர், யாழ் உணவகம்)



புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 465/5E, காலி வீதி, வெள்ளவத்தையைவசிப்பிடமாகவும் கொண்ட இந்திராதேவி சிவலோகநாதன் கடந்த (29.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலோகநாதனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், பரமேஸ்வரி, சற்குனதேவி, மல்லிகாதேவி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நாகேஸ்வரி கனகபூரணி, காலஞ்சென்ற காசிநாதன், கைலாயநாதன், யோகநாதன், காலஞ்சென்ற அருணகிரி நாதன், விசுவநாதன், காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் மைத்துனியும் , நமசிவாயம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), இராசேந்திரம், மகேந்திரன் (வர்த்தகர்) ஆகியோரின் மைத்துனியும், கமலதாசன் (தபால் அதிபர்), பிருந்தா (ஆசிரியை), மயூரன் (பிரான்ஸ்), சுகந் தினி (லண்டன்), சுகந்தன் (லண்டன்), சுதர்ஜினி (லண்டன்), நிரோசன், நிருசன் ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 31.10.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணியளவில் ஜெயரட்ண மலர்ச் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பொறளை இந்து மயானமத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

465/5E, காலி வீதி,
வெள்ளவத்தை.

(சி/13494) (10,14)

தகவல்: சகோதரிகள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்

## மரண அறிவித்தல்

### ஜெயராஜா ஜெனாட்றீகன்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயராஜா ஜெனாட்றீகன் கடந்த (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் கிறிஸ்ரினா தம்பதியரின் அன்பு மகனும், சந்தியராசா-லில்லிராணி தம்பதியரின் மருமகனும், ஜானகியின் அன்புக் கணவரும், ஜெனாட்ராஜ் (விவசாய பீடம்,யாழ். பல்கலைக்கழகம்), ஜெனாட்சன், கிறிஸ்ரிஜினத் (மாணவி, திருக்குடும்ப கன்னியர் மடம், A/L 2013 வர்த்தகப்பிரிவு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவராஜா ஜமுனா, அமிர்தராஜா காலஞ்சென்ற கமலா, ஜோசப் சூரியகுமாரி, ஜோசப் றோசா புஸ்பம், ஜோசப் மரியராணி காலஞ்சென்ற குமார் மற்றும் இருதயராணி ஆகியோரின் பெறாமகனும், நவரத்தினம் பூமணி, தனபாலசிங்கம் பரமேஸ்வரி, துரை தங்கபூபதி, சிங்கராசா புஸ்பராணி, செல்வம் நாகேஸ், நடராஜா விக்னேஸ், முத்துராசா சோதி மலர், ஜோகராசா (ஜெயம்) மேரி எலிசபெத் ஆகியோரின் மருமகனும், திலீபன், றோகிஸன், பிரதாபன், சீராளன், ஜெனீபா, டெய்ஸி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.10.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணியளவில் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்க ஆராதனைகள் பிற்பகல் 2.00 மணிக்கு அடைக்கல மாதா தேவாலயத்தில் நடைபெற்று, பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

32, கோணாவளை லேன், கொக்குவில்.
021 221 2316

(39658) (10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி குருநாதர் விக்னேஸ்வரி

யாழ்ப்பாணம் உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குருநாதர் விக்னேஸ்வரி நேற்று (30.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னம்மா (தங்கரத்தினம்) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குருநாதரின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான தங்கமலர், திலகவதி, திருநாவுக்கரசு மற்றும் விக்னேஸ்வரன், நடேசலிங்கம், ராணிமலர், மகேந்திரவர்ணன், சற்குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காசிலிங்கம், கணேசமூர்த்தி, ரவீந்திரன், உமாதேவி, இராசநாயகி, மங்கயற்கரசி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், கோகுலராஜன், டுனேஸ் ஆகியோரின் பெரியம்மாவும், ஜெயந்தன், ஜெகன், சாளினி ஆகியோரின் மாமியும், ஹரினியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கரியைகள் இன்று (31.10.2013) வியாழக்கிழமை பி.ப. 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக உரும்பிராய் எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

39658.14.17

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை ஆசைப்பிள்ளை



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை ஆசைப்பிள்ளை நேற்றுமுன்தினம் (29.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-ஆச்சிக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும், சுப்பர்-செல்லம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, சறோஜினிதேவி (அமெரிக்கா), மனோன்மணி (கனடா), தவரத்தினம் (கனடா), மகேந்திரன் (பி. பொ. மு. அலுவலகம் இ.மி. சபை , யாழ்ப்பாணம்), கணேசநாதன் (பொறியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயபதி (ஓய்வுபெற்ற காகித ஆலை உத்தியோகத்தர், வாழைச்சேனை), கதிர்காமநாதன் (பொறி யியலாளர், அமெரிக்கா), ஆனந்தராசா (கனடா), சுகந்தினி (கனடா), மாலா (ஆசிரியை யாழ். சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை), ஜெகதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயரூபன், ஜெயதீபன், ஜெயசீலன், ரோகினி, கஜீவன், கஜீபன், சஞ்சீவன், துசாந்தினி, தக்சினி, யதுரசா, தயாநளினி, திருசிகா, வினோஜா, ஆராணி, பாலகெளிரி, சர்மிளா, வெங்கட் ரமணன், சுதாகர், தர்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சரணா, கிருஷிகன், பவந்தி, சனாளன், ஓவியா, அட்சயா ஆகியோரின் பலாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2013) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப. 10.00மணியளவில் கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
021 205 8802, 021 3216648

(சி/13494) (10,14)

தகவல்: ஆ. மகேந்திரன் (மகன், பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் இ.மி.சபை, யாழ்ப்பாணம்.)

## மரண அறிவித்தல்



### திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தர்மலிங்கம் நேற்று (30.10.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தர்மலிங்கத்தின் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற ஐயாத்துரை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சங்குவேலியைச் சேர்ந்த சின்னத்தம்பி-முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சுபாஸ்கரன் (ராஜீ- சுவிஸ்), கேதீஸ்வரன் (ஈசன் - சுவிஸ்), விஜிதரன் (விஜி- சுவிஸ்), சுகிர்தா ஆகியோரின் அன்புத் தாயும், குகநேசன் (பொறியியலாளர்- பணிப்பாளர் பாடசாலைகள் வேலைப்பகுதி வடக்கு மகாண கல்வி அமைச்சு), கேமேஸ்வரி (சுவிஸ்), சசிவதனி (சுவிஸ்), றஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(சி/13494) (10,14)

தகவல்: சி. தர்மலிங்கம்

# பெண்கள் மீதான வன்புணர்வு: இழிவுநிலை மாறவேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.31

ஒரு பெண் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டால் அதை பெரிதாக்கிப் பாதிக்கப்பட்ட பெண்ணை இழிவுபடுத்தும் நிலைமையே இங்கு காணப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற பெண்கள் விழிப்புணர்வு தொடர்பான குறும்பட மற்றும் அசையும் படவெளியீட்டு விழா திங்கட்கிழமை நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

"ஆண்களுக்கு மேலான சுதந்திரம் ஒரு காலத்தில் பெண்களுக்கும் இருந்தது. பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் தொடர்பில் பெரியளவில் அறியப்படாவிட்டாலும் இராணுவ வன்முறைகள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

எமது சமூகத்தில் ஒரு பெண் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டால் அதைப் பெரிதுபடுத்திப் பாதிக்கப்பட்ட பெண் இழிவுபடுத்தப்படுவதுபோல உலகத்துக்கே தெரியப்படுத்துகின்றனர். வன்புணர்வுச்செய்திகளில் பெண்கள் காட்சிப் பொருளாக மாற்றப்படுவதால்தான் பாதிக்கப்பட்ட பெண்கள் தமக்கு நேர்ந்த வன்முறை களை வெளியே கூற அஞ்சுகின்றனர். பெண்களை மேலும் வலுவூட்டப்பட வேண்டியநிலைமை இங்கு காணப்படுகின்றது. சட்டங்களில் மாற்றத்தை கொண்டுவருவதன் மூலம் எதையும் மாற்றிவிட முடியாது. மக்கள் மனங்களில் மாற்றம் வேண்டும். சமூகத்தில் மாற்றம் வேண்டும். மக்களுக்கு பெண்கள்தான் வன்முறை பற்றிய விழிப்புணர்வை வழங்கக் கிராம மட்டத்தில் இருந்து செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்" -என்றார். (வ-10-14)

# காரைநகர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிறுவர், மாற்றுவலுவுடையோர் நிகழ்வுகள்

காரைநகர், ஒக்.31

காரைநகர் பிரதேச செயலகம் நடத்திய சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.



நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவைகள் திணைக்கள வடமாகாணப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஜான்சி ஆனந்தராசா காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பு.சிறிவிக்னேஸ்வரன், காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவா. தி.மகேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 19 மாணவர்கள் கௌரவிப்பு, கிராம சேவையாளர் பிரிவு ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதியோர் கள் கௌரவிப்பு ஆகியன இடம் பெற்றன.



யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் முதியவர் ஒருவரைக் கௌரவிக்கின்றார்.

வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் தரம் 2 மாணவர்களின் விவாத அரங்கும் நடைபெற்றது. (வ-250)

## வடக்கில் கடமையாற்றும்

# கிழக்கு அலுவலர்களுக்கான போக்குவரத்து இடைநிறுத்தம்

கைதடி, ஒக்.31

வடமாகாண சபையில் கடமையாற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 110 பேர் வடமாகாண சபையின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களின் கீழ் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் அனைவரும் வார இறுதி நாள்களில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வருவதற்கான போக்குவரத்து வசதியை வடமாகாண சபை மேற்கொண்டிருந்ததுடன் அதற்கு குறித்த தொகை பணத்தையும் வழங்கி வந்தது.

இவ்வாறான நிலையில் வடமாகாண சபை புதிதாக இயங்க ஆரம்பித்ததுடன் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி போக்குவரத்துச் சேவையை வடமாகாணப் பிரதம செயலாளர் இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் பிரதம செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதும், அவர் ஆக்கபூர்வமான பதில் எதனையும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ள போக்குவரத்துச் சேவையைத் தொடர்ந்து நடத்துமாறு அல்லாதுவிடின் தமக்கு சொந்த மாகாணத்தில் கடமையாற்றுவதற்கான இடமாற்றத்தை வழங்குமாறும் கோரி வடமாகாண முதலமைச்சருக்கு மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். (வ-400-288)

# இடர் முகாமைத்துவ விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.31

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான இடர் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.

செலமர்வுக்கு உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்களைக் கலந்துகொள்ளு மாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். செயலமர்வில் முகாமைத்துவ செயற்பாட்டில் 'உள்ளூராட்சி நிறுவனங்களின் பங்கு' என்னும் தலைப்பில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், இடர் செயற்றிட்டம் தயாரித்தலும் நடை முறைப்படுத்தலும் என்னும் தலைப்பில் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுரேந்திரனும், அவசர பதிலிறுத்தல் மற்றும் இடர் முகாமைத்துவ இளகல் பொறிமுறை குறித்து மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவியும் உரையாற்றவுள்ளனர். (வ-9)

# கைபேசியை கண்டெடுத்தவர் பணத்தையும் பறிகொடுத்தார்

தென்மராட்சி, ஒக்.31

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் பயணித்த பஸ்ஸில் பயணித்த ஒருவர் தவறவிட்ட கைபேசியை கண்டெடுத்தவர் கைபேசியுடன் பெருமளவு பணத்தையும் பறிகொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் சனியன்று இடம்பெற்றது.

குறித்த பயணியால் தவறவிடப்பட்ட கைபேசியைக் கண்டெடுத்தவருக்கு அந்த கைபேசிக்கு அழைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டுக் குறித்த நபரை சாவகச்சேரியில் நிற்குமாறு கூறப்பட்டது.

அதனையடுத்து அந்த நபர் சாவகச்சேரியில் நின்றபோது அங்கு வந்த குழு ஒன்று கைபேசியைக் கண்டெடுத்தவரைத் தாக்கிவிட்டுக் கை பேசியையும் அவரிடமிருந்த பணத்தையும் பறித்துச் சென்றது.

எனினும் கைபேசியை வைத்திருந்தவர் மலசல கூடத்தில் அநாதரவாகக் காணப்பட்ட நிலையில் அதனைக் கண்டெடுத்ததாகக் கூறிய போது எவரும் அவரது கருத்தை நம்பவில்லை.

குறித்த நபரிடமிருந்து பணத்தைக் கொள் ளையடிக்கும் வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தந்திரச் செயலாக இது இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (வ-9)

# உணவு கையாளும் நிலையங்களில் நவம்பர் முதல் வாழையிலை உணவு

## சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.31

உணவு கையாளும் நிலையங்களில் 'லஞ்சீற்' பாவனையைக் குறைக்கும் முகமாக சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள உணவு கையாளும் நிலையங்களில் மீண்டும் வாழையிலையில் உணவு வழங்கும் செயற்றிட்டத்தை சாவகச்சேரி நகரசபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.



பரீட்சார்த்தமாக நகரப் பகுதியில் உள்ள 3 சைவ உணவகங்களில் வாழையிலை யில் உணவு வழங்கும் முறையை நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

'லஞ்சீற்' பாவனை முறை படிப்படியாக அனைத்து உணவு கையாளும் நிலையங்களிலும் நிறுத்தப்பட்டு வாழை இலை பயன்படுத்தப்படவுள்ளது.

பிளாஸ்ரிக் பொருள்கள் பாவனையைத் தவிர்க்குமாறு மாகாண சுற்றாடல் அமைச்சர் விடுத்த வேண்டுகோளையடுத்து நகரசபையின் சுகாதாரக் குழுவினரால் எடுக்கப்பட்ட தீர்மானப் பிரகாரம் மீண்டும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் தெரிவித்தார். (வ-9)

### சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த சிரமதான விவரங்கள்

தென்மராட்சி, ஒக்.31

சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த சிரமதானத் திட்டத்தின் கீழ் நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிரமதானப் பணிகள் நடைபெறும் இடங்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் முதலாம் திகதி 6 ஆம் வட்டாரப் பகுதியிலும், 7 ஆம் திகதி கற்குளிப் பகுதியிலும் சிரமதானப் பணிகள் இடம்பெறுமெனவும் இந்த சிரமதானத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை அறிவித்துள்ளார். (வ-9)

# வைத்திய அதிகாரிகள் இடமாற்றத்துக்கு நோயாளர்கள் கடும் அதிருப்தி

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்

தென்மராட்சி, ஒக்.31

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலிருந்து வைத்திய அதிகாரிகளை இடமாற்றம் செய்ய சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொள்ளும் முயற்சிக்கு மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.



நோயாளர்களிடம் நன்மதிப்புப் பெற்ற மூன்று வைத்திய அதிகாரிகள் திடீரென தென் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அவர்களுக்கு மாற்றீடாக இருவரையும் தற்காலிக இணைப்பாக ஒருவரையும் சாவகச்சேரிக்கு அனுப்பியிருந்தனர். இந்த மருத்துவ அதிகாரி களும் நோயாளர்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி வருகின்ற வேளையில் இடமாற்றம் பெற்று வந்த இருவரில் ஒருவரைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் தற்காலிக இணைப்பு பெற்று வந்த வைத்தியரை கொழும்புக்கும் இடமாற்றம் செய்ய சுகாதாரத் திணைக்களத் திணர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வருடாந்த இடமாற்றப் பட்டியலில் இடமாற்றம் வழங்கப்பட்ட வைத்திய அதிகாரியொருவர் இன்னமும் கடமையைப் பொறுப்பேற்காத நிலையில் திடீரெனக் கடமையில் உள்ள வைத்திய அதிகாரிகளை இடமாற்றம் செய்வது வைத்தியசாலை நோயாளர்களுக்குச் சிரமங்களை அதிகரிக்கச் செய்யும். எனவே இடமாற்றம் செய்யப்படவுள்ள வைத்திய அதிகாரிகளின் இடமாற்றத்தை இடைநிறுத்துமாறும் இல்லையேல் பதிலீடாக வேறு வைத்திய அதிகாரிகளை இந்த வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யுமாறு சுகாதார திணைக்கள அதிகாரிகளுக்கு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தமது கோரிக்கைக்கு செவிசாய்க்காவிடின் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## ஒரே மேடையில் மன்மோகன், நரேந்திர மோடி



அகமதாபாத், ஒக்.31
குஜராத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒரே மேடையில் பிரதமர் மன்மோகன் சிங்கும், பா.ஜனதா பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியும் பங்கேற்றனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் அமைக்கப்பட்டுள்ள வல்லபாய் பட்டேல் அருங்காட்சியக திறப்பு விழா மற்றும் அவரது சிலை திறப்பு விழாவிலேயே இருவரும் ஒன்றாகப் பங்கேற்றனர்.

தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கும், எதிர்வரும் தேர்தலில் பிரதமர் பதவிக்கான போட்டியில் இருக்கும் மோடியும் வெவ்வேறு மேடைகளில் ஒருவர் கட்சியை மற்றொருவர் விமர்சித்து பேசி வந்தாலும், இந்த நிகழ்ச்சியில் ஒன்றாகப் பங்கேற்ற அரசியல் நாகரிகம் மக்களிடையே வியப்புடன் பார்க்கப்பட்டது.

விழாவில் முதலில் பேசிய மோடி பட்டேலின் பெருமையை பற்றி குறிப்பிட்டார். மேலும் தேசம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டியது அவசியம் என்றும், வன்முறை கலாசாரத்தைக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவர் மேலும் பேசுகையில், பட்டேல் இந்த நாட்டின் முதல் பிரதமராக இருந்திருக்க வேண்டும் என தாம் விரும்பினார் என்றும், அவர் நாட்டின் ஒற்றுமைக்காக அயராது பாடுபட்டவர் என்றும், பட்டேல் நாட்டின் முதல் பிரதமராக தேர்வு செய்யப்பட்டிருந்தால், இந்தியாவின் முகம் கொஞ்சம் வேறாக இருந்திருக்கும் என்றும், இந்தியா முன்னேறி இருந்திருக்கும் என்றும் கூறினார்.

தம்மை வைத்துக்கொண்டே, காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முதல் பிரதமரான நேருவுக்கு பதிலாக, வல்லபாய் பட்டேல் முதல் பிரதமராக தேர்ந் தெடுக்கப் பட்டிருக்க வேண்டும் என மோடி பேசியதற்கு பதிலடி கொடுக்கும்விதமாக, வல்லபாய் பட்டேல் மதச்சார்பற்றவராக திகழ்ந்தவர் என்று மோடியை மறைமுகமாக குத்திக்காட்டினார் மன்மோகன் சிங். (ற)




இந்தியாவில் தற்போது வெங்காயத்தின் விலை கிடு கிடுவென உயர்ந்து வருகின்றது. வெங்காய உற்பத்தி சீராக உள்ளபோதும், அவற்றை விநியோகிப்போர் பதுக்கி வைத்திருத்திருப்பதே விலை உயர்வுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. காங்கிரஸ் அரசு பதுக்குவோர் மீது நடவடிக்கை எடுக்காது அவர்களுக்குச் சார்பாக நடந்து வருகின்றது என்று எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகின்றன. இந்தநிலையில் பா.ஜ.க. முக்கிய தலைவர் விஜய் ஜெட்லி, புதுடில்லி முதலமைச்சர் ஷீலா தீட்சித்தைச் சந்தித்தார். அப்போது தீட்சித்துக்கு விஜய் ஜெட்லி தீபாவளிப் பரிசாக வெங்காயத்தைக் கொடுத்தார். (ற)

## சஞ்சய் தத் மீண்டும் சிறையில்



புனே, ஒக்.31
மும்பை குண்டுவெடிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற நடிகர் சஞ்சய் தத், ஒரு மாத தற்காலிக விடுவிப்புக்கு பின்னர் மீண்டும் எரவாடா சிறையில் அடைக் கப்பட்டார்.


1993ஆம் ஆண்டு மும்பையில் நடந்த தொடர் குண்டு வெடிப்பு வழக்கில், நடிகர் சஞ்சய் தத்திற்கு 5 ஆண்டு காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, மும்பை தடா நீதிமன்றத்தில் சஞ்சய் தத் சரணடைந்தார். அதன் பின்னர் அவர் புனேவில் உள்ள எரவாடா சிறையில் அடைக்கப்பட்டார். இந்தநிலையில், மருத்துவ சிகிச்சைக்காக ஒரு மாதம் தற்காலிகமாக வெளியே விடப்பட்டிருந்த அவர் நேற்று மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார். (ற)

# ஓடும் பஸ்ஸுக்குள் தீ 45 பேர் கருகிச் சாவு

## ஆந்திராவில் பரிதாபம்

மெகபூர், ஒக்.31
பயணிகள் பஸ் ஒன்று திடீரென தீப்பற்றிக் கொண்டதால் அதில் பயணித்த 42 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். இந்தப் பரிதாபச் சம்பவம் இந்தியாவின் ஆந்திராவில் இடம்பெற்றுள்ளது. பெங்களூரில் இருந்து ஹைதராபாத்துக்கு பயணித்த தனியார் பஸ்ஸே விபத்தில் சிக்கியுள்ளது.



"குறித்த பஸ் ஹைதராபாத் - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் அதிகாலை 5.30 மணியளவில் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிரே வேகமாக ஒரு கார் வந்தது. அதன் மீது மோதாமல் இருப்பதற்காக பஸ் சாரதி பஸ்ஸை இடதுபுறமாக திருப்பினார். வேகமாக திருப்பியதில் சாலையோர கல்வெட்டின் மீது பஸ்சின் டீசல் தாங்கி மோதியது. உடனே டீசல் தாங்கி வெடித்துத் தீப்பற்றிக் கொண்டது" என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்."

பஸ்ஸில் தீப்பற்றிக் கொண்டதை அடுத்து பஸ் கட்டுப்பாட்டை இழந்து ஓடத் தொடங்கியது. பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் பயணிகளை பஸ்ஸில் இருந்து குதியுங்கள் என்றுகத்தியவாறு வெளியே குதித்துள்ளனர். ஆனால் அதிகாலை நேரம் பயணிகள் அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தனர். அந்தப் பகுதி மக்கள் ஒன்றுகூடிதீயை அணைப்பதற்கு முன்னர் பஸ் தீக்கிரையானது. பயணிகள் பலர் இருக்கைகளிலேயே கரிக்கட்டையாகக் காணப்பட்டனர்.

மூன்று பயணிகள் மற்றும் சாரதி, நடத்துநர் ஆகியோரே உயிர்தப்பியுள்ளனர். அவர்கள் ஐந்து பேரும் பலத்த தீக்காயங்களுடன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. இந்தச் சம்பவம் ஆந்திராவில் சோக அலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## அமெரிக்கக் கப்பல் விவகாரம்; இருவருக்கு நீதிமன்று பிணை



தூத்துக்குடி, ஒக்.31
அமெரிக்க நாட்டுக் கப்பலுக்கு சட்ட விரோதமாக டீசல் விநியோகம் செய்ததாக கைது செய்யப்பட்ட 5 பேரில் 2 பேருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கடந்த 11 ஆம் திகதி இந்திய கடல் எல்லைக்குள் அமெரிக்காவை சேர்ந்த 'சீமென் கார்ட் ஒகியா' என்ற கப்பல் சட்ட விரோதமாகத் தரித்து நின்றது. அதையடுத்து இந்திய கடலோர காவல் படையினர் அந்த கப்பலை சுற்றி வளைத்து தூத்துக்குடி துறைமுகத்துக்கு கொண்டு வந்தனர். அந்த கப்பலில் இருந்தவர்களிடம் க்யூ பிரிவு அதிகாரிகள் நடத்திய விசாரணையில் அந்த கப்பல் டீசல் நிரப்ப நின்றது என்று தெரிய வந்தது.

அதையடுத்து அந்த கப்பலுக்கு சட்ட விரோதமாக டீசல் வழங்கிய தூத்துக்குடியை சேர்ந்த மரிய ஆண்டன், விஜய், ரஞ்சித்குமார், விஜய், முருகேசன், செல்வம் உள்ளிட்ட 5 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் 5 பேரும் பிணை வழங்குமாறு கோரி தூத்துக்குடி நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்தநிலையில் அந்த பிணை மனுக்கள் நேற்று விசாரணைக்குவந்தது. விசாரணை முடிவில் முருகேசன், செல்வம் ஆகிய இருவருக்கு மட்டும் பிணை வழங்கப்பட்டுள்ளது. (ற)

# ஆதரவு இல்லாது ஊடுருவ முடியாது

## பாகிஸ்தானைச் சாடுகின்றார் இந்திய பாதுகாப்பு அமைச்சர்

புதுடில்லி, ஒக்.31
பாகிஸ்தான் இராணுவத்தின் உதவியின்றி தீவிரவாதிகள் இந்தியாவுக்கு ஊடுருவுவதற்கான சந்தர்ப்பங்களே இல்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் இந்திய மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி.

அண்மைக்காலமாக இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறித் தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனினும் பாகிஸ்தான் அரசு தமக்கும் அந்தத் தாக்குதல் சம்பவங்களுக்கும் தொடர்பில்லை என்று கூறி வருகின்றது. கடந்தவாரம் நடத்தப்பட்ட தாக்குதலில் இந்திய இராணுவத்தின்இளநிலை அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஏ.கே.அந்தோனி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் இராணுவத்தின் உதவியின்றி எவரும் ஊடுருவ முடியாது. எல்லைப் பகுதியில் தற்போது ஊடுருவல்கள் அதிகரித்துள்ளன. அதற்குப் பாகிஸ்தான் உதவி செய்கின்றது. ஊடுருவல்களுக்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுக்கும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# மோடியை கொல்வதற்கு தற்கொலை குண்டுதாரி

## வெளியாகியது அதிர்ச்சித் தகவல்

பாட்னா, ஒக்.31
பாட்னாவில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நரேந்திர மோடி பங்கேற்ற கூட்டத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படவிருந்தது என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இந்தியன் முஜாகிதீன் தீவிரவாதிகள் நடத்திய தொடர் குண்டு வெடிப்பில் ஒரு தீவிரவாதி உள்பட 6 பேர் உயிரிழந்ததுடன், 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கொடுத்துவரும் வாக்குமூலங்களிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நரேந்திர மோடி கூட்டத்தில் பேச வரும்போது அவரை நெருங்கிசென்று தற்கொலைத் தாக்குதல் நடத்தும் விதத்தில் அவர்கள் திட்டங்கள் வகுத்திருந்தனர். ஆனால் திட்டமிட்ட நேரத்துக்கு முன்பே குண்டுகள் வெடித்து விட்டதால் தற்கொலைக் குண்டுதாரி உயிரிழந்துள்ளான். தாரிக் என்று அறியப்படும் அந்த தற்கொலைக் குண்டுதாரி இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் தலைவர் தக்சீன் அக்தரின் உறவினர் என்று கூறப்படுகின்றது.

கைதுசெய்யப்பட்டவர்கள்வழங்கிய தகவல்களின் அடிப்படையில் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 14 பேருக்கு பொலிஸார் வலை வீசி வருகின்றனர். இந்தியன் முஜாகிதீன் அமைப்பின் தலைவர் தக்சீன் அக்தார் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு ரூபா 10 லட்சம் பரிசு கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஜீமெயில், யாகூவுக்கு தடை

## இந்திய மத்திய அரசு அதிரடி

புதுடில்லி, ஒக்.31
அரசு அலுவலகங்களில் பாதுகாக்கப்படும் தரவு சேவைகள் 'சைபர் கிரைம்' குற்றங்களில் சிக்குவதை முற்றிலும் தடை செய்யும் நோக்கில் யாகூ, ஜிமெயில் வலைத்தளங்களின் உபயோகத்தை நிறுத்த இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

எதிர்காலத்தில் தனது உத்தியோகபூர்வ தகவல்களுக்கு கொள்கை தேசிய தகவல் மையத்தின் (நிக்) இணையத்தளத் தொடர்புகளையே பயன்படுத்த இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

அரசு அலுவலகங்கள் இந்த இணையத்தளத் தொடர்பை உபயோகப்படுத்துவதை அரசு கட்டாயமாக்க எண்ணியுள்ளது. அதன்மூலம் 5 முதல் 6 லட்சம் அரசு ஊழியர்கள் 'நிக்' தகவல் தொடர்பை பயன்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு செய்வதன்மூலம், உத்தியோகபூர்வ ஆதாரங்களின்படி அரசின் தகவல் பதிவுகள் பெருமளவில் பாதுகாக்கப்பட முடியும் என்று அரசு கருதுகின்றது.

இந்திய அரசின் கொள்கை என அழைக்கப்படும் இந்தத் திட்டம் கிட்டத்தட்ட தயார் நிலையில் உள்ளது. மற்ற அமைச்சரவைகளின் கருத்துகளும் இதுகுறித்து சேகரிக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் டிசெம்பர் மாத மத்தியிலிருந்து இறுதிக்குள் இந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று மத்திய அரசின் தொழில்நுட்பத் தகவல்துறையின் செயலாளரான சத்யநாராயணா தெரிவித்துள்ளார். (ற)

# பணிந்தது அமெரிக்கா

## உளவுத் திட்டங்கள் மறுஆய்வு செய்யப்படும்: ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவிப்பு



வொஷிங்டன், ஒக்.31
சர்வதேச நாடுகளின் நெருக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்காவின் உளவுத் திட்டங்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளின் தலைவர்கள் உட்பட 35 நாடுகளின் முக்கிய தலைவர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படுகின்றன என்று அண்மையில் ஆதாரங்கள் வெளியாகியிருந்தன. அவற்றை அமெரிக்க தேசிய உளவு நிறுவனத்தின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடன் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

அதையடுத்து அமெரிக்காவுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. அமெரிக்காவின் இந்த உளவு நடவடிக்கைக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்ட சர்வதேச நாடுகள், அது குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று அமெரிக்காவை வலியுறுத்தியிருந்தன.

இந்நிலையிலேயே தமது உளவு நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

'அமெரிக்காவுக்கு வெளியே நடைபெறும் உளவுத் திட்டங்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதை உறுதி செய்கிறேன். உள்நாட்டில் வேவு பார்ப்பது தொடர்பாக கடுமையான சட்டங்கள் இருக்கின்றன. அவை சரியாகப் பின்பற்றப்படும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உளவுத் திட்டங்களை முழுமையாக மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று அமெரிக்க செனட் அவையின் உளவு விவகாரங்களுக்கான குழுவின் தலைவர் டையன் ஃபியன்ஸ்டைனும் வலியுறுத்தியுள்ளார். (ற)

## வெள்ளை மாளிகைக்கு அனைத்தும் தெரியும்

### முக்கிய உளவுதுறை அதிகாரி தகவல்

நியூயோர்க், ஒக்.31
அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் உளவு நடவடிக்கைகள் பற்றிய அனைத்துத் தகவல்களும் அமெரிக்க ஜனாதிபதி மாளிகையான வெள்ளி மாளிகையில் உள்ள முக்கிய அதிகாரிகளுக்குத் தெரியும் என்று 'லொஸ் ஏஞ்சல்ஸ்' நாளிதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

பெயர் குறிப்பிடாத அமெரிக்க உளவுத்துறை அதிகாரியை மேற்கோள் காட்டி 'லொஸ் ஏஞ்சல்ஸ்' நாளிதழ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்தப் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவலில், "பெயர் குறிப்பிட விரும்பாத உளவுத்துறை அதிகாரி இந்தத் தகவலைக் கூறியுள்ளார். எந்த நாட்டுத் தலைவரை கண்காணிக்க வேண்டும். எத்தனை நாள்களுக்கு கண்காணிக்க வேண்டும் என்ற உத்தரவு வெள்ளை மாளிகையில் இருந்து வரும்.

கண்காணிக்கப்படும் தலைவரைப் பற்றிய செய்திகள், தினமும் வெள்ளை மாளிகையில் அதற்கென குறிப்பிட்ட அதிகாரியிடம் தரப்படும். கண்காணிக்கப்படும் நாட்டுக்கான அமெரிக்க தூதரும் இரு மூத்த வெள்ளை மாளிகை அதிகாரிகளும் தரப்படும் தகவல்களை வடிகட்டுவர். தேவையான மற்றும் பரபரப்பான தகவல்கள் உடனுக்குடன் சொல்லப்படும். அதனால் எதுவும் தெரியாமல் செய்யவில்லை. இப்படி ஜனாதிபதி மாளிகைக்கு தெரியாமல் நாங்கள் செய்தோம் என்று சொல்வது சரியல்ல. இது உளவுத்துறையை சங்கடப்படுத்தும் செயல்- என்று கூறினார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



## மண்டேலாவை கொல்ல முயன்றோருக்கு சிறை

ஜொகன்னர்ஸ்பேர்க், ஒக்.31
தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைக் கொலை செய்ய முயன்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட வெள்ளையர் விவசாயப் படையைச் சேர்ந்தவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1990மும் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் தென்னாபிரிக்க முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலாவின் ஆட்சியைகவிழ்க்கவும், அவரை கொல்லவும் சதி செய்தனர் என்றும் வெள்ளையர் விவசாய படையை சேர்ந்த 20 பேர் மீது ப்ரிட்டோரியா நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வந்தது.

கடந்த 10 ஆண்டுகளாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் இருவருக்கு நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஜோகனஸ்பெர்க் நகரில் தொடர் வெடிகுண்டு தாக்குதல், ஜனாபதிதியைக் கொல்லவும் ஆட்சியை கவிழ்க்கவும் சதி செய்தமை ஆகிய குற்றங்களுக்காக நான்கு பேருக்கு 35 ஆண்டுகள் கால சிறை தண்டனையும், மேலும் ஒருவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், இன்னொருவருக்கு 12 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் இருவர் ஏற்கனவே சிறையில் உயிரிழந்துள்ள நிலையில், 10 ஆண்டுகள் மற்றும் அதற்கு குறைவான தண்டனை வழங்கப்பட்டவர்கள் அனைவரையும் ஏற்கனவே விசாரணைக் கைதிகளாக சிறையில் தண்டனையை அனுபவித்து விட்டதால் விடுதலை செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (ற)



பங்களாதேஷில் 5 ஆவது நாளாகவும் தொடரும் வன்முறைகளில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். அடுத்த ஆண்டு பங்களாதேஷில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இடைக்கால அரசு ஒன்றை அமைக்குமாறு கோரி எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆர்ப்பாட்டங்கள் வன்முறையாக மாறியுள்ள நிலையில், போராட்டத்தில் ஈடுபடுவோர் வாகனங்கள் மற்றும் கடைகளுக்கு தீ வைத்து வருகின்றனர். (ற)

## போலியோ அபாயத்தில் சிரியக் குழந்தைகள்

### உலக சுகாதார அமைப்பு கவலை



நியூயோர்க், ஒக்.31
சிரியாவில் போலியோ நோய் வேகமாகக் பரவி வருகின்றது என்று உலக சுகாதார அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த 14 ஆண்டுகளில் முதன்முறையாக 10 குழந்தைகளுக்கு போலியோ பாதிப்பு உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 12 குழந்தைகளுக்கு போலியோவுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

டெய்ர் எஸ்ஸார் மாகாணத்தை சேர்ந்த 1 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தாக்கம் ஏற்படுவதற்கான அபாயம் காணப்படுகின்றது.

2011ஆம் ஆண்டு சிரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாவதற்கு முன்னர் 95 சதவீதமான குழந்தைகளுக்கு போலியோ நோய் எதிர்ப்பு மருந்து வழங்கப்பட்டது. தற்போது உள்நாட்டு போர் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் 5 லட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படவில்லை. அதனாலேயே போலியோ ஏற்படுவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன." என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## கியூபா மீதான தடையை அமெ. நீக்க வேண்டும்

### ஐ.நா. சபையில் தீர்மானம்



நியூயோர்க், ஒக்.31
கடந்த அரை நூற்றாண்டு காலமாக கியூபாவின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் நிதி மீது அமெரிக்கா மேற்கொண்டு வரும் தடையை நீக்க வேண்டும் என்று ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, கடந்த 22 ஆண்டுகளாக ஐ.நா. சபை இதேதீர்மானத்தை நிறைவேற்றி வருகின்றது. இதற்கு முன்னதாக 21 முறை இதே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் அமெரிக்கா அவற்றைசட்டைசெய்யாதுகியூபா மீதான தடையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இதுகுறித்துக் கண்டனம் வெளியிட்டுள்ள சீனா, அமெரிக்கா ஐ.நா.சபையின் தீர்மானங்களை மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளது.(ற)

## தண்ணீர் கிடைக்காதால் உயிரிழந்த அகதிகள்

### சஹாரா பாலைவனத்தில் பரிதாபம்

கைபர், ஒக்.31
நைஜீரியாவை சேர்ந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 40 பேர் குடிக்க தண்ணீர் கிடைக்காததால் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ஆபிரிக்க நாடான சோமாலியா மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகளில் இருந்து ஏராளமான மக்கள் பிழைப்புத் தேடி கடல் வழியாகவும், வாகனங்களிலும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.

இந்தநிலையில் நைஜீரியாவை சேர்ந்த பெண்கள், சிறுவர்கள் உள்பட 60 பேர் கடந்த சில நாள்களுக்கு முன்பு 2 டிரக்கில் அல்ஜீரியாவின் டமாரன்ராசெட் நகருக்கு அகதிகளாகச் சென்றனர்.

சகாரா பாலைவனத்தை கடந்து செல்லும் போது நைஜர் வட பகுதியான அர்லிட் நகரத்தில் இருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் டிரக் ஒன்று பழுதடைந்தது.

இதனால் பாலைவனத்தில் சிக்கிய அகதிகளால் மணல் பரப்பில் நீண்ட தூரம் நடந்து செல்ல முடியவில்லை. தண்ணீர் கூட கிடைக்காமல் நாக்கு வறண்டு பெண்கள், சிறுவர்கள் உட்பட 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேபோன்றுமுன்னரும்பாலைவனத்தில் சிக்கி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

சோமாலியா மற்றும் எரிட்ரியா நாட் டில் இருந்து ஏராளமான பொது மக்கள் வரட்சி காரணமாக ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச் செல்கின்றனர்

## சோமாலியாவில் ஆளில்லா விமானத் தாக்குதல்

நியூயோர்க், ஒக்.31
சோமாலியாவில் அமெரிக்க ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் அல் - ஷபாப் தீவிரவாத இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தாக்குதலில் உயிரிழந்தவர் இப்ராகிம் அலி எனும் அல் ஷபாப் அமைப்பின் முக்கிய வெடிகுண்டு நிபுணர் என்று கூறப்படுகின்றது.

சோமாலியாவில் செயற்படும் அல் ஷபாப் தீவிரவாத இயக்கம் அண்மையில் நைரோபியில் வணிக வளாகத்தில் தாக்குதல் நடத்தியது. அதில் 67 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினார்.

அதையடுத்து அவர்களுக்கு எதிரான நடவடிக்கையை சோமாலிய மற்றும் அமெரிக்க இராணுவம் என்பன தீவிரப் படுத்தியுள்ளன.(ற)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் மாவிட்டபுரம் (J/231) கிராம செயலகம் அமைக்க காணியை நன்கொடையாக வழங்கிய

**சபாரத்தினம் குகபாலன்**

அவர்கள் 27.10.2013ஆம் திகதி காலமாகிய செய்தியைக் கேட்டு துயருற்றி ருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பது டன் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (சி/13482) (7.6)

கிராம அலுவலர் மற்றும் கிராம மக்கள் - மாவிட்டபுரம். (J/231)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
சி.ஞானசேகரம் அவர்களின் அன்பு மாமனாரும், எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கஜந்தா திலீபன்
அவர்களின் பெரிய தந்தையாருமாகிய

**தம்பியப்பா தில்லைநாதன்**

அவர்கள் 29.10.2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந் ததையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம் (39597)(6.4)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## அத்துமீறி தேங்காய் பிடுங்கியவர் பிணையில்

தென்மராட்சி, ஒக்.31

வரணிப்பகுதியில்ஆள் களில்லாத காணிக் குள் அத்துமீறி நுழைந்து தேங் காய் பிடுங்கிய துன் னாலை வாசியை கொடிகாமம் பொலி ஸார் கையும் மெய்யு மாகப் பிடித்துள் ளனர்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதி மன்றில் அவரை முற்படுத்தியபோது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல நீதிமன்றம் அனு மதித்தது.

(வ-9)

## மரண அறிவித்தல்

**நன்னித்தம்பி காசிப்பிள்ளை**



கலைவாணி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப் பிடமாகவும், கைலாயர் வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **நன்னித்தம்பி காசிப்பிள்ளை** நேற்று (30.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை பூரணத்தின் அன்புக் கணவரும், ராகினிதேவி, சிறீவரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாஸ், சாந்தினிதேவி ஆகியோரின் மாமனாரும் வினோதன், துர்சிகா, வித்தகன், சாரங்கன், பிரியங்கன், பிரியங்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காக மல்லாகம் நரி இட்டான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கைலாயர் வளவு,
மல்லாகம். (39599) (7.6)
T.P : 021 491 3153

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கலாசார அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் சிவரூபு சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்தம்பி சிவசம்பு**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தரும்
ஊழியர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம்,
வலிகாமம் கிழக்கு, கோப்பாய். (சி/13483) (45.6)

## மரண அறிவித்தல்

**அப்பாக்குட்டி ஜெயபாலசிங்கம்**

(முன்னாள் முகாமையாளர் ஸ்ரீ பாலசெல்வ விநாயக மூர்த்தி கோயில், கப்பித்தாவத்தை கொழும்பு-10)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மாளிகாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட காலஞ் சென்ற அப்பாக்குட்டி ஆச்சிப்பிள்ளையின் கனிஷ்ட புதல்வன் ஜெயபாலசிங்கம் 28.10.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நேசமலரின் கணவரும், காலஞ்சென்ற கந் தையா, கனகம்மா, இரத்தினம்மா, காலஞ்சென்றவர் களான இராசையா, சுபத்திரா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நவமணி, கிருஷ்ணசாமி, கனகரட்ணம் மற்றும் அன்னலட்சுமி, சின்னத்துரை ஆகியோரின் மைத்துனரும், ஜெயரஞ்சன், ஜெயசீலன், ஜெய சாந்தன், ஜெயகாந்தன், ஜெயபாரதி, ஜெயகாந்தி, ஜெயகௌரி ஆகியோரின் தந்தையும், ஸ்ரீவதனி, ஸ்ரீதேவி, அன்பரசி, தமிழ்ச்செல்வி, காசிக்குமரன், குணதீபன், பார்தீபன் ஆகியோரின் மாமனாரும் மதுவதி, ஸ்ரீகணேஷன், சிரான், ச்பீரா, கலைவாணி, காயத்திரி, கம்சிகன், கவிதா, சுவேதன், நமிர்தா, அபிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.10.2013) வியாழக்கிழமை நண்பகல்12.00 மணிக்கு நடைபெற்று ஒருமணிக்கு கனகத்தை பொது மயானத் தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
பார்தீபன் (மருமகன்)

B/18, G/4,
மாளிகாவத்தை தொடர் மாடி, கொழும்பு-10 (சி/13481)(6.4)

# மரண அறிவித்தல்

# முருகேசு நாகராசா



நயினாதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.699, கல் மடுநகர், இராமநாதபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது 81/11 A வள்ளுவர் வீதி, கூமாங்குளத்தில் வசித்து வந்தவருமான **முருகேசு நாகராசா** 29.10.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சவுந்தரம் தம் பதியரின் அன்பு மருமகனும், மகாலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற நவரத்தினம் மற்றும் சுந்தரம், பூரணம், கனகலிங்கம், சரஸ்வதி, கமலாம்பிகை, மகாலிங்கம் (கனடா)ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி, காலஞ்சென்றவர் களான மனோன்மணி, மகாலிங்கம் மற்றும் பரமேஸ்வரி, மங்கையர்க்கரசி (கனடா), பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சாந்தலிங்கம் மற்றும் மருதலிங்கம் (கனடா), சூரியநாதன் (கனடா), ஆறுமுகநாதன் (கனடா), கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கேதீஸ்வரன் (கனடா), தவமலர் (இலங்கை) காலஞ்சென்ற உதயமலர் மற்றும் அன்பழகன் (கனடா), சுகந்தி மலர் (இலங்கை), வசந்திமலர் (லண்டன்), மதியழகன் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவதனா (கனடா), பகீரதன் (இலங்கை), சிவகுமார் (பிரான்ஸ்), ராகினி (கனடா), சஞ்சீவன் (கனடா), கண்ணன் (லண்டன்), சந்திரவதனி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், புரார்த்தன், அஸ்வின், பூசனா, கர்சிகா (கனடா), சயன், மதுசன், மிதுசன், சரணி (இலங்கை), தீபன், சிந்து, பிரியந்தன் (பிரான்ஸ்), அர்ச்சயா, சரணியா (கனடா), டினோ, யது(இலங்கை), தரனிகா, தியானா (லண்டன்), விசாகன், விதுசன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

81/11A, கூமாங்குளம்,
வவுனியா. (29831)(12.3)
077 951 2986/024 490 1226/024 205 1551

## உருத்திரபுரம் ம.வியில் சர்வதேச நிகழ்வுகள்



சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வுகள் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றன. பாடசாலை அதிபர் திருமதி மீ.இதயசிவதாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காலையில் சிறுவர்தினமும், நண்பகல் 12 மணியளவில் முதியோர் தினமும் அனுஷ்க்கப்பட்டன. இதன்போது பாடசாலையின் பிரதான மண்டபத்துக்கு உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த முப்பத்தைந்து முதியவர்கள் வரவழைக்கப்பட்டு மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.மதுரைநாயகம், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க)

# உவர்த்தன்மையாகும் கிராமங்களை மீட்டெடுக்க வேகமான நடவடிக்கை

### கிளிநொச்சி நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன், ஒக்.31

அண்மைக்காலமாக உவர்த்தன்மையாக மாறிவரும் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் பகுதிகளில் உவர்த்தன்மையில் இருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் வேகமாக முன்னெடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடந்த 28 ஆம் திகதி விவசாயக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் பகுதிகளிலுள்ள நீர் நிலைகள் உவர்த் தன்மையாக மாறிவருவதாகவும் இதனால் தம்முடைய விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் குறித்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளிடம் முறையிட்டனர்.

இதற்குப் பதிலளித்த கிளிநொச்சி நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர் என்.சுதாகரன் தெரிவித்ததாவது:-

பூநகரியின் வடக்கு பகுதியிலும் இது போன்ற உவர்த்தன்மையை கட்டுப்படுத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் பூநகரியின் தெற்குப் பகுதியில் இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையாலேயே அந்தப் பகுதியை அண்டியுள்ள வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் போன்ற கிராமங்கள் உவர்த்தன்மையாக மாறும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன. எனவே இதனை தடுத்து அவற்றை உவர்த்தன்மையாகும் ஆபத்திலிருந்து மீட்டெடுக்க வேகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் -என்றார். (க-6)

## கண்டாவளை கால்நடைகளால் பச்சிலைப்பள்ளியில் பயிரழிவுகள்

அக்கராயன், ஒக்.31

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் கண்டாவளையைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான கால்நடைகள் பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாக அந்தப் பகுதி விவசாயிகள் கிளிநொச்சி அரச அதிபரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இந்தக் கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பச்சிலைப்பள்ளியின் மாசார், புலோப்பளை, தருமக்கேணி ஆகிய பகுதிகளில் ஒவ்வொரு காலபோக நெற்செய்கையின் போதும் கால் நடைகள் பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-18)



தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மல்லாவி நகரப் பகுதியில் உள்ள பிரதான வீதியில் நடைபாதை வியாபாரம் அமோகமாக இடம்பெற்று வருகின்றது. (க-435)

### புழுதி விதைப்பில் பாதிப்பு

அக்கராயன், ஒக்.31

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் புழுதி நெல் விதைப்பை மேற்கொண்ட விவசாயிகள் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

நீண்ட நாள்களுக்கு முன்னர் புழுதி விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகள் விதைப்புச் செய்யப்பட்ட நெல் மழை வீழ்ச்சி தாமதமாவதன் காரணமாக பழுதடையும் நிலை தோன்றியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (க-18)

## கரும்பைச் சர்க்கரையாக மாற்றும் நடமாடும் ஆலை

அக்கராயன்,ஒக்.31

அக்கராயன் பிரதேசத்தில் விளையும் கரும்பை அறுவடை செய்து சர்க்கரையாக மாற்றுவதற்கு நடமாடும் கரும்பு ஆலையொன்று செயற்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், அக்கராயன், ஆனைவிழுந்தான் ஆகிய பகுதிகளில் விளைந்துள்ள கரும்பை அறுவடை செய்து சர்க்கரையாக மாற்றும் பொருட்டே இந்த நடமாடும் கரும்பு ஆலை செயற்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கந்தபுரத்தில் இயங்கிய கரும்பு ஆலை போர் காரணமாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் தற்போது கரும்புச் செய்கையில் ஈடுபடுபவர்களின் நன்மை கருதி கரும்பு ஆலையொன்று புதிதாக ஸ்கந்தபுரத்தில் அமைக்கப்படவுள்ளது.

முன்னைய கரும்பு ஆலைக்குரிய 200 ஏக்கர் காணியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## தொழிற் பயிற்சி பெற்றோருக்கு வழங்கப்பட்டன சான்றிதழ்கள்

கிளிநொச்சி, ஒக்.31

கிளிநொச்சியில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தேசிய தொழிற்தகைமைக்கான கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட நிலையத்தில் தேசிய தொழிற் தகைமைக்கான கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கிளிநொச்சி தொழிற் பயிற்சி அதிகாரசபையின் பொறுப்பதிகாரியான உ.தினேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடமாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன், வடமாகாண தொழிற்பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் தையல் பயிற்சியினை நிறைவு செய்த 20 மாணவர்களுக்கும், கணினி கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த 147 மாணவர்களுக்கும், அழகுக் கலையினை பயின்ற 30 மாணவர்களுக்கும், தச்சுத் தொழிற் கல்வியினைப் பூர்த்தி செய்த 10 மாணவர்களுக்கும், நீர்க் குழாய் பொருத்தும் பயிற்சியினை நிறைவு செய்த 8 மாணவர்களுக்கும், கணினி திருத்தும் பயிற்சியினை நிறைவு செய்த 10 மாணவர்களுக்கும், வீட்டு மின் இணைப்பு பயிற்சியினை நிறைவு செய்த 20 மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (க-6)

### முகமாலை மக்களுக்கு மலசலகூடங்கள்

கிளிநொச்சி முகமாலை பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் சுகாதார நலன்களைக் கருத்தில் கொண்டு 'சோஆ' நிறுவனம், 35 நிரந்தர மலசலகூடங்களை அமைத்து வழங்கியுள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு முழுமையாக இடம்பெயர்ந்த பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை வடக்குப் பகுதியைச் சேர்ந்த 100 குடும்பங்கள் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்டன.

இதனையடுத்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கான கட்டுமானங்களை அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பன மேற்கொண்டு வருகின்றன.

'சோஆ' நிறுவனம் இந் தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 85 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளையும், 35 குடும்பங்களுக்கு நிரந்தர மலசலகூடங்களை அமைத்து வழங்கியுள்ளது. (க-6)

## பொதுமக்கள் பாராட்டுமளவுக்கு அர்ப்பணிப்போடு சேவை செய்க!

### வவுனியா வடக்கு பிரதேச செயலர்

நாம் தற்போது மக்களுக்குத் தேவையான சேவையைத் திறம்பட செய்து வந்தாலும் மேலும் எம்மை வளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. நாம் சிறப்பாகச் சேவையை செய்கின்றோம் என மக்களே கூற வேண்டும் என வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான மனப்பாங்கு விருத்தி தொடர்பான செயலமர்வு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்:

'எமது பிரதேசம் முழுமையாக மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசமாக உள்ளது. இங்குள்ள மக்களுக்கு வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத் தர்கள் சிறந்த சேவையை வழங்கினார்கள் என மக்கள் மத்தியில் இருந்து கருத்து வெளிவரவேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

எனவே சிறந்த சேவையை வழங்குகின்ற மனநிலைக்கு எமது உத்தியோகத்தர்கள் மாற்றமடைய வேண்டும். எமது உத்தியோகத்தர்கள் எப்போதும் மக்களின் காலடியில் சென்று சேவை செய்யவும் அவர்களின் தேவையை நிறைவேற்றிக் கொடுக்கவும் தயாராக இருத்தல் வேண்டும்.

*எமது பிரதேசம் முழுமையாக மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசமாக உள்ளது.*

வீட்டிலும் பிரச்சினைகள் இருக்கலாம், அலுவலகத்திலும் பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் அனைத்தையும் சமாந்தரமான முறையில் கொண்டு செல்லக்கூடிய மன நிலையை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

உயர்வுக்கான வாய்ப்புக்கள் எப்போதும் வருவதில்லை. அவ்வாறு வரும் வாய்ப்புக்களை நாம் பயன்படுத்தும் போதே வெற்றியாளர்களாக மாறுவோம் என மேலும் தெரிவித்தார். (க-400)

## அனுமதி பெற்றே மரம் தறிப்பு

### பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் விளக்கம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் தறிக்கப்பட்ட இரண்டு மரங்களுக்கும் கரைச்சிப் பிரதேச செயலரின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் புலம் பெயர்ந்த பழைய மாணவன் ஒருவரின் உதவியுடன் பாடசாலையைச் சுற்றிவர மதில் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு இடையூறாகக் காணப்பட்ட இரண்டு மரங்கள் பிரதேச செயலரின் அனுமதியைப் பெற்றுத் தறிக்கப்பட்டதாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வன்னேரிக்குளம் கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

### குஞ்சுக்குளத்தில் ஆமணக்குச் செய்கை

கிளிநொச்சி வன்னேரிக்குளத்தின் உவரடைந்த குஞ்சுக்குளத்தின் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் ஆமணக்குப் போன்ற பயிர்களைப் பயிரிட முடியுமாவென கிளிநொச்சி அரச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு ஆராய்ந்து வருகின்றது.

குஞ்சுக்குளம் கிராமம் முழுமையாக உவரடைந்ததால் இங்கு வாழ்ந்த 45 குடும்பங்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளன. இதனால் இந்தப் பகுதியில் உவர் நிலத்தில் பயிரிடக்கூடிய பயிர்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. இதேவேளை- உவர்ப் பாதிப்புக்களால் பாதிக்கப்பட்ட மக்கள் வயல் நிலம் வேண்டும் என்றும், அரச நிவாரணம் வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

### வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியாவில் உள்ள சகல பாடசாலைகளையும் சேர்ந்த பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இன்றைய காலகட்டத்தில் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் இடர்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி வவுனியா இந்திரன் ஹோட்டலில் நடைபெற்றன. கலந்துரையாடலில் போதை மருந்து பாவித்தல், சிறுவர் துஷ்பிரயோகம் ஆகிய விடயங்கள் தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டது. (க-421)

## பிரதி அதிபர் மீது தாக்குதல்; மாணவர்கள் போராட்டம்



கல்முனை, ஒக்.31

கல்முனை ஸாஹிரா கல்லூரியின் மாணவர்கள் நேற்று புதன்கிழமை கல்வி நடவடிக்கையைப் புறக்கணித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதிக்கல்விப் பணிப்பாளரால் கல்லூரியின் பிரதி அதிபர் தாக்கப்பட்டதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தால் பாடசாலையின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் ஊர்வலமாக கல்லூரி வளாகத்தில் இருந்து கல்முனை பிரதான வீதியூடாக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலை வரை சென்று மீண்டும் பாடசாலைக்குத் திரும்பியுள்ளனர்.

இதேவேளை, பிரதி அதிபர் மீது தாக்குதல் மேற் கொண்ட பிரதிக் கல்வி பணிப்பாளர் மற்றும் அவரது சகோதரரான ஆசிரியர் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் ஹாசீம், பாடசாலைக்குச் சென்று கள நிலைவரங்களை ஆராய்ந்துள்ளார். (ச-10)

## மேய்ச்சல் தரைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நாளை விசேட கூட்டம்

### கிழக்கு முதலமைச்சர் தலைமையில்

மட்டக்களப்பு, ஒக்.31

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மேய்ச்சல் தரைப் பிரச்சினைகளைத் தீர்க்க நாளை வெள்ளிக்கிழமை விசேட கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அத்துமீறி விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதனைத் தடுத்து இந்த மாவட்டத்தின் விவசாயப் பண்ணையாளர்கள் பாதிக்கப்படுவதனை நிறுத்த வேண்டும் என்று மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணத்தின் பிரேரணை விவாதத்தின் போதே இந்த முடிவை முதலமைச்சர் வழங்கினார்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாண சபை அமர்வில் மிகப் பெரிய பிரச்சினையாக மேய்ச்சல் தரை விவகாரம் சூடுபிடித்திருந்தது. இந்தப் பிரேரணை கடந்த அமர்வின் போது முன்வைக்கப்பட்டிருந்த போதும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்த விடயம் குறித்து கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்ததாவது:-

மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில் தீர்வுகாணும் வகையில் வர்த்தமானிப் பிரகடனத்துக்கென தீர்மானிக்கப்பட்ட, 2,7500 ஹெக்ரேயர் நிலப்பரப்பில், குறைந்தளவான நிலப்பரப்பே மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது -என்றார்.

# இலங்கையிலும் உயர்கல்வி கற்பதற்கு இனிமேல் வாய்ப்பு

### 20 வீதமானோருக்கு புலமைப்பரிசில் என்கிறார் உயர்கல்வி அமைச்சர்



இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களுக்காகவே உள்நாட்டில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களையும் தனியார் பல்கலைக்கழகங்களையும் நிர்மாணித்து அவர்களுக்கு உயர்கல்விக்கான வாய்ப்பை உள்நாட்டில் பெற்றுக் கொடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

அவ்வாறு அனுமதி வழங்கப்படுபவர்களில் 20 வீதமானோருக்கு இலவசமாகக் கல்வி கற்பதற்கான புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் கற்பித்தல் அலகுக்கான கட்டடத் தொகுதி அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகங்களுக்குள் உள் வாங்கப்படாத இலங்கை மாணவர் கள் கல்வி கற்கவே தனியார், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றன.

வருடாவருடம் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு உயர் கல்விக்குத் தெரிவாகும் 1 லட்சத்து 50ஆயிரம் வரையானோரில் 26, 000 பேரே பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங் கப்படுகின்றனர்.

ஏனையவர்கள் உயர்கல்வியை கற்க வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள், தனி யார் பல்கலைக்கழகங்கள் துணை புரிகின்றன. எனவே இவ்வாறான உயர் கல்வி நிறுவனங்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் இருந்தமை போன்று பல்கலைக்கழகங்கள் இப்போது இல்லை. பல்க லைக்கழகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அதிகளவான மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து வருடாந்தம் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயர் கல்விக்காக வெளிநாடு செல்கின்றனர் என்று யுனெஸ்கோ மேற்கொண்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுபவர்களின் வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 26 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ உயர்தரத்தில் மருத்துவத்தில் கற்று '3 ஏ' பெறுபேறு பெற்றும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத மாணவர்கள் பாகிஸ்தான், பூட்டான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு உயர்கல்வியைத் தொடர செல்கின்றனர்.

குறித்த நாடுகளை இலங்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பின் தங்கிய நாடுகளாக காணப்படுகின்றன. -என்றார். (ச)

## கொழும்பு -காத்தான்குடி

## குறைந்த கட்டணத்தில் இ.போ.ச. பஸ் சேவை



மட்டக்களப்பு, ஒக்.31

இலங்கை போக்குவரத்து சபையின் கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து சாதாரண கட்டணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற கொழும்பு- காத்தான்குடி பஸ் சேவையை மக்கள் அதிகம் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு இலங்கைப் போக்குவரத்து சபையின் கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலைய முகாமையாளர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து காத்தான்குடிக்கும் காத்தான்குடியில் இருந்து கொழும்புக்கும் சாதாரண கட்டணமாக 364 ரூபா மட்டுமே அறவிடப் படுகின்றது என்று அவர் கூறினார்.

இந்தப் பஸ் சேவை தினமும் காலை 6.50 மணிக்கு காத்தான்குடி பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து புறப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு மத்திய பஸ்தரிப்பு நிலையத்தை சென்றடைகிறது.

கொழும்பு மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து பிற்பகல் 2 மணிக்கு புறப்பட்டு இரவு 10 மணிக்கு காத்தான்குடி பஸ் தரிப்பு நிலையத்தை வந்தடைகிறது என்று அவர் கூறினார்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு, காத்தான்குடிக்கு வரும் மக்களின் நலன் கருதியே சாதாரண கட்டணத்தில் இந்தப் பஸ் சேவை இடம்பெற்று வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

## வீதிப் புனரமைப்பில்லை; மக்கள் பெரும் அவலம்



மட்டக்களப்பு, பெரிய கல்லாறு 2 ஆம் பிரிவு மத்திய வீதியின் அவலம் குறித்து பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல வருட காலமாக இந்த வீதி புனரமைக்கப்படாது பாராமுகமாக விடப்பட்டுள்ளது.

இந்த வீதியில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் சிரமங்களை எதிர் கொள்ள நேரிடுகிறது.

சுமார் 320 மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியில் பெரு மழை பெய்யும் காலங்களில் 3 அடிக்கு மேல் வெள்ளம் பாய்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த வீதியின் அவலம் குறித்து பெரிய கல்லாறு மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது. கொங்கிறீட் வீதியாக இந்த வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-30)

## மனித உரிமைகள் குறித்து அறிவூட்டும் செயலமர்வு

அம்பாறை, ஒக்.31

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வு ஒன்றை நடத்தவுள்ளது. இந்தச் செயலமர்வு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் அனு சரணையுடன் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் அம்பாறை ஆரியவான் வீதியில் நடைபெறவுள்ளது. (ச-30)

## மழையைக் கண்டதும் நெற்செய்கை



அம்பாறை, ஒக்.31

நாட்டில் தற்போது மழை பெய்யத் தொடங்கியதையடுத்து மேட்டு நில பயிர்ச் செய்கை, பெரும்போக நெற் செய்கை ஆகியவற்றுக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, படுவாகரைப் பகுதி மேட்டு நிலப் பயிர் செய்கைகளுக்கும் நெற் செய்கைகளுக்கும் பெயர்போன பிரதேசமாகும்.

இந்தப் பிரதேச விவசாயிகள் வயல்கள் மற்றும் மேட்டு நிலங்களை துப்புரவு செய்து தமது ஜீவனோபாயத் தொழிலான விவசாயத்தை மேற்கொள்வதற்குரிய ஆரம்பகட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# வடக்கிலிருந்து படையினரை ஒருபோதும் விலக்க முடியாது

## ஜனாதிபதி மஹிந்த திட்டவட்டம்



எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வடக்கில் இருந்து படையினரோ அவர்களின் முகாம்களோ ஒருபோதும் விலக்கிக் கொள்ளப்படமாட்டாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் 23ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு பாதுகாப்புப் படைகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது.

வடக்கில் இருந்து படையினரை வெளியேற்ற முன்வைக்கப்படும் யோசனை நடைமுறைச்சாத்தியமற்றது. இந்த யோசனைகள் எங்கிருந்து வருகின்றன என்று நாம் ஒன்றுக்கு இரண்டு முறை சிந்திக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கிலும், வெளிநாடுகளிலும் உள்ள மக்கள் விடுதலைப் புலிகளால் மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிமுறையாகவே, வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றக் கோரும் யோசனைகள் அரசுக்கு முன்வைக்கப் பட்டுள்ளன. ஆனால், இராணுவ முகாம்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளன. அம்பாந்தோட்டையில் உள்ளன. மொனறாகலயிலும் இருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் உள்ள படையினரின் பிரசன்னத்தை அகற்றுவதன் மூலம், தமிழ்மக்களின் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்க முடியும்?

நாட்டைப் பிரிக்க முப்பது ஆண்டுகளாக முயற்சித்த தீவிரவாத தலைவர்கள், இப்போது அதற்கு ஜனநாயக வழிமுறைகளை கையில் எடுத்துள்ளனர்.

தமிழ்மக்கள் இந்தச் சூழ்நிலையை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று பாதுகாப்புப் படைகளில், சிவில் பாதுகாப்பு படையில், காவல்துறையில் அதிகளவான வடக்கு கிழக்கு மக்கள் எந்த சிக்கலுமின்றி, இணைந்து கொண்டுள்ளனர்.

இப்போது வடக்கு கிழக்கில் அமைதிய நிலவுகிறது. தேர்தல்களும் நடத்தப்பட்டுள்ளன.

வடக்கில் நடந்த தேர்தலைக் கண்காணிக்க வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள், பாதுகாப்புப் படையினர் ஒழுக்கத்துடன் பணியாற்றுவதாக தெரிவித்துள்ளனர் - என்றார்.

## விபத்தில் ஒருவர் பலி

அம்பாந்தோட்டை மிரிச்சவில சந்திக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தின்போது படுகாயமடைந்த நபர் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 12.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்குருஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதான ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

## இரத்ததான முகாம்

கொழும்பு, ஒக்.31

பேருவளை மருதானை மஸ்ஜிதுல் புர்கான் நிர்வாகத்தினரின் முயற்சியால் இன்மா நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 3.30 மணிவரை மருதானை அல் - பாஸியத் துல் நஸ்ரியா மகளிர் கல்லூரி யில் நடைபெறும்.

இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடு செய்துள்ள இந்த இரத்ததான முகாம் ஆரம்ப நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள், உலமாக்கள் பங்குபற்றுவர்.

இரத்ததானத்துக்கு விரும்புவோர் மஸ்ஜித் புர்கான் நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

## ஹெரோயினுடன் இருவர் மாட்டினர்

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் உப்புக்கிணறு சந்திக்கு அருகில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

சந்தேகநபர்கள் அநுராதபுரம் மற்றும் கொழும்பு 14 சேர்ந்தவர்களாவர்.

இவர்களிடம் இருந்து 50 மற்றும் 25 கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



பல்கலைக்கழகங்கள் தனியார் மயமாக்கப்படுவதை எதிர்த்து அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் முன்னணியினர் நேற்றுக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## தனியார் பஸ்களில் கப்பம் வசூலித்த பஸ் சங்கத் தலைவருக்கு விளக்கமறியல்

பதுளை பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்படும் தனியார் பஸ்களில் கப்பம் பெற்று வந்த குற்றச்சாட்டில் பதுளை நீதிமன்றத்தில் முன்னிலை செய்யப்பட்ட பதுளை தனியார் பஸ் சேவையாளர்களின் சங்கத் தலைவரான அநுர ராஜபக்ஷவை நவம்பர் மாதம் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் செல்வி மஹேஷா பிரியதர்ஷினி உத்தரவிட்டார்.

கொழும்பிலிருந்து பதுளைக்கு வரும் தனியார் பஸ்கள் மீண்டும் கொழும்புக்குப் போகும்போது ஒவ்வொரு பஸ்ஸிலும் இவர் நூறு ரூபாவைக் கப்பமாக வசூலித்துள்ளார் என பொலிஸாரின் குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டிருந்தது. கப்பம் செலுத்தாதவர்களுக்குப் பல்வேறு கெடுபிடிகளைச் செய்யும் இவர் நீண்டகாலமாகவே இவ்வாறு கப்பம் வசூலித்துள்ளார் என்பது விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இவர் அடாவடியாகக் கப்பம் வாங்குவதை நிறுத்துவதை பொலிஸார் தலையிட்டு நிறுத்தவேண்டுமென பதுளை தனியார் பயணிகள் பஸ் சங்கம் பதுளை பொலிஸாரிடம் ஏற்கனவே பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்தது. அதற்கமைய பதுளை பொலிஸார் அவரை வரவழைத்து இவ்வாறு கப்பம் வாங்குவதை நிறுத்தவேண்டுமென் பலமுறை எச்சரித்துள்ளனர். எனினும், அவர் தொடர்ந்தும் கப்பம் வசூலித்ததால் இம்முறை அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

## மோட்டார் குண்டு மீட்பு

வனாத்தவில்லு பொலிஸ் பிரிவில் எழுவங்குளம் பிரதேச வனப்பகுதியில் இருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

வனாத்தவில்லு பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே குறித்த மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து புத்தளம் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்பு புத்தளம் குண்டு செயலிழக்கும் பிரிவினரால் குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

வனாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போலி நாணயத்தாள் மூன்று பேர் மாட்டினர்

ஹொரணை நகரப் பகுதியில் போலி ஆயிரம் ரூபா நாணயத்தாள் வைத்திருந்த பெண் ஒருவரும் போலி நாணயத்தாளை வழங்கிய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பண்டாரகம மற்றும் களுத்துறை பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்கள் இருவரையும் ஹொரணை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கெண்டுள்ளனர். இதேவேளை, பேருவளை பிரதேசத்தில் அரச வங்கி ஒன்றில் போலி 2000 ரூபா நாணயத்தாளை வைப்பிலிடச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேகநபர் பொல்கொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

இந்த கைது சம்பவம் தொடர்பில் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கெண்டுள்ளனர்.

## வழமைக்குத் திரும்பியது நுரைச்சோலை நிலையம்

### இலங்கை மின்சார சபை அறிவிப்பு

ஸ்தம்பிதமடைந்திருந்த நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

அதன் பிரகாரம் அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் நடவடிக்கை மற்றும் திட்டமிடல் பிரதி பொது முகாமையாளரும், ஊடகப் பேச்சாளருமான செனஜித் தசநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் செயலிழந்தது

எனினும், நேற்றுமுன்தினம் இரவு திருத்தப் பணிகளை நிறைவு செய்து மின் உற் பத்தி நடவடிக்கைகளை வழ மைக்கு கொண்டுவந்ததாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கட்டுரைப் போட்டி

### தமிழினி, தாயக ஒலி இணைந்து நடத்துகின்றன

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இலண்டன் 'தமிழினி' பத்திரிகையும் இலங்கை 'தாயக ஒலி' சஞ்சிகையும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளன. 'தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார்' என்ற தலைப்பில் 300 சொற்களுக்குக் குறையாமல் இக்கட்டுரை இருக்கவேண்டும் என்றும் கட்டுரை மாணவரின் சொந்த ஆக்கம் என்பதை வகுப்பாசிரியரும் அதிபரும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் 'தாயக ஒலி' ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன் கட்டுரைகள் அனுப்பப்பட வேண்டும் என்றும் ஆசிரியர், 'தாயகஒலி' 9- 2/1 நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 6 என்ற முகவரிக்கு கட்டுரை சேர்க்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதல் பரிசாக 5,000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 3,000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 1,000 ரூபாவும் வழங்கப்படும். 10 சிறந்த கட்டுரைகளுக்குத் தலா 500ரூபா வழங்கப்படும். 'தாயக ஒலி' ஆசிரியரை இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு 011-4902406 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மத உரிமைகள் சீண்டப்படும் போக்குத் தடுக்கப்படல் ஆகாதா?

தம்புள்ள பிரதேசத்தை புனித நகராக்கும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயல் திட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பத்திரகாளி கோயில் தரைமட்டமாக்கப்பட்டு விட்டது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காளி அம்மன் விக்கிரகம் உடைக்கப்பட்டதன் தொடர் நிகழ்வாக நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த மதவிரோதச் சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இத்தனைக்கும், முதல் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு, நாட்டின் உயர் நிர்வாகியான ஜனாதிபதி நேரில் சென்று பார்த்த பின்னர், கோயிலுக்கென காணி ஒதுக்கீடு செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு ஏற்ப, ஆலயம் அமைந்துள்ள இடத்திலிருந்து பத்துக் கிலோ மீற்றர் தூரத்தில் இருந்த ஒரு காணி குறிப்பிட்ட பகுதியின் பிரதேச செயலரால் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கெனவே அமைந்துள்ள இடத்திலிருந்து ஆலயத்தை மாற்றுவதற்கு அதன் நிர்வாகம் விரும்பவில்லை என்பதனால், கடும் போக்காளர்களின் தூண்டுதலின் பேரில் ஆலயத்தை உடைத்து அழிக்கும் அக்கிரமம்-வன்செயல்-நடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இத்தனைக்கும், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பத்திரகாளி கோயிலை இடம் மாற்றும் யோசனை குறித்து ஆராயப்பட்ட வேளை, மாற்றுக் காணி ஒன்று வழங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதாகத் தகவல். குறிப்பிட்ட ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆர்.யோகராஜன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தை புனித நகராக்கும் திட்டம் ஒருபுறமிருக்க, அந்தப் பகுதி மதவிரோதப் பிராந்தியமாக மாற்றப்படுவதற்கான அகரம் கடந்த ஆண்டு (2012) ஏப்ரலிலேயே எழுதப்பட்டுவிட்டது. இஸ்லாமிய மத வழிபாடு நடத்தப்படும் மத்ரசா அங்கு சேதப்படுத்தப்பட்டது.

அதன் தொடரியாக, தம்புள்ள பத்திரகாளி கோயில் அம்மன் விக்கிரகம் உடைக்கப்பட்டது.

இப்போது கோயிலே இடித்து அழிக்கப்பட்டிருக்கிறது. சமயோசிதமாக அம்மன் விக்கிரகம் வேறு இடத்துக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டு விட்டது.

இந்த ஆலயத்தைச் சூழ வாழ்ந்த 42 இந்துக் குடும்பங்கள் ஏற்கெனவே குடியிருந்த பகுதியில் இருந்து சில மாதங்களுக்கு முன்னர் வெளியேற்றப்பட்டன. நட்ட ஈடாக தலா ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டதாகவும் தகவல்.

நாட்டின் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது மத விரோதிகளால் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் அவற்றைத் தடுப்பதில் அரசும் அதன் இயந்திரங்களும் உரிய அக்கறை காட்டுவதற்கான காத்திரமான செயற்பாடுகள் எதுவும் வெளிச்சமாகத் தெரியவில்லை.

தம்புள்ள பத்திரகாளி அம்மன் ஆலயம் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டில் வரலாற்றுக் காலம் முதல் வாழ்ந்து வரும் இந்து மக்களின் உரிமைகளைக் கேள்விக்குறி ஆக்கி உள்ளது.

அதே நிலைமை, சிறுபான்மை இனங்களின் ஏனைய மதங்களுக்கும் ஏற்பட்டுள்ளன. தம்புள்ள மத்ரசா தாக்கப்பட்ட காலத்திலிருந்து, தொட்டுத் தொட்டு, விட்டு விட்டு மதரீதியான தாக்குதல்கள் வெளிக்கிளம்புகின்றன.

அவற்றை வெறும் எழுந்தமானமான அல்லது தற்செயலான தாக்குதல்கள் என்று கொள்ள இயலாது. மத, இன விரோதிகளான தரப்பினர் கூட்டுச் சேர்ந்து, திட்டமிட்டு இத்தகைய அநாகரிகச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்றே கொள்வதற்கு, கருதுவதற்கு இடமளிக்கிறது.

இத்தகைய சமய விரோத வன்செயல்களில் ஈடுபடுவோருக்குப் பின்னால் பெரும் பலமும் அதிகாரமும் கொண்ட சக்தி ஒன்றும் அரசியல் செல்வாக்குள்ள சக்திகள் பலவும் கூட்டுச் சேர்ந்து இயங்குகின்றன என்ற சந்தேகம் எழுவதனையும் தவிர்க்க இயலாது.

நாட்டு மக்களுக்கு உரிய மத உரிமை குறித்து அரசமைப்புச் சட்டம் பின்வருமாறு சாற்றுகிறது:

இலங்கைக் குடியரசு பௌத்தமதத்துக்கு முதன்மைத்தானம் வழங்குதல் வேண்டும் என்பதுடன் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியினுள் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லாச் சமயங்களுக்கும் உறுதியளிக்கும் அதே நேரத்தில், பௌத்த மதத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதலும் வேண்டும்.

எமது நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் குறித்த III ஆம் அத்தியாயத்தில் சுட்டிக்காட்டப் பட்டிருப்பதன் பிரகாரம்-

நாட்டின் பிரசை ஒவ்வொருவரும் சிந்திக்கும் சுதந்திரம், தனது மனச்சாட்சிக்கு ஏற்ப செயற்படுதல் மற்றும் தான் விரும்பும் சமயத்தைக் கடைப்பிடிக்கவும் உரித்துடையவர் என்று வகை செய்யப்பட்டுள்ளது என்பதும் இங்கே கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.


இன, மதம் சார்ந்த பூசல்கள், எந்தத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டாலோ அன்றித் தூண்டப்பட்டாலோ, அதனைத் தடுக்கவல்ல அதிகாரம் அரசுக்கே உண்டு. அந்தக் கடமையைச் செய்வதில் ஆட்சியில் உள்ள எந்த அரசும் அக்கறை இன்றியோ பாராமுகமாகவோ இருப்பின், அது நாட்டுக்குச் செய்யும்-மக்களுக்கு ஆற்றும்-மிகப் பெரும் துரோகமாகவே கொள்ளப்படும். மொத்தத்தில், இப்போதைய மத விரோதச் சம்பவங்களையும், நடவடிக்கைகளையும் முளையில் கிள்ளி எறிய வேண்டிய முழுப் பொறுப்பும் அரசுக்கே உண்டு.

வெறும் அறிக்கை வெளியிடுதலையும், பழியை அடுத்தவர் மீது சுமத்தும் தந்திரத்தையும் தவிர்த்து-

நாட்டில், இன, மத, சமாதான சக வாழ்வுக்கு அத்திபாரம் இடவேண்டிய முழுப் பொறுப்பும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தையே சாரும்.

# அபிவிருத்தி என்பது இதுதானா?

ராஜராஜன்



கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ் சாலையில் இந்த நாட்டின் ஜனாதிபதி தாமே தமது காரை ஓட்டிச் செல்லும் காட்சியைப் பல்வேறு ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

**இந்த நாட்டின் முதல் பெண்மணி** மனைவி அருகே அமர்ந்திருக்க ஜனாதிபதியவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமானதொரு சூழ்நிலையில் தமது காரைப் படுவேகமாக ஓட்டிச் சென்றிருப்பாரென்பதில் எவரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

மேலும் இந்த அதிவேக நெடுஞ்சாலை அமைக்கப்பட்டதை நியாயப்படுத்தும் முகமாக ஒரு தகவலும் தெரிவிக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து விமானத்தில் இலங்கைக்கு வருவதாயின் ஒரு மணி நேரம் போதுமானது. ஆனால் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்பு வருவதாயின், இதைவிட அதிக நேரம் எடுக்கின்றது. புதிய அதிவேகசாலை அமைக்கப்பட்டதால் இனிமேல் 20 நிமிடங்களே பயணத்துக்குப் போதுமானது என்பதுதான் அந்தத் தகவல். இதனைக் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்றது. நேரத்தை வீணாக்குவதற்கு எவர்தான் விரும்புவார்கள்.

### சாதாரண மக்களின் பாவனைக்கு உதவாத அதிவேக நெடுஞ்சாலைகள்

ஆனால் பல கேள்விகள் ஒரே சமயத்தில் எழுந்து மனதைக் குடைகின்றன. இந்த வீதியை இங்கு வாழ்கின்ற சாதாரண மனிதர்களில் எத்தனை பேர் பயன்படுத்தப்போகின்றனர்.? அதற்கான வசதிகள் அவர்களிடம் உள்ளனவா? இந்த வீதியில் பயணிப்பதற்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கான வசதியைக் கூடப் பலர் பெற்றிருக்கவில்லை என்பதை உயர் மட்டத்தில் உள்ளவர்கள் புரிந்து கொள்வார்களா? ஆனால் இவற்றுக்கெல்லாம் விடை கிடைக்கவே கிடைக்காது.

அண்மையில் வெளிவந்த செய்திகளின் படி நாம் வறுமையான நிலை யிலுள்ள நாடொன்றில் வாழ்கின்றோம் என்பதை அறிந்து கொண்டோம்- ஒரு வேளை உணவுக்கு கூடப் போராடும் நிலையில் பலர் இங்கு உள்ளனர். உணவுப் பொருள்களின் விலைகள் சாதாரண மனிதனால் எட்டிப்பிடிக்க முடியாத அளவு தூரத்துக்கு உயர்ந்து விட்டன. சிலரால் பாணைக்கூட எட்டியிருந்து பார்க்க மட்டுமே முடிகின்றது. அது கூட விலையளவில் உயர்ந்து ஆடம்பரமான உணவாக மாறிவிட்டது. அரச உத்தியோகத்தர்களில் முக்கால் வாசிப்பேர் கடனாளிகளாக மாறியுள்ளனர். அவர்களுக்குத் தற்போது வழங்கப்படும் வேதனம் அரை மாதத்துக்கே போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நிலையில் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவர்களின் நிலை பற்றிக் கூறத் தேவையில்லை. பலர் இன்று ஒரு சைக்கிளைக் கூட வாங்க முடியாத நிலையில் நடை ராசாக்களாக உலாவி வருகின்றனர். ஒரு சைக்கிள் இவர்களுக்குக் கிடைத்து விட்டால், புஷ்பக விமானத்தில் பறப்பது போன்ற மகிழ்ச்சியை இவர்கள் அனுபவிப்பார்கள். ஆனால் இந்த மகிழ்ச்சி கூட இவர்களுக்குக் கிடைப்பதாகவில்லை.

### அபிவிருத்தி என்பது இதுவல்ல.

இந்த நிலையில் அதிவேக நெடுஞ்சாலையை இவர்கள் எண்ணிப் பார்க்கக் கூட முடியாது.

ஒரு நாடு அபிவிருத்தி காணவேண்டியதன் அவசியத்தை எவரும் மறுக்க முடியாது. ஆனால் அது அனைவருக்கும் பயன்தரக்கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். அபிவிருத்தி என்பது புதிய விமான நிலையங்கள், துறைமுகங்கள், அதிவேக நெடுஞ் சாலைகள், பல அடுக்கு மாடிக் கட்டடங்கள், உல்லாச விடுதிகள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் என்பவற்றை அமைப்பதில் மட்டுமே தங்கியிருக்க வில்லை. ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சியே உண்மையான அபிவிருத்தியாகும். தேவையான உணவு, உடை, மருத்துவ வசதி, கல்வி, தங்குமிடம் ஆகியன மக்களுக்குக் குறைவில்லாத வகையில் கிடைப்பதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இவையெல்லாம் நிறைவேறிய பின்னர் ஏனைய அபிவிருத்திகள் தொடர்பாகச் சிந்திக்கலாம். ஓடுவதற்கு ஒரு சைக்கிள் வாங்குவதற்குக் கூட வக்கில்லாமல் இருக்கும் ஒருவனுக்கு அதிவேக நெடுஞ்சாலையும் ஒன்றுதான், சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படும் வீதியும் ஒன்று தான். கையில் ஒரு சைக்கிள் கிடைத்த பின்னர் தான் அவன் வீதியைப் பற்றியே சிந்திப்பான்.

இன்று உலகில் சுமார் 7 கோடியே 70 லட்சம் சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லையென்ற அதிர்ச்சித் தகவலொன்று அண்மையில் வெளி வந்தது. இந்தத் தொகையில் எமது நாட்டிலுள்ள சிறுவர்களும் அடங்குகின்றனர். முதலில் இவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாத காரணங்கள் ஆராயப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். பாடசாலை செல்லாத சிறுவர்கள் அனைவரும் மீண்டும் பாடசாலை செல்ல வேண்டும். இதுதான் உண்மையான அபிவிருத்தி.

*கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கொழும்பு வருவதாயின், இதைவிட அதிக நேரம் எடுக்கின்றது. புதிய அதிவேகசாலை அமைக்கப்பட்டதால் இனிமேல் 20 நிமிடங்களே போதுமானது.*

மேலும் ஒரு நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்படும்போது அந்த நாட்டின் தேசிய வருமானம் கணக்கில் எடுக்கப்பட வேண்டும். அதை விடுத்து வேறு நாடுகளிலிருந்து கடன் பெற்று அபிவிருத்தியைக் காணலாமெனக் கனவு கண்டால் அது அந்த நாட்டின் குடிமக்களை நிரந்தரக் கடனாளிகளாக மாற்றிவிடுமென்பதில் ஐயமே இல்லை. அதுதான் எமது நாட்டிலும் அரங்கேறி வருகின்றது. வசதி படைத்தவர்கள் அனுபவிக்கும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்படும்போது, வசதி குறைந்தவர்கள் மேன் மேலும் நசுக்கப்படுவார்கள் என்பதை ஏனோ உயர் மட்டங்கள் இன்னமும் உணரவில்லையென்பது மிகப்பெரிய சாபக்கேடாகவே காணப்படுகின்றது.

கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற கொடிய போர் காரணமாக இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 4 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்தப் பகுதி மக்களின் அவலங்கள் தீரவில்லை. ஏராளமானவர்கள் தமது வாழ்வைத் தொலைத்துவிட்டு தற்காலிகக் கொட்டில்களில் வாழ்கிறார்கள். இவர்களுக்கு வாழ்வாதாரத்துக்கான வழி எதுவும் தெரியவில்லை. பசியைப் போக்குவதற்கும் உரிய மார்க்கம் புரியவில்லை. பலர் குடிதண்ணீர் வசதியின்றி நா வறள அவஸ்த்தைப்படுகின்றனர். ஏராளமானவர்கள் இன்னமும் மின்சார வசதி கிடைக்காததால் இருளையே துணையாகக் கொண்டு அவல வாழ்வு வாழ்கின்றனர். இந்த நிலையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுக்குத் தேவையான நிதி அரசிடம் இல்லையென நாட்டின் உயர் மட்டம் கைவிரித்து விட்டது.

இந்த நிலையில் வேறொரு நாட்டிடம் கடன் பெற்று அபிவிருத்தியைக் காணலாம் என்ற மாயையில் இனியும் ஆளும் வர்க்கத்தினர் மூழ்கியிருப்பார்களானால், அதை இந்த நாட்டின் சாதாரண மக்கள் இனியும் பொறுக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதுதான் உண்மை.



# அறிவுக் கடலில் நீந்த துணையாகும் வாசிப்பு

அருணா தருமலிங்கம்


ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தை வாசிப்பு மாதமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

உணவுப் பொருள்களை, பழவகைகளை, வேளாண்மை, உற்பத்தி பொருள்களை நாம் களஞ்சியப்படுத்தி வைக்கின்றோம். பின்னர் தேவைக்கேற்ப அதிலிருந்து எடுத்து உபயோகிக்கின்றோம். அதே போல்தான் நாம் அறிவையும் மூளையில் களஞ்சியப்படுத்தி வரவேண்டும்.

ஆகவே பல விதமான கட்டுரைகளைத் தொடர்ந்து வாசித்து, மூளையில் பதிய வைத்துக் கொள்ளலாம். சந்தர்ப்பம், சூழ்நிலை ஏற்படுகின்ற வேளையில் பிரயோகிக்கும் விதத்தில் அதில் இருந்து மீள எடுத்து கையாளலாம். இதற்காகத்தான் பலதுறைகளைச் சார்ந்த நூல்களைச் சஞ்சிகைகளை, பத்திரிகைகளைத் தீர்க்கமாக வாசித்து அவற்றிலிருந்து அறிவுகளைப் பெற்று இதயத்திலும் மூளையிலும் களஞ்சியப்படுத்திக் கொள்ள வேண்டும். காலங்கள் நவீனமடையும் போது நாமும் புதிய விடயங்களைத் தினமும் அறிகின்றோம். இவைகளைக் களஞ்சியப்படுத்திக் கொள்வதற்கு என்ன செய்யலாம்? வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். உதாரணமாக ஓர் ஆசிரியர் மாணவருக்கு அறிவூட்டுகின்ற வேளையில் சங்ககால வரலாறு, இலக்கியவரலாறு, சங்கம் மருவிய கால வரலாறு ஆகியவற்றை எடுத்துக் கூறவேண்டிய நிலையேற்படும். அப்போது நம்மிடம் மூளையில் களஞ்சியப்பட்டிருப்பவை உடனே நினைவுக்கு வரும். காப்பியங்கள், வரலாற்று நினைவுகள் ஆகியவற்றை நினைவில் மீட்டெடுத்து விளக்கலாம். எனவே பழைய கால காப்பியங்களென்று புறந்தள்ளாது சிந்தையோடு வாசித்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

### வாசிப்பு பொழுது போக்குக்கு அல்ல

பொழுது போக்குக்காக வாசிப்ப தென்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். ஏனெனில் வாசிப்பதன் முக்கிய நோக்கம்அறிவைவிருத்தியடையச்செய்வதுதான். கதைகளை வாசிப் பது பொழுதுபோக்குத்தானே என எண்ணலாம். ஆனால் அதில் பொதிந்துள்ள



நல்லறிவு, நற்பழக்கம், நற் பண்பு ஆகிய வகைகளை எறும்பு, மண்ணிலிருந்து சீனிப் பதார்த்தங் களை இலாபகமாகப் பிரித்தெடுத்துக் கொள்வது போல தேர்ந்தெடுத்துக் கொள்ளலாமல்லவா. பொது அறிவு தினமும் நாட்டில் நடப்பவை, சமகால அரசியல், பொருளாதாரம், கலாசாரம் தொடர்புடையவை என ஆக்கங்களைத் தினமும் எழுதிக் கொண்டு தானிருக்கின்றனர். இவற்றையெல்லாம் வாசிப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஓய்வு நேரங்கள் கிட்டும் போது வீண்பொழுது போக்கு வதும் அநாவசியமாக்கதைத்து நேரத்தை வீணாக்குவதும் கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும். உலகெங்கும் தொலைக்காட்சிவானொலி என்பவை பல தரப்பட்ட அலை வரி சைகளில் சதா ஒளி, ஒலி பரப்பிய வண்ணமே உள்ளதை நாம் அறி வோம். நமது வாழ்க்கைக்கு ஒவ்வாத நிகழ்ச்சிகளை அடியோடு தவிர்த்து வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து தோன்றும் அறிவுக்கு மெருகூட்டுவது நற் பண்புள்ளதுமான நிகழ்வுகளை தொலைக் காட்சியில் பார்ப்பதாலும் வானொலி யில் கேட்பதாலும் அறிவை வளர்த்துக் கொள்ளலாம்.

### எல்லா நூல்களையும் கற்க வேண்டும்

ரூஸோ, அரிஸ்ரோட்டல் மற்றும் 'கல்கி' நா.கிருஷ்ணமூர்த்தி, அகிலன், சாண்டில்யன், என்டமூரி, கனக துர்கா, சுஜாதா, செ.குணரெத்தினம் போன்ற எத்தனையோ எழுத்தாளர்கள் இந்தப் பூவுலகில் பிரகாசித்தமையை நன்கு அறிவோம். அவர்கள் வாசித்த நூல்களின் நுண்ணறிவுகளே இதற்குக் காரணம் என்றும் கூறலாம். அறிஞர் ஆவதற்குப் பல நூல்களை எழுதி புகழ் பெறுவதற்கும் அத்திபாரமாக அமைவதுதான் வாசிப்புத் திறன் என்பது யதார்த்தம். நூல்களை வாசித்து கொண்டு செல்லும் போது தத்தமது மூளையிலும் வெவ்வேறு கற்பனைகள் உருவாகும். அந்தக் கற்பனைகளை சற்று விருத்தி செய்தால் உண்டாவதுதான் எழுத்தாற்றல். எனவே சிந்தைக்கு விருந்தூட்டும் சிறந்த நல்லாக்கங்களை தொடர்ந்து வாசித்து இதயத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

"சுவாரஸ்யமாக அமையவில்லையே இவ்வாக்கம் "என விலக்கி விடக்கூடாது" ஏனென்றால் மணலை அகழும் போது வரும் ஊற்று அசிங்கமாகத்தான் வரும் அதனைத் தொடர்ந்து அகழ்ந்து கொண்டிருந்தால் அதிலிருந்து தூய நீர் அளவு கடந்து ஊறிக் கொண்டே வரும். நெல்லிக் கனியை உண்ணும் போது கசப்பான அல்லது புளிப்பான தன்மையை ஏற்படுத்தினாலும் அதனைச் சாப்பிட்டு முடிந்த பின் இனிப்பும், இன்பமும் தாமாகவே ஏற்படுகின்றது.

அதனால் தான் நல்லாக்கங்களைச் சிறிது வாசித்து விட்டு இது சுவைக்கவில்லையெனத் தூக்கியெறிந்து விடாது தொடர்ந்து பொறுமையுடன் வாசித்துத் தூய்மையானதைக் கவர்ந்து கொள்ளலாம். அதற்காக அனைத்து நூல்களையும் வாசித்து முடிக்க வேண்டுமென்பதில்லை. அறிவுக்கு விருந்தூட்டும் அநுகூலமானவைகளைப் பொறுமையுடன் வாசிக்க வேண்டும். வாசிக்கும் போது கண் மட்டுமோ அல்லது வாய் மட்டுமோ வாசிக்கக் கூடாது. ஆழமாகவும் நிதானமாகவும் இதயத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். மேலோட்டமாக வாசிப்பது நீண்ட நாள்களுக்கு மூளையில் நிற்காது. எனவே அறிவை வளர்ப்பதற்கு அனைவரும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

### வாசிப்புப் பழக்கமே பத்திரிகைகளை உருவாக்கியது

அதேவேளை மாணவர்களின் கல்வி விருத்திக்கு வாசிப்பின் பங்களிப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பது புத்திஜீவிகளது கூற்றாகும். கற்கை நெறிகளை முன்னெடுத்துச் செல்கின்ற மாணவர்கள் பாடப் புத்தகங்களுடன் பத்திரிகைகளையும் வாசிப்பது உகந்தது.

பத்திரிகைகளை நாம் எழுத்துப் பிழையின்றி வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

வாசிப்புப் பழக்கம் இல்லையேல் பத்திரிகையோ, நூல்களோ தோன்றியிருக்க வாய்ப்பேயில்லை. உலகெங்கிலுமுள்ள மாணவர்கள் வாசிப்புக்கு உகந்த கௌரவத்தை நல்கினர் என்பது கண்கூடு. இதன் காரணமாக உலக மொழிகள் அனைத்திலும் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. ஆகவே கல்விசார் சமூகம் அடங் கலாக அனைத்து தரப்பினரும் வாசிக்கத் தலைப் பட்டனர். இதனால் உலகப் புதினங்கள் மட்டுமின்றி நாளடைவில் மதம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், இலத்திரனியல், மருத்துவம், தாவரவியல், பௌதிகவியல்சட்டம்விளையாட்டுசினிமா போன்ற துறைகளுக்கென்று பத்திரிகைகளில் பிரத்தியேக பக்கங்கள் ஒதுக்கப்பட் டன. வாசகர்களுக்கு இது வரப் பிரசாதகமாகவே அமைந்துள்ளது எனலாம்.

### கற்றலின் ஒரு பகுதி வாசிப்பு

வாசிப்பு மூலம் சொல்லறிவும், கல்வியும் விருத்தியடைந்து கொண்டே செல்கின்றன என்று கூறினாலும் மிகையாகாது. ஜி.சீ.ஈ. பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் மூன்று பாடங் களில் 'ஏ' சித்தி பெற்ற பின் பல் கலைக்கழகம் செல்கின்றான். அங்கு பட்டப் படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்து கொண்ட பின் மருத்துவராகவோ, பொறியிலாளராவோ வெளி யேறி தாய் நாட்டுக்குச் சேவை செய் யத் தலைப்படுகின்றான். இதற்கு அவன் வாசிப்பிலிருந்து பெற்ற அறி வும் கை கொடுத்து உதவியது என்பது யதார்த்தமாகும். வாசிக்கும் திறனும் கற்றலின் ஒரு பகுதியே. இது தொடரப்படும்போது உலக விடயங்களை அறிந்து கொள்ள முடியும். இது மாண்வர்களுக்கு எந்த நேரமும் பக்கத்துணை யாகவே இருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாகும். மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை கைக் கொண்டால் அவர்கள் எல்லை யற்ற அறிவுக் கடலில் நீந்துவார்கள் என்பது திண்ணம்.

ஒவ்வொரு மாணவ்னுக்கும் வாசிப்பானது முக்கியமானதொன்றாகும். புத்திஜீவிகள் இதனை ஒப்புக் கொள்கின்றனர். வாழ்நாளில் வாசிப்புப் பழக்கத்தை மேற்கொள்ளாத மாண வன் அறியாமையினால் உழல்வான். மற்றவரை ஏமாற்றும் தன்மைக்கு இது வித்திட்டுவிடும். எனவே ஓய்வு நேரத்திலாவது பத்திரிகையையோ, நூல்களையோ கையிலெடுத்து அறியாமை என் னும் இருளைப் போக்கிட வேண்டும். அவற்றைப் பணம் கொடுத்து வாங்கிப் படிப்பதற்கு பொரு ளாதாரச் சிக்கல் தடையாகஇருப்பின்பொது நூல் நிலையத்துக்குச் சென்று அனை த்து நாளிதழ்களையும் வாசிக்கலாம். மாண வர்கள் வாசிக்கும் பழக்கத்தை புறம் தள்ளுவ து அறியாமையை எடுத்துக்காட்டுகின்றது என்பது கல்வி மான்களின் கருத்தாகும்.

# ஒவ்வாமை என்றால் என்ன?

நி.தர்ஷனோதயன்
மருத்துவர்

ஒவ்வாமை என்றால் உடலுக்கு ஒவ்வாமை. நாம் உட்கொள்ளும் அல்லது நமது உடலில் உட்புகும் ஏதாவது சில பொருள்கள் உடலுக்கு ஒத்துக் கொள்ளாதபோது உடல் அதை எதிர்த்துப் போராடுகிறது. அதனால் ஏற்படும் பக்க விளைவே ஒவ்வாமையாகும்.

இத்தகைய புறத்தாக்குகளிலிருந்து உடலைப் பாதுகாக்க மாஸ்ட்செல்கள் (Mast cells) என்றழைக்கப்படும் விசேஷமான செல்கள் இருக்கின்றன. இவை பலவகை வேதிப் பொருள்களைச் சுரக்கின்றன. மேலும் உடலுக்குள், நுழைந்து ஊறு விளைவிக்கும் ஆன்டிஜன் (Antigens) என்ற புறப் பொருள்களுடன் போராடுவதற்காக நம் உடலில் இருக்கும் ஆன்டிபயடீஸ் (Antibodies) என்ற எதிரணுக்களையும் தம் மீது ஒட்ட வைத்துக் கொண்டிருக்கும். இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் உடலுக்கு தீங்கு விளையப்போகிறது என்று எப்படியோ அறிந்து ஆன்டிஜனை உற்பத்தி செய்கின்றன.

உதாரணமாக சில வகைப் பூக்களின் மகரந்தத் தூள் உடலில் படும்போது அதிலுள்ள நுண் பொருள்கள் சுவாசம் மூலமாக உட்செல்கின்றன. அதை எதிர்த்து ஆன்டிபயடீஸ் போராடும் போது மாஸ்ட் செல்கள் ஹிஸ்டமின் என்ற திரவத்தைச் சுரக்கின்றன. உடலுக்குத் தேவையில்லாத ஹிஸ்டமின் எரிச்சலை ஏற்படுத்தக் கூடியது. இது உடலில் அரிப்பு, தோல் திட்டுகளாக தடிப்பது, மூக்கில் நீர் ஒழுகுவது, மூச்சு முட்டல், அதிக வியர்வை, மூச் சிழுப்பு போன்ற அறிகுறிகளாக வெளித் தெரியும்.

அலர்ஜியும் ஒரு வகை நோய் தான். பிரதானமாக இவற்றைச் சில பிரிவுகளாக வகைப்படுத்தி இருக்கின்றனர். அர்டிகேரியா (விஷக்கடி) அலர்ஜிக் ரைனடிஸ் (தும்மல்) ஒவ்வாமை ஆஸ்துமா (ஆஸ்துமாவின் முக்கிய பிரிவு) ஆகியவை முக்கியமான வகைகளாகும்.

இவை தவிர ஜீரண மண்டல ஒவ்வாமை, தசை வலிகள், மூட்டு வீக்கம், கண் காது ஒவ்வாமை, தூக்கமின்மை, தலை வலி, நெஞ்சு வலி, படபடப்பு, கை கால் சில்லிடுதல், பிறப்பு உறுப்புக்களில் நமைச்சல், படுக்கையில்சிறுநீர்கழித் தல், எக்சிமா, தோல் தடிப்பு, தோல் எரிச்சல் போன்ற அறிகுறிகளைக் காட்டுகின்றன. மற்றவகை ஒவ்வாமைகள் உலக மக்கள் தொகையில், குறிப்பாகக்குளிர் காலத்தில் ஒவ்வாமைத் தொல்லைகளால் 40 சதவீதம் ஆண்களும் 60 சதவீதம் பெண்களும் பாதிக்கப் படுகிறார்கள். ஒவ்வாமை பரம்பரையாகவும் வரலாம்.

### ஒவ்வாமையை ஏற்படுத்தும் பொருள்கள்

சூரியனுக்குக் கீழுள்ள எந்தப் பொருள்களாலும், சூரியக் கதிர்களாலும் கூட ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய சில பொருள்கள், சில வகைப் பூக்களின் மகரந்தம், சில வகைச் செடிகள், வாசனைத் திரவியங்கள், பூச்சியினாங்கள், தூசி, புகை, பெயிண்ட், பிளாஸ்டிக், ரப்பர், முட்டை, மீன்கள், பருப்புக்கள், பால், டீ, காபி, உலோக நகைகள், வீட்டு செல்லப் பிராணிகள், சோப், டிடர் ஜென்ட், குளிர்ந்த நீர், சோபா துணி, பூச்சிக் கொல்லி மருந்து. ஒவ்வாமை ஏற்படுத்துவதில் தும்பு, தூசி 21 சதவீத மும் பூக்களின் மகரந்தம் 29 சதவீத மும் விதைகள் 9 சதவீதமும் புல், பூண்டுகள் 8 சதவீதமும் காரணமாக அமைகின்றன என்று ஒரு கணக் கெடுப்பு தெரிவிக்கிறது.

### மூக்கில் ஒவ்வாமை

சாதாரணமாக ஏற்படும் தும்மலுக்கும் ஒவ்வாமையால் ஏற் படும் கோளாறுகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. மூக்கில் ஊறு தல், அடுக்குத் தும்மல், நீராக ஒழுகுதல் போன்றவை ஒவ்வாமையால் ஏற்படுகின்றன.

### கண்ணில் ஒவ்வாமை

கண்ணில் அதிக எரிச்சல் ஏற்படும். விழிவெண்படலமும் சிவந்து காணப்படும். கண்ணீர் வழியும். phelecten என்ற கண் நோயும் ஓர் ஒவ்வாமை தான் என்று கூறப்படுகிறது.

### தோலில் ஒவ்வாமை

உலோக அணிகலன்கள், ரப்பர், அழகு சாதனப் பொருள்கள், தூசி, வீட்டுப் பிராணிகளின் உரோமங்கள் போன்றவற்றாலும் சில செடிகள் தோலில் படுவதாலும் ஒவ்வாமை ஏற்படுகிறது. இதனால் தோலில் எரிச்சல் ஏற்படும். திட்டுத்திட்டாக தடிப்பு ஏற்படும்.

### உணவு ஒவ்வாமை

ஜீரண மண்டலத்தில் ஒவ்வாமை ஏற்படும்போது வாந்தி, குமட்டல், வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, வாயுத் தொல்லை, தலைவலி, ஆஸ்துமா, மன உளைச்சல் போன்ற நோய்கள் உண்டாகும். உணவுப் பொருள்களில் குறிப்பாக மீன், முட்டை, பன்றி, மாடு, கோழி, இறைச்சி, பால், கோவா, டீ, கோப்பி, ஒரேஞ், பட்டாணி, கத்தரிக்காய், ஈஸ்ற், மதுபானங்கள் போன்றவை காரணமாக இருக்கலாம். நாம் தினமும் பல வகைப் பொருள்களைச் சேர்த்து உண்பதால் எதனால் ஒவ்வாமை ஏற்பட்டது என்று கண்டறிவது சிரமம். பால், மீன், இறைச்சி, சொக்லெட் போன்றவற்றில் டைரமின் (Tyramine) என்ற பொருள் இருக்கிறது.

### தூசியால் ஒவ்வாமை

தூசி என்றால் அது வெறும் உயிரற்ற ஜடத்துகள் அல்ல. அதில் கண்ணுக்குத் தெரியாத அளவுக்கு உள்ள நுண்ணுயிர்களின் எச்சங்கள், கழிவுகள், இறந்த உடல்களும் அலர்ஜிக்குக் காரணமாகின்றன. நாம் உடுத்தும் ஆடைகளின் மிக மெல்லிய நூல் இழைகள், மண் துகள்கள், பூஞ்சைக் காளான்கள், உரோமங்கள், வளர்ப்பு பிராணிகளின் செதில்கள் போன்றவையும் ஒவ்வாமைக்குக் காரணமாகின்றன. இத்தகைய தூசிகள் நம் வீட்டில் பயன்படுத்தும் படுக்கை, தரைவிரிப்புகள், திரைச் சீலைகள், சோபாத் துணிகள், மரப்பொருள்கள் மற்றும் அதிகம் பயன்படாத பொருள்களின் மேல் படிந்து இருக்கின்றன. குளிர்ச்சி, ஈரப்பதம் உள்ள சூழ்நிலைகளில் இந்த நுண்ணுயிரிகள் பல்கிப் பெருகி வளர்கின்றன. சூரிய வெப்பத்துக்கு இவற்றைஅழிக்கும் சக்தி உண்டு.

### ஒவ்வாமையைத் தடுக்கும் முறைகள்

உணவுப் பொருள்களினால் வரும் ஒவ்வாமைகளைத் தடுக்க எந்தப் பொருள் ஒத்துக்கொள்ளவில்லை என சோதனை மூலம் கண்டறிந்து அதை முற்றாகத் தவிர்த்து விடுவதே சிறந்த வழி. அதேபோல் சுற்றுச்சூழலில் உள்ள பொருள்களால் ஒவ்வாமை ஏற்படுமேயானால் அவற்றை அகற்றி வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வாமையை அறிய பலவிதமான சோதனைகள் இருக்கின்றன. அவற்றில் சில இரத்தத்திலும் மூக்கு உட்புறச் சவ்வுகளிலும் உள்ள "ஒவ்வாமைக்கே உரித்தான" ஈசினோபில்களின் எண்ணிக்கை இரத்தத்தில் ஐஜிஇ (IGE) எதிரணுக்களின் எண்ணிக்கை காம் ப்ளெக்ஸ், சீரம், காம்ப்மென்ட், ஹிஸ்ட மின், சம்சார்டிசெல்கள், சைடோடாக் சிக் டெஸ்ட் (Cytotoxic Test) போன்ற சோத னைகளைச் செய்து பார்க்க வேண்டும் . சிறுநீர் பரிசோதனைகளும் சைனஸ் மார்பு, எக்ஸ்ரேக்களும் தேவைப்படலாம். ஆஸ்துமா ஒவ்வாமை உள்ளவர்களுக்கு சுவாச இயக்க பரிசோதனைகளுக்கு (PET) பிறகு தோலிலும் மூன்று வகை சோதனையை நடத்தலாம்.

## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு



சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரிக்கும் இடையிலான நட்பு ரீதியான உதைபந்தாட்டப் போட்டி கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதன்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் பற்றிக்ஸ் கல்லூரி சமூகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அதையடுத்து அதிபருக்கு அருட்தந்தை றொசான் அடிகளார் நினைவுப் பரிசு வழங்கினார். (ஒ-23)

## மாகாண முகாமைத்துவ உதவியாளர் அதியுயர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக்.31

மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிஉயர் பதவிக்கு நியமனம் செய்வதற்காக நடத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தற்போது கோரியுள்ளதாக அதன் செயலாளர் க.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார். குறித்த போட்டிப் பரீட்சை அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. ஐந்து வருடங்கள் மாகாண உதவியாளர் சேவையின் வகுப்பு I இல் உள்ள அலுவலர்களும், மாகாண முகாமை உதவியாளர் சேவையில் எட்டு ஆண்டுகளுக்கு குறையாத முனைப்பான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களும், மாகாண முகாமை உதவியாளர் சேவையின் I ஆம் மற்றும் II ஆம் வகுப்புக்களில் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றுள்ள பட்டதாரி அலுவலர்களும் இந்தப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்களூடாக எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னராக செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல.481, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-288)

## வாசிப்பு முகாம்

வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயத்தில் வாசிப்பு முகாம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வாசிப்பு மாதத்தில் மாணவர்கள் மத்தியில் வாசித்தலை ஊக்குவித்தல் மற்றும் கட்டுரை, கவிதை ஆகிய துறைகளில் ஈடுபட வைத்தல் என்பன தொடர்பாக மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் இந்த வாசிப்பு முகாம் அமைந்திருந்தது.

பாடசாலை அதிபர் நேசராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த முகாமில் மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன. மேலும் சிறுவர்கள் மத்தியில் துறை சார்ந்தோரால் சிறுகதைகள் வாசித்துக் காட்டப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-421)

## கலை விழா

யாழ்ப்பாணம், ஒக.31

தோப்பு அருள் நந்தி வித்தியாலய கலை விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா கலந்து கொள்வார்.

இதில் நடனம், இசையும் அசைவும், ஆங்கிலக் கவிதை, கோலாட்டம், நாடகம் மற்றும் காவடி உட்பட பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (த-400)




வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் 15 ஆவது ஆண்டு வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்வு கடந்த சனிக்கிழமை இறம்பைக்குளம் அருந்ததி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-5)

## முல்லைத்தீவு மக்களுக்கான இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 31

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமை எதிர்வரும் 16 ஆம் திகதி முல்லைத்தீவு வைத்தியசாலையில் நடத்தவுள்ளன.

முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் இணைந்து நடத்தவுள்ள மருத்துவ பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, தோல், பல், குழந்தை, இரத்த அமுக்கம், வாய்ப்புற்று, பொது மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகளும், பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கொழும்பிலிருந்து வரவுள்ள நடமாடும் சேவை வாகனங்கள் மூலம் பரிசோதனைகளும், ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உத்தியோகத்தில் தடைபட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**இடபம்:** எடுத்த வேலையை தடையின்றி முடிப்பீர்கள். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழுவீர்கள். புண்ணியத் தலங்கள் சென்று வருவீர்கள்.

**கடகம்** : சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** அடுக்கடுக்கான வேலைகளால் அவதிப்படுவீர்கள். நீங்கள் ஒன்று பேசப்போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**கன்னி:** யாருக்கும் சாட்சிக் கையப்பமிட வேண்டாம். வியாபாரத்தில் பங்குதாரர்களால் பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்கள் ஏற்பட்டு நீங்கும்.

**நாளை**

ஐப்பசி-15 வெள்ளிக்கிழமை 01.11.2013

திதி: திரயோதசி மு.இ.08.50 வரை

நட்சத்திரம்: அத்தம் பி.இ.01.03 வரை

சுபநேரம்: 06.03 - 07.33 வரை

இராகுகாலம்: 10.33 - 12.03 வரை

**துலாம்:** முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆடம்பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**தனுசு:** உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மகரம்:** நண்பர்கள், உறவினர்களுடன் உரிமையில் வரம்பு மீறிப் பேச வேண்டாம். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்காதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கும்பம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்புக் கிடைக்கும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 3 | 1 | | | | | 9 |
| | 5 | 1 | 6 | 9 | 7 | 4 | | |
| 9 | | | 4 | | | | 5 | |
| 6 | | | 8 | | 4 | | | |
| 7 | | 9 | | | | 8 | | 5 |
| | | | 9 | | 1 | | | 7 |
| | 2 | | | | 9 | | | |
| | | 6 | 5 | 1 | 8 | 2 | 9 | |
| 1 | | | | | 3 | 5 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 8 | 3 | 7 | 6 | 5 | 1 | 2 |
| 6 | 5 | 3 | 2 | 9 | 1 | 8 | 4 | 7 |
| 1 | 7 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 3 |
| 7 | 8 | 5 | 4 | 2 | 3 | 6 | 9 | 1 |
| 3 | 1 | 4 | 5 | 6 | 9 | 7 | 2 | 8 |
| 2 | 6 | 9 | 7 | 1 | 8 | 4 | 3 | 5 |
| 5 | 4 | 1 | 9 | 3 | 7 | 2 | 8 | 6 |
| 8 | 2 | 6 | 1 | 4 | 5 | 3 | 7 | 9 |
| 9 | 3 | 7 | 6 | 8 | 2 | 1 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது பெண்களே

இன்றும் என்றும் பெண்கள் அரசியல் பிரவேசத்தில் என்றும் ஆதிக்கம் செலுத்துவார்கள்; செலுத்துகின்றார்கள் என்பதே உண்மை

பெண்களுக்கு சமஉரிமை பெண்ணால் அவளது உழைப்பால் பெறப்பட்டது. பெண் தனது உரிமையை தானே மீட்டெடுக்க இன்று சுதந்திரமாக புறப்பட்டு விட்டாள். இதை யாரும் மறக்க முடியாது என்பது உண்மையே. அரசியலில் அங்கம் வகித்த பெண்மணிகளை இன்றும் செப்பிக் கொண்டு திரிகிறோம் என்றால் அவர்கள் அரசியல் என்ற சொல் மறையும் வரை அவர்களது ஆதிக்கம் பேசப்படும். நீதி நூல்களை முதலில் உலகுக்கு தந்தவர் ஒளவையார். அவரது நூல்களை பயன்படுத்தி "வாய்மையே வெல்லும்" என்ற வாசகம் இன்றும் நீதிமன்றங்களில் மகுடவாசகம். இதிலிருந்து பெண்கள் மகத்துவம் அரசியலில் உண்டு என்பதை உணரலாம். அவர்களது பிரவேசம் அரசியலில் பொன்னால் பொறிக்க வேண்டியதாகும். அரசியலில் பெண்ணின் முடிவு பொறுமையாக வும் அடக்கமாகவும் அமைதியாகவும் தீர்மானிக்கப்படு கிறது.

இன்றும் என்றும் பெண்கள் அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவார்கள்; செலுத்துகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

*க.தங்கலீலா, கரவெட்டி, தெற்கு.*

## கண்ணீரின் குரலில்

நீ காட்டும்
மௌனத்தில்
ஊமைக் காயங்கள்
என் இதயச் சுவடுகளில்
கண்ணீராய்
குரல் தொடுத்ததை
அறிவாயா?



*சிந்து சிவதாஸ்,*
*ஐங்கரன் வீதி, சுதுமலை.*

விமர்சனம்
நீங்களும் எழுதலாம்....
முகப்புத்தகப் (பேஸ்புக்) பாவனை
நன்மையா? தீமையா?
உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.
தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.



# சிந்தியுங்கள்

★ ஒருவர் பேசியது புண்படுத்தப்படுவதில்லை. நாம் எடுத்துக் கொள்ளும் விதம்தான் நம்மைப் புண்படுத்துகிறது.


★ பல துறைகளைப் பற்றி அறிந்திருப்பது உலகுக்குக் கிடைத்தற்கரிய செல்வமாகும்.

★ உனக்குள் அளவற்ற ஆற்றலும் அளவற்ற அறிவும் வெல்ல முடியாத சக்தியும் இருக்கின்றது.

★ உண்மையானது, நல்லது என்று நீ எதனைப் புரிந்து கொண்டாயோ அதனை உடனே நிறைவேற்று

★ உன் மனச்சாட்சிப்படி செயல்புரி, நம்பிக்கைக்குரிய நட்பே வேண்டும்.

★ வாழ்க்கையில் இதுவரை நல்ல விடயங்கள் செய்யாவிடினும் பரவாயில்லை. இனியாயினும் செய்ய முற்படுங்கள். அது உங்களுக்கு நற்கதியைக் கொடுக்கும்.



★ இன்ப, துன்பம், லாப நஷ்டம், வெற்றி, தோல்வி என்று எண்ணாமல் கடமைக்காக கடமையாற்று.

★ உனக்கென்று விதிக்கப்பட்ட கடமையைச் செய்ய மட்டுமே உனக்கு முழு உரிமையுண்டு. விளைவுகளுக்கு நீ காரணமில்லை. பலன்களில் உனக்கு அதிகாரமுமில்லை.

★ ஆசைகளால் பாதிக்கப்படாதவனே அமைதியை அடைய முடியும்.

★ குழப்பமற்ற நிலையே தெய்வீக நிலையாகும். இந்த நிலையடைந்தவன் வாழ்வின் கடைசி நேரத்திலேனும் கடவுளைச் சேர்ந்து விடுகிறான்.

★ எந்நேர ஓய்விலும் முன்னேற முயலு.

★ மற்றவர்களின் நன்மைக்காக உன் வாழ்வைத் தியாகம் செய்.

★ சிந்தனை இல்லாத படிப்பு, படிப்பு இல்லாத சிந்தனை இவை இரண்டுமே நடைமுறை வாழ்வுக்கு உதவாமல் தீமையை விளைவிக்க வல்லன.

★ மனித சக்தி எங்கு முடிகின்றதோ அங்குதான் தெய்வசக்தி ஆரம்பமாகிறது.

★ அன்பு, பணிவு, தொண்டு செய்யும் மனம் இவையே இறையுலகின் குடியுரிமைத் தகுதிகள்.

*ப.அபி*



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................................................................

முகவரி :- ....................................................................

..................................................................................

........................ ........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# பிச்சைக்கார தொல்லை....



யாழ்ப்பாணத்தில் மலிவாகக்
கிடைப்பது பிச்சைக்காரர்களின்
தொல்லை
குடித்துவிட்டும்
வெற்றிலை சாப்பிட்டு விட்டும்
கும்மாளம் அடிக்கின்றார்கள்
தர்மம் பண்ணுங்க அம்மா
போக பஸ்காசு இல்லையம்மா
அவருக்கு நோய் என்று
மாறி மாறி காசு கேட்கும்
கணவன் மனைவி
பிள்ளைக்கு சாப்பாடு
வாங்கனும் அம்மா
உழைச்சு சாப்பிட
இரண்டு கையும்
இல்லை அம்மா– ஒற்றை கால்
இல்லை அம்மா – என்று
எத்தனை குரல்கள்
யாழ்ப்பாணப் பேருந்தினுள்ளும்
பேருந்து நிலையங்களிலும்
கேட்கின்றன உலகம்
மாறிக்கொண்டு போகின்றது!
அபிவிருத்தி அடைந்து
செல்கின்றது இலங்கை இப்படி
இருக்கும் எங்கள் நாட்டில்
பிச்சைகாரருக்கு முற்றுப்புள்ளி
வைப்பது எப்போது?

*ச.புவித்ரா, தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்.*

உசன் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தின்
53ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின்
அனுசரணையுடன் நடத்தப்படும்
மாபெரும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
OVER GAME
விண்ணப்ப முடிவுதிகதி: 08.11.2013
மாலை மற்றும் இரவு மின்னொளியில் நடத்தப்படவுள்ளது
யாழ். மாவட்டத்திலுள்ள ஆர்வமுள்ள கரப்பந்தாட்ட அணிகள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பிக்க தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்: 077 412 9348, 077 653 4278
(C/13476) (4.6)
ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம், உசன், மிருசுவில்



இதோ!
சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்
சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567
(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)
(1266)(5.6.3)



யாழ்ப்பாண மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
கலந்துரையாடல்
சகல அங்கத்தவர்களுக்கும்,
29.10.2013 ஆம் திகதி பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும் மற்றும் புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு தங்கள் பாரவூர்திகளை ஈடுபடுத்தல் தொடர்பாக ஆராய்வதற்குமான கலந்துரையாடல் **எதிர்வரும் 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கத்தலைமைக் காரியாலயத்தில்** நடைபெற இருப்பதனால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
(C/13478)(4.6)
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில்.
தலைவர்,
யா.மா.பா.உ.கூ.சங்கம்.


## வர்த்தகசுட்டி பட்டியலில் இலங்கை பின்னடைவு

கொழும்பு, ஒக்.31

தொழில் முயற்சியை நடத்து வதற்கான சிறந்த இடங்கள் பட்டியலில் இந்த வருடம் இலங்கை 4 இடங்கள் பின்னோக்கி நகர்ந்துள்ளது.

உலக வங்கி கடைசியாக வெளியிட்ட 2013 தொழில் முயற்சியை நடத்துதல் சுட்டியில் முன்னர் 81 ஆவது இடத்திலிருந்த இலங்கை 85 ஆவது இடத்துக்குப்பின் தள்ளப்பட்டுள்ளது. எனினும், சகல தென் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை முன்னணியில் உள்ளது. (ச)

## வத்தளைப் பிரதேச சபையில் கைகலப்பு

கொழும்பு, ஒக்.31

வத்தளை பிரதேச சபை கூட்டத் தொடரில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இரு வருக்கிடையே கைக லப்பு ஏற்பட்டமையால் சபையில் செவ்வாய்க்கிழமை பதற்ற நிலை ஏற்பட்டது.

சிரேஷ்ட உறுப்பினர்களான என்டன் குரே மற்றும் சனத் பியசிறி ஆகியோருக்கிடையிலேயே இந்தக் கைகலப்பு ஏற்பட்டது.

சபையின் தலைவரும் இதர உறுப்பினர்களும் தலையிட்டு இருவருக்குமிடையிலான கைகலப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது

பலாங்கொடை,ரந்தோல பாடசாலைக்கு அருகில் ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பலாங்கொடை பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.


தவறிவிட்டது
கடந்த 23.10.2013 அன்று குணபாக்கிய துரை ஆகிய எனது 912213285V இலக்கமுடைய NIC, ATM கார்ட், உயர் தொழில் நுட்பக்கல்லூரி IC அடங்கிய கைப்பேர்ஸ் K.K.S. ரோட்டுக்கும் நல்லூருக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.
தொடர்பு: 075 628 2751
(39591) (6.4)



10 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டி வாழ்த்தும்

செல்வன் சுஜேந்திரன் பவித்திரன்
இன்று (31.10.2013) வியாழக்கிழமை தனது 10 ஆவது பிறந்ததினத்தை கொண்டாடும் இந்நாளில் கடந்த புலமைப்பரிசில் பரீட்சையிலும் யா/இந்து ஆரம்பப்பாடசாலை மாணவனாக 163 புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்தமையையும் பாராட்டுவதுடன் பவித்திரன் மேலும் பல சிறப்புகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
16/1, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(39583) (6,45)
வாழ்த்துவோர்:
அம்மா - அப்பா,
தம்பி, அம்மப்பா,
அப்பம்மா.



சிவமயம்
கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம்
கந்தபுராண படன நிறைவு
நிகழும் விஜயவருஷ கந்தபுராண படன நிறைவு வெள்ளிக்கிழமை (01.11.2013) இடம்பெற திருவருள் பாலித்துள்ளது.
காலை 7 மணிக்கு வள்ளியம்மை திருமண படனப் படிப்பு ஆரம்பமாகி மாலையில் நிறைவுறும்.
தொடர்ந்து கந்தபுராண படனப் பூர்த்தி உற்சவம் இடம்பெறும்.
பௌராணிகர்களையும், அடியார்களையும் கலந்து திருவருள் பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
- பரிபாலன சபையினர் -
(C/13479)(12.6)



Blue Skyy in
இனிய தீபாவளி வாழ்த்துக்களும் விசேட சலுகைகளும்
HONDA

ஹொண்டா ஸ்கூட்டர்களுக்கு Full Tank பெற்றோல் இலவசம்
ஏனைய ஹொண்டா மோட்டார் சைக்கிள்களுக்கு விசேட விலைக்கழிவுகள்


01.11.2013 தொடக்கம் 07.11.2013 வரை மட்டுமே விசேட சலுகைகள்
(C/13463)
Note: all are price with out VAT
BLUE SKYY AGENCY
#173, K.K.S ROAD, CHUNNAKAM
PHONE: 021 720 1103 HOT LINE: 0773320596
Free

&
Authorized Sales and Spare Parts Dealer: Stafford Motors co.(Pvt)ltd.

# வடக்கு, கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் விரும்பவில்லை

## முஸம்மில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

கிழக்கு மக்கள் விரும்பினால் வடக்கு, கிழக்கு இணைப்பு நிச்சயம் இடம்பெறும். அதைத் தடுக்க முடியாது என வடமாகாண முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் அறிவிப்பு விடுத்துள்ள நிலையில், வடக்குக் கிழக்கை மீண்டும் இணைக்கும் தேவை முஸ்லிம் மக்களுக்கு இல்லை என்று முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பு தெரிவித்துள்ளது.



கொழும்பில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவ்வமைப்பின் இணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மொஹமட் முஸமில் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் தற்போது வெகுவாகப் பேசப்பட்டு வருகின்றது. கிழக்கு மாகாண சபையில் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் மக்கள், வடக்கு கிழக்கு இணைப்பைக் கோரவில்லை. ஒன்றாக இணைந்து வாழவே அவர்கள் விரும்புகின்றனர். இதேவேளை, வேலுப்பிள்ளை பிரபாகரன், கெப்பிட்டிப் பொலவைப் போன்றவர் என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் கெப்பிட்டிப்பொல நாட்டுக்கு துரோகம் செய்த வெளிநாட்டவர்களால் கொல்லப்பட்டார் என்றும் முஸமில் குறிப்பிட்டுள்ளார். (ச-10)

## அறிவியல் நகரில் தொழிற்பயிற்சி நிலையம்

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அறிவியல்நகரில் இளைஞர், யுவதிகளின் தொழில்சார் கற்கைநெறிகளை வளப்படுத்தும் வகையில் ஜேர்மன் நாட்டு அரசினால் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

சுமார் 750 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் மேற்படி தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் எதிர்வரும் 2015ஆம் ஆண்டு நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தினூடாக ஒரேநேரத்தில் சுமார் அறு நூறு பேர் வரையில் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-6)

## மீளாய்வுக் கூட்டம்

நெல்லியடி, ஒக். 31

வடமராட்சி வலய அதிபர்களுக்கான மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வலயக் கல்வி அலுவலக முகாமைத் துவமண்டபத்தில் இன்றுபிப.2 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-35)


## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கந்தையா



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கந்தையா நேற்று (30.10.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான, பொன்னம்பலம்,அன்னலட்சுமி மற்றும் செல்வரத்தினம், சின்னத்துரை, (Doctor-வவுனியா), இராசநாயகம், வேலுப்பிள்ளை, இராசமணி, இந்திரபுவனானந்ததேவி, பூபாலசிங்கம் (இலட்சுமி ஸ்ரோர்ஸ், நுணாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வநாயகி, காலஞ்சென்ற வேலாயுதர் மற்றும் சரஸ்வதி, செந்தில்வள்ளி, செல்வமலர், தேவாம்பிகை காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சின்னத்துரை, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(31.10.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி வடக்கு, தச்சன்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
கைதடி வடக்கு, கைதடி. (C/ 13487) (5.6)

## மரண அறிவித்தல்



### செல்வி மணியம் திருச்செல்வம்

(மணிஅக்கா)

காலஞ்சென்ற வேலும்மயிலும் சட்டத்தரணியின் மருமகளான செல்வி மணியம் திருச்செல்வம் (மணிஅக்கா)நேற்று (30.10.2013) புதன்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேலும்மயிலும் ஞானவடிவு, தயானந்தராஜா, சுமித்திரா, கமறன், யுவன், நித்தியானந்தராஜா, மயில்வாகனராஜா, சித்திரா, கமலேஸ்வரன் ஆதர்ஷன், கேஷாந்த், ஆனந்தராஜா கிருஷ்ணராஜா, விஷ்ணுபவன், ஜெயந்தினி. (சி/13376)(6.4)

Tel:077 753 5597

## துயர் பகிர்தல்



எமது பாடசாலை ஆசிரியர் திருமதி தேவகி ஷர்சன் அவர்களது சகோதரனும் எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் உறுப்பினருமாகிய

**சுப்பிரமணியம் சிவதாசன்**

அவர்கள் 24.10.2013 வியாழக்கிழமை லண்டனில் இயற்கை எய்தியதை அறிந்து அதிர்ச்சிக்குள்ளானோம்.

அன்னாரின் மறைவில் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள்
யா/கச்சாய் அ.த.க.பாடசாலை,கொடிகாமம். (29687) (5.6)

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ப.ஸ்ரீதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**வல்லிபுரம் பத்மநாதன்**

அவர்கள் (29.10.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அவருடைய ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு அவருடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி, பளை. (29688) (7.6)

## மரண அறிவித்தல்

### றஞ்சிற் மாசிலாமணி



யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட றஞ்சிற் மாசிலாமணி (28.10.2013) திங்கட் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி- புவனேஸ்வரி (லண்டன்) தம்பதியரின் அன்பு மகனும், மீனலோசினியின் அன்புக்கணவரும், செல்வன் மாசிலாமணி, நீலலக்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

"முருகன் பதி"
12, பல்கலைக்கழக வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: (39600) (6.4)
சற்குனேஸ்வரி ரூபசிங்கம்
(குழந்தை அன்ரி) சிறிய தாய்.

## மரண அறிவித்தல்



அமரர்

### Dr. வல்லிபுரம் பத்மநாதன்

[கிளி]

(வைத்தியர், கண்ணகி கிளினிக்)

(தலைவர் விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்).

ஏழாலையை பிறப்பிடமாகவும் விசுவமடு வள்ளுவர் புரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. வல்லிபுரம் பத்மநாதன் 29.10.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் இளையாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சாவித்திரியின் அன்புக் கணவரும், பகீரதன் (கண்ணகி ஹாட்வெயார், வள்ளுவர்புரம்) சிறீதரன் (சமுர்த்தி அலுவலர் - பளை) கேதீஸ்வரன் (ஆசிரியர், மு/இருட்டுமடு தமிழ் வித்தியாலயம்) வசிகரன் (குடியேற்ற உத்தியோகஸ்தர் கிளிநொச்சி) மயூரதன் (பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும். கலைமகள் (ஆசிரியர், சுதந்திரபுரம் G.T.M.S) கவிதா, சித்திரா(தேராவில் தமிழ் வித்தியாலயம்) மயூரினி, சுகன்ஜா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும். சாரமிலன், தனஞ்சனா, கிறிஸ்மிகா, தரணிகன், கிருசிகன், வர்சகன், கிருசிகா, ஆகியோரின் அன்புத் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிஜைகள் இன்று (31.10.2013) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் 12ம் கட்டை, விசுவமடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அணைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

12ம் கட்டை,
வள்ளுவர்புரம்,
விசுவமடு.

தகவல்:
குடும்பத்தினர்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 01 . 08 . 1935



மறைவு 24 . 11 . 2008

திதி: துவாதசி (31.10.2013)

### அமரர் நாகமுத்து நாகலிங்கம்

அன்புத் தந்தையே நீங்கள் எமை விட்டுப் போன தூரம்
ஐந்தாண்டு ஆனாலும்' உங்கள் அன்பும் பரிவும்
எம் கண்ணுக்குள் எட்டிப்பார்த்த வண்ணமே தெரிகிறது
இமைகள் இமைக்க மறந்தாலும்
இதயம் உங்களை நினைக்க மறக்கவில்லை அப்பா!
எங்கள் குடும்பம் ஒளி வீச உற்ற துணையாய் நின்ற அப்பாவே
எமது நினைவுப் பூக்களை உங்கள் பாதங்களுக்கு சமர்பிக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பத்திரகாளி கோவிலடி.
அராலி தெற்கு,

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## அந்தக் கரணங்களது மூன்றாவது குறைபாடு யாது?

அந்தக் கரணங்களது மூன்றாவது குறை கரண அபாத் தவம். மனிதனின் கருவிகளின் இயலாமை அல்லது பலவீனத்தை இது குறிக்கின்றது.

இந்தப் பலவீனம், அகக் கருவிகளாய் அந்தக் காரணங் களையும், புறக் கருவிகளாய் புலனுறுப்புகளையும் தாக்க வல்லது.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை



தவத்திரு யோகசுவாமிகளின் குருபூஜை பொன் விழாவை யொட்டி யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி முகாமையாளர் ஆர்.குலசிங்கத்துக்கு சிவதொண்டன் பவளவிழா மலர் சுவாமி சித்ருபானந்தாவால் வழங்கப்பட்டது. (அ)

## கொத்தணி வெள்ளி விழா இன்று

யாழ்ப்பாணம், ஒக்.31

வலிகாமம்பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் கொத்தணியும் அங்கத் துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் கொத்தணியின் வெள்ளி விழாநிகழ்வுகள் இன்று வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு வலி காமம் கொத்தணி கலையரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கொத்தணி தலைவர் செ.செல் வராசா தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தினம், ஸ்தாபகத் தலைவர் சு.நடேசு, முன்னாள் பொது முகாமை யாளர் க.சந்திரராசா ஆகி யோரது நினைவு தினமும் புலமைப் பரிசில் வழங்கல், ஓய்வு நலக் கொடுப்பனவு வழங்கல் என் பனவும் இடம்பெறும். (வ-14)

## ஆயுள்வேத சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஒக்.31

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு அராலி உப அலுவலகத்தில் ஆயுள் வேத மருத்துவ சிகிச்சை முகாமும் புத்தகக் கண்காட்சியும் உபஅலுவலக பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்றன. இதில் 200 பாடசாலை சிறுவர்களுக்கு இலைக் கஞ்சி வழங்கப்பட் டது. 150 பேர் மருத்துவ முகாமில் கலந்து பயன்பெற்றனர். (ஒ-41)

## வாசிப்பு மாத நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக்.31

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை, சாவகச்சேரி பொது நூலகங்கள் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு முன் பள்ளிச் சிறார்களுக்கான போட் டிகளை இன்று நடத்தவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொது நூலக மண் டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு கதை சொல் லும் நேரம் போட்டியும் மீசாலை பொது நூலக மண்டபத்தில் மு.ப.10 மணிக்கு சொல்வளப் போட்டி யும் இடம்பெறுமென நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவித்தார். (வ-9)

* * *

கிளிநொச்சி, ஒக்.31

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் உப அலுவலக மான கண்டாவளைப் பிர தேசத்துக்கு உட்பட்ட முரசு மோட்டை பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளளது.

முரசுமோட்டை பொது நூல கத்தின் புத்தகக் கண்காட்சி இன்று முற்பகல் 10 மணி முதல் மாலை 4 மணி வரை நூல கத்தில் நடை பெறவுள்ளது.

முரசுமோட்டை பொது நூல கத்தின் வாசகர் வட்டமும் இணைந்து ஏற்பாடு செய் துள்ள இந்த நிகழ்வில் கரைச் சிப் பிரதேசசபை தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள், பிரதேசசபை அதிகாரிகள், மாண வர்கள், வாசகர் கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-6)



## கட்டடப் பணிகளின் போது இருவர் காயம்

தென்மராட்சி, ஒக்.31

கட்டடப் பணியின் போது ஏணி மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒரு வரும், சார மரம் முறிந்து வீழ்ந்ததில் மற்றொருவரும் காயமடைந்தனர். திங்கட்கிழமை மாலை மட்டு வில் பகுதியில் கட்டடப் பணியின் போது ஏணி மரம் முறிந்ததில் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஆறு முகம் யோகநாதன் (வயது-66) என்பவரும், சாவகச்சேரிப் பகுதியில் சார மரத்தில் நின்று தேநீர் பருகும் போது அது முறிந்ததில் சாவகச்சேரி கச் சாய் வீதியைச் சேர்ந்த அருமை நாயகம் ஞானச்சந்திரன் (சேகர்) (வயது-40) என்பவரும் காயங் களுக்கு இலக்கான நிலை யில் சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர். (வ-9)

## கும்பாபிஷேகம்

சுழிபுரம், ஒக்.31

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலைச் சங்க வளாகத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேம்படியாள் விநாயகப் பெரு மான் ஆலய நூதன பிரதிஷ்டா மகா கும் பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்றையதினம்காலை 7 தொடக்கம் 8 மணி வரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும். கும்பாபிஷேக கிரியை களை சிவஸ்ரீ சபா. வாசு தேவக் குருக்கள் நிறை வேற்றிவைப்பார் நண் பகல் அன்னதானம் வழங்கப்படும். (ஒ-28)

## முதியோர் சங்க பொதுக் கூட்டம்

நவாலி, ஒக்.31

நவாலி கிழக்கு முதி யோர் சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கி.பவு லின் தலைமையில் நவாலி பொது நோக்கு மண் டபத்தில் நடை பெறும். (வ-100)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



மலர்வு
30.05.1931

உதிர்வு
01.10.2013

அமரர் கந்தையா நடராசா

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - யாழ்.மாநகர சபை)

திதி : துவாதசி [31-10-2013]

முப்பத்தோர் நாள்கள் முற்றுப்பெற்றன - எனினும்
முத்தான உம் நினைவுகள் முடிவுறா சரிதமாய்
நெஞ்சில் நின்று நீங்காது பதிந்து
நெருட வைக்கும் நெகிழ வைக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(39594) (7.6.3)

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில்
12.04.2006

பிதாவின் மடியில்
31.10.2011

பிறெய்சி கரோலின் யூட் செல்வக்குமார்

அம்மா உன் அழகிய முகமும், மழலைப் பேச்சும்,
நீ செய்த குறும்புகளும்
எம் நெஞ்சங்களை இன்றும் நனைக்கின்றன.
ஆறாதம்மா எம் துயரம்
ஈராண்டு கடந்தாலும்........

என்றும் நீங்கா நினைவுகளுடன்:-
அப்பா, அம்மா, பெரியண்ணா,
அக்கா, குட்டியண்ணா.
மற்றும் மாலா மாமி, பிரபா மாமி
குடும்பத்தினர்

54/2, கொழும்புத்துறை வீதி.
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

(39578)(12)(3)

## கண்ணீரில் கலந்த நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## கண்ணீரில் கலந்த முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகம் 24.08.1926 — விண்ணுலகம் 21.06.2009

அமரர் குமரையா துரைசிங்கம்



மண்ணுலகம் 25.06.1929 — விண்ணுலகம் 11.11.2012

திருமதி இலட்சுமி துரைசிங்கம்

திதி : வியாழக்கிழமை (31.10.2013)

ஆலமரம்போல் நிழல் தந்தீர்கள் அன்பு எனும் பாசமழை பொழிந்தீர்கள்
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் ஆறாது உங்கள் துயர் புன்முறுவல் சிரிப்பும்
புலமைதோய் முகமும் இனிதான பேச்சும் பணிவான பார்வையும்
காலனவன் கணக்கேட்டில் நின்றதுவோ தங்களின்...
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும் ஆழிகடலலை இவ்வுலகை
அழித்தாலும் மாறாது உம் நினைவுகள் என் மனதிலிருந்து என்றும்.

"கருணை இல்லம்"
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

உங்கள் இருவரது
நினைவுகளை சுமந்து
பேரன் : ஜீத்தேஷ் (ஜித்) - ரூபன் (அப்பன்)
மற்றும் குடும்பத்தினர்.

(33327 (7.6.3)

## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் லோகநாதன்

(இளைப்பாறிய மக்கள் வங்கி முகாமையாளர் - நெல்லியடி)

புலோலி உபயகதிர்காமத்தைப் பிறப்பிடமாகவும், பருத்தித் துறையை வதிவிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் லோகநாதன் 26.10.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென் றவர்களான பொன்னம்பலம்-பறுபதபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாசினிதேவியின் அன்புக் கணவரும், இந்துமதி (UK), அன்புமதி (Philippines), மதியழகன் (Canada), வளர்மதி (Canada), அருள்மதி (Canada), ராஜமதி (Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், பார்வதிப் பிள்ளை, கணேசலிங்கம், தில்லைநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜேந்திரன் (UK), ஜெயமுருகன் (Philippines), வதனி (Canada), சிறிதரன் (Canada), நிறைமதிகுமார் (ரவி - Canada), மோகனதாஸ் (பாலன் - Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுவர்க்கா, சிந்தூரன், மதுர்ஷனா, கோகுலன், குறிஞ்சி, வருண், கவின், சூரியா, சுரேன், மிருணா, மதுரா, ராகவி, விகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (02.11.2013) மு.ப 09.00 - 11.00 மணியளவில் (Ogden Funeral Homes, 4164 Sheppard Ave E, Scarborough, Ontario, ON MIS IT3, Canada) நடைபெற்று ந.ப 12.00 மணியளவில் (St.John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Road, Toronto, ON M4L 1S7, Canada) தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ.அருணகிரிநாதன்
(மைத்துனர்) கனடா

தொடர்புகளுக்கு:
மதியழகன் (கனடா - தொலைபேசி +14162859894
செல்லிடப்பேசி +16472939894)
இந்துமதி (பிரித்தானியா - தொலைபேசி - +442088549891)
அன்புமதி (பிலிப்பைன்ஸ் - தொலைபேசி - +639085304389)
வளர்மதி (கனடா - தொலைபேசி - +14169309894)
அருள்மதி (கனடா - தொலைபேசி - +16474038310)
ராஜமதி (கனடா - தொலைபேசி - +14167354520)
அருணகிரிநாதன் (கனடா - தொலைபேசி - +16473421725
செல்லிடப்பேசி +16472854536)

(29585)
(7.6.3)

# கண்ணீர் அஞ்சலி



# Dr. வல்லிபுரம் பத்மநாதன்

ஏழாலை வடக்கு, ஏழாலை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வள்ளுவர்புரம், விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. **வல்லிபுரம் பத்மநாதன்** (முல்லை மாவட்டத்தின் சிறந்த கூட்டுறவாளரும், விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பெரும் மதிப்பிற்குரிய தலைவரும், கண்ணகி வைத்திய நிலையத்தின் உரிமையாளரும் ஆவார்).

சுய நலம் பாராது
சமூகத்தின் நலனுக்காக
அயராது உழைத்த
எங்கள் தலைவனே!

கடமையில் கண்ணியமாய்
காலம் தவறாது
சேவைகளைச் செவ்வனே செய்த
சிறந்த கூட்டுறவாளனே!

இரவு பகல் பாராது பல
இன்னல்களையும் இடர்களையும் தாண்டி
சமூக நலன் புரிந்த
சமூக சேவையாளனே!

போரின் கொடிய பிடியிலிருந்து
மீண்டும் புத்துயிர்ப்பு பெற்று
சமூகத்துக்கு சேவையாற்ற வந்த
சமூக ஆர்வலனே!

தன் கடமைதனை காத்திரமாய் நிறைவேற்றி
பணிபுரிந்து வரும் வேளைதனில்
காலனவன் அரவம் வடிவெடுத்து
கௌவிச் சென்றதேனோ?

அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**விசுவமடு
விவசாயிகள் ப.நோ.கூ.சங்கம்,
விசுவமடு.**

**பணிப்பாளர்கள்,
பொது முகாமையாளர்,
பணியாளர்கள்.**

(37571)(10.6)

# சாவகச்சேரி நகர எல்லைக்குள் கோழி இறைச்சி விற்கத் தடை

தென்மராட்சி, ஒக்.31
சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் கோழி இறைச்சி விற்பனைக்கு நகர சபையால் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கோழி வளர்ப்போர் உயிருடன் கோழிகளை விற்கலாம் எனவும் கடை அமைத்தோ அல்லது வீடுகளிலோ இறைச்சி விற்பனை செய்வது முற்றாகத் தடை செய்ய வேண்டும் எனவும் கடந்த மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
நகர சபையால் இரண்டு கோழி இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோதிலும் பல இடங்களில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுவதால் தமக்கு வியாபாரம் பாதிக்கப்படுவதாக குத்தகையாளர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து மாதாந்தக் கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப்பட்டு நகரசபை எல்லைக்குள் கோழி இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்படுவதாகத் தலைவர் தெரிவித்தார். (வ-9)

# பனை வளத்தில் ஆர்வம் காட்டாத வடக்கு மக்கள்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.31
கிழக்கு மாகாணத்தில் வருடாந்தம் பனை வளத்தின் ஊடாக 3 கோடி ரூபா வருமானத்தை பனை சார் உற்பத்தியாளர்கள் பெற்றுக் கொள்ளும் நிலையில் வடமாகாணத்தில் அவற்றின் மீது மக்கள் ஆர்வம் காட்டாததால் கிடைக்கக்கூடிய பெரிய தொரு வருமானம் இழக்கப்படுகிறது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
வடமாகாண பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் 91ஆவது சர்வ தேச கூட்டுறவு தின விழா வும் கௌரவிப்பு விழாவும் திங்கட்கிழமை சமாச கூட்டு றவாளர் மண்டபத்தில் சமா சத் தலைவர் நா.கணேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது மேலும் தெரிவித்ததாவது:-
பனை வளம் எமது வாழ்வையும் தேசத்தையும் கட்டியெழுப்பக்கூடியது. போர்ப் பாதிப்புகளால் பனை வளங்களுக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டது. அவ்வாறானதொரு தடங்கல் ஏற்படாமல் இருந்திருந்தால் பனைசார் உற்பத்திகளில் பல வளர்ச்சியைக் கண்டிருக்கலாம்.
வட மாகாண சபையின் இலச்சினையில் பிரதானமாக பனை குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்தப் பனை வளத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். 9.5 வீதமான பனை வளம் இருப்பதாகக் கருதப்படும் நிலையில் அதிகமான வளம் பயன்படுத்தப் படுவதில்லை.
வடமாகாண சபை இதற்கு முன்னுரிமை கொடுத்து பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும். பல கோடி ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தைப் பெற்றுத்தரக்கூடிய பனை வளம் எம்மிடம் உள்ள போதும் துறை சார்ந்த தொழிலை அதிகமானோர் விரும்புவதில்லை. காலத்துக்கு ஏற்ப மாறிவிட்டனர். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். நவீன காலத்துக்கான உற்பத்திப் பொருள்களைத் தயாரித்து சந்தைப்படுத்துவதன் ஊடாக பொருளாதார முன்னேற்றத்தைக் காணவேண்டும்.
கிழக்கு மாகாணத்தில் சமூகம் சாராதவர்கள் இதனை மேற்கொண்டு வருடாந்தம் 3 கோடிக்கு மேல் வருமானத்தைப் பெறுகிறார்கள். அவ்வாறு இருக்கும்போது வடமாகாணத்தில் ஏன் அவ்வாறானதொரு நிலைமை கொண்டுவர முடியாது. இதற்கான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்- என்றார். (வ-14)

## உள்ளம் உவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (31.10.2013) மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் CIVIL ENGINEERING (DIP) பட்டம் பெறும் செல்வன்
**தில்லைநாதன் கிசோக்குமார்**
அவர்கள் மேன்மேலும் பட்டங்கள் பல பெற்று கல்வியில் சிறக்க வாழ்த்துகின்றோம்.
Congratulations
வாழ்த்துவோர்:
செந்தில்குமார்-ரஜனி தம்பதிகள்.
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(38660)(14.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**நாகராசா மகேந்திரராசா**

யாழ். இந்துவின் ஆரம்பப் பாடசாலையில் புதிய அதிபராக கடைமையேற்றிருக்கும் யாழ் இந்துவின் பழைய மாணவன் திரு நாகராசா மகேந்திரராசா அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.
யாழ் இந்துக்கல்லூரி
91ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு
பழைய மாணவர்கள்.
(சி.12819)(17.14)

# மாந்தை கிழக்கில் தடையின்றி நடைபெறும் வீட்டுத் திட்டப் பணி

வலிஹென்மேற்கு ஒக்.31
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட பயனாளிகளின் நலன் கருதி வீடு கட்டுவதற்குத் தேவையான மணல், மரங்கள் போன்ற மூலப் பொருள்களை இலவசமாக வழங்க முன்வந்துள்ள பிரதேச செயலர் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிப் பத்திரத்தையும் வழங்கி வருகின்றார்.
இதனால் மணல், மரங்கள் கிடையாமல் வீட்டு வேலையை ஆரம்பிக்க முடியாமல் திண்டாடிய மக்கள் அவசர அவசரமாக வீட்டு வேலையை ஆரம்பித்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மணல், மரங்கள் போன்றவற்றை இலவசமாகவும், இலகுவாகவும் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்ட பிரதேச செயலர் அதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கி வந்தார்.
இதனால் பயனாளிகள் குறித்த ஆறுகளிலிருந்து மணலைப் பெற்றுவந்ததுடன், காடுகளில் உள்ள பட்ட மரங்களையும், உள்ள பட்ட மரங்களையும் தங்கள் சொந்தக் காணிகளில் உள்ள பழைய மரங்களையும் வெட்டி வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர்.
இது குறித்து அறிந்து கொண்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கெடுபிடியால் பிரதேச செயலரால் வழங் கப்பட்டுவந்த அனுமதிப் பத்திரம் உடனடியாக நிறுத்தப்பட்டது. இதனால் பயனாளிகள் வீட்டு வேலை களை நிறைவு செய்ய முடி யாமல் திண் டாடினர்.
இந்த நிலை யில் மக்களின் நிலைப்பாடு குறித்து உணர்ந்து கொண்ட பிரதேச செயலர் வீடு கட்டுவதற்குத் தேவையான பொருள்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உத வியுடன் பயனாளிகள் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். இதற்கான அனுமதிப் பத்திரங்கள் பிரதேச செயலரால் மட்டுப் படுத்தப்பட்ட அளவில் பய னாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.
(வ-115)

## விற்பனைக்கு

கடா ஆடும், நாம்பன்கன்றும், வேப்பமரம், இலுப்பை மரம், பலாமரம் விற்பனைக் குண்டு
வே.சூரியகுமார், 10 கல்லூரி வீதி, கோக்குவில்.
தொடர்பு : 021 222 7217
(39595)(18.3)

## குறைந்த விலையில் சொகுசான பயணம்

தினசரி கொழும்பு – சென்னை Rs. 7,250/-
கொழும்பு – சென்னை – கொழும்பு Rs. 13,740/- upwards
திருவனந்தபுரத்துக்கு இப்போது சென்னை வழியாக இணைப்புண்டு
ONE WAY fare Rs.8,996/- upwards
and return Rs. 19,960/-upwards
AIR-INDIA express



✓ Baggage allowance 37 kgs.
✓ Complementary Meals provided
✓ Groups fares offer only over 10 passengers.
Contact for further information:
World of Hayleys
47, Stanley road, Jaffna.
Ph: 021 2221878, 0777730818
or nearest Travel agents
108, YMBA Building, Sir Baron Jayathilake Mawatha, Colombo 01.
011 2168083/ 011 2168082/ 011 2168081
www.airindiaexpress.in
skyline

# பாம்பு தீண்டியதில் வயோதிபர் சாவு

விசுவமடுவில் உள்ள நெல் வயலில் தமது காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கட்ட வேலைகளுக்காகச் சென்ற ஏழாலை வாசி ஒருவர் விஷப் பாம்பு தீண்டி சாவடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசுவமடு வள்ளுவர்புரத்தில் இடம் பெற்றது.
பாம்பினால் கடியுண்டவர் அவசர அவசரமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸில் கொண்டு வரப்பட்டபோதுநிலைமை மோசமடையவே அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அந்த வேளையில் அவரின் உயிர் பிரிந்து விட்டது. ஏழாலை தெற்கு களபாவோடையைச் சேர்ந்த வல்லிபுரம் பத்மநாதன் (வயது -68) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-9)

## வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்(வ-து)
## கிளைக்குழு தேர்தலுக்கான வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்

01) 31.05.2013 ஆம் திகதியில் பூர்த்தியாக்கப்பட்ட 20 சங்கக் கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் கீழ்காணும் கிளைகளில் 04.10.2013 தொடக்கம் 10.11.2013 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

| இல. | காட்சிப்படுத்தும் இடம் | கிளை இலக்கம் | கிளையின் பெயர் |
|---|---|---|---|
| 01. | மருதங்கேணி கிளை - 01 | 01 | மருதங்கேணி |
| 02. | கிளை - 02 | 02 | தாளையடி |
| 03. | வத்திராயன் கி.அ.காரியாலயம் | 03 | வத்திராயன் வடக்கு |
| 04. | வத்திராயன் கி.அ.காரியாலயம் | 04 | வத்திராயன் |
| 05. | உடுத்துறை கி.அ.காரியாலயம் | 05 | உடுத்துறை |
| 06. | ஆழியவளை கி.அ.காரியாலயம் | 06 | ஆழியவளை |
| 07. | வெற்றிலைக்கேணி கிளை-07 | 07 | வெற்றிலைக்கேணி |
| 08. | முள்ளியான் கி.அ.காரியாலயம் | 08 | முள்ளியான் |
| 09. | கேவில்போக்கறுப்பு கி.அ.காரி. | 09 | கேவில் |
| 10. | செம்பியன்பற்று தெற்கு கிளை-10 | 10 | செம்பியன்பற்று தெற்கு |
| 11. | செம்பியன்பற்று வடக்கு கிளை-11 | 11 | செம்பியன்பற்று வடக்கு |
| 12. | மாமுனை கிளை-12 | 12 | மாமுனை |
| 13. | நாகர்கோயில் தெற்கு கி.அ.காரி. | 13 | குடாரப்பு |
| 14. | குடத்தனை கிளை-19 | 14 | நாகர்கோயில் தெற்கு |
| 15. | நாகர்கோயில் வடக்கு கி.அ.காரி. | 15 | நாகர்கோயில் வடக்கு |
| 16. | அம்பன் கிளை-16 | 16 | அம்பன் |
| 17. | குடத்தனை வடக்கு கிளை-17 | 17 | குடத்தனை வடக்கு |
| 18. | பொற்பதி கிளை-18 | 18 | பொற்பதி |
| 19. | குடத்தனை கிளை-19 | 19 | குடத்தனை |
| 20. | மணற்காடு கிளை-20 | 20 | மணற்காடு |

தலைமைக்காரியாலயத்தில் 20 கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் உண்டு.
02) காட்சிபடுத்தப்பட்ட வாக்களார் பட்டியலில் சங்க உபவிதிப்படி வாக்காளர் ஆவதற்கு தகுதியிருந்தும் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களும், முழுப்பெயரில் ஏதும் பிழை உள்ளவர்களும், தமது ஆட்சேபனைகளை 15.11.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக செயலாளர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், தாளையடி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மருதங்கேணி. தாளையடி.
31.10.2013
(சி/13486)(5.6)
செயலாளர்,
வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்,

## சாரதி தேவை

AD வாகன சாரதி அனுமதிப் பத்திரம் உள்ள சாரதி தேவை. அடிப்படைச் சம்பளமாக மாதாந்தம் ரூபா 18,000/= வழங்கப்படும்.
தொடர்பு: 021 227 0586
சுஜித் என்ரபிறைசஸ்
டச்சு வீதி, சாவகச்சேரி.
[பழநி ஆண்டவர் ஆலயம் முன்பாக]
(C/2775)(7.6)

## அறிவித்தல்

மு/செம்மலை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 03.11.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மு/செம்மலை மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற இருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
பழைய மாணவர் சங்கம்
மு/செம்மலை மகா வித்தியாலயம்.
(C/13488)(7.6)

# இராணுவத் தலையீடு பற்றி உடனடி விசாரணை தேவை

## வடக்குத் தேர்தல் தொடர்பில் பொதுநலவாய கண்காணிப்பாளர்கள் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 31

"வடபகுதியில் கடந்த மாதம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலின்போது இராணுவத் தலையீடு இடம்பெற்றுள்ளது என எழுந்துள்ள முறையீடு குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்" என பொது நலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கண்காணிப்பாளர்கள் தமது இறுதி அறிக்கையில் இது தொடர்பாக ஏழு பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

அதில் அவர்களால் குறிப்பிடப் பட் டுள்ளவை வருமாறு:-

வடமாகாணசபைக்கான தேர்தல் பரப்புரைக் காலத்தில் இராணுவத் தலையீடும், செல்வாக்கும் ஊடுருவியுள்ளமையை நாம் கவனத்தில் கொள்கின்றோம். இது ஒரு பாரதூர மான செயற்பாடு. குழப்பியடிக்கும் நடவடிக்கை. இந்தத் தலையீடு குறித்தும், செல்வாக்குப் பிரயோகம் குறித்தும் விசாரணை நடத்தப்படவேண் டும். இத்தகைய முறைகேடான செயற்பாடுகள் எதிர்காலத்தில் தவிர்க்கப் படவேண்டும்.

அதேவேளை, பாரபட்சமற்ற முறையில் தம் கடமையை மேற்கொண்ட உள்ளக தேர்தல் அவதானிப்பாளர்கள் மீது வன்முறைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இது குறித்தும் விசாரணை நடத்தப் பட்டு பரிகாரம் காணப்பட வேண்டும்.

ஜனநாயக முன்னெடுப்புகளில் ஈடுபடும் உள்ளகத் தேர்தல் கண் காணிப்பாளர்கள், சுயாதீனமாக செயற்படுவதற்கான பாதுகாப்பு அவசியம். இவர்களின் காத்திரமான பணிகள் சம்பந்தமான விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவேண்டும்.

தேர்தல் பரப்புரைக் காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அங்கீகரிக் கப்பட்ட நடவடிக்கைகளை வலியுறுத்தும் விதிமுறைகளும் மீளாய்வு செய்யப்படவேண்டும். தேர்தல் காலத்தில் பரவலாக மேற் கொள்ளப் படும் அரசு உடைமைகள் துஷ்பிர யோகங்களைத் தடுப்பதற்கான சட்டமும் கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

சுயாதீனமானதேர்தல் ஆணைக் குழுவொன்று நிறுவப்பட வேண்டும். தற்போதைய சட்டங்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அவசியம் ஏற்படின், குளறுபடிக ளுக்கும், குழப்பங்களுக்கும் தூப மிடும் நோக்கமான பேச்சுகளைத் தடுக்க இறுக்கமான நடவடிக்கைகள் அவசியம்.

அரசியல் கட்சிகள், தமது ஆதரவாளர்கள் மேற்கொள்ளும் வன்முறை நடவடிக்கைகளைத் தடுக்க முன்வரவேண்டும். பொறுமைக ளையும், சகிப்புத்தன்மையையும் கடைப்பிடிப்பதற்கான ஒரு கலாசாரத்தை அரசியல் கட்சிகள் உருவாக்கவேண்டும்.

ஊடகங்கள் சுயாதீனமாக சமப்பாடான செய்திச் சேவைகளை மேற் கொள்வதற்கான ஊடகக் கலாசார மும் தோற்றுவிக்கப் படவேண்டும். அதேவேளை, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பும் உத்தரவாதப்படுத்தப் படவேண்டும்.

**செயலாளர் நாயகம்**

வடமாகாணசபைத் தேர்தலுக்கான பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினரின் இந்த அறிக்கையை பொதுநல வாய அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா விடுத்துள்ளார். இது குறித்தும் கமலேஷ் சர்மா குறிப்பிடுகையில்,

"இந்தத் தேர்தல் இலங்கையைப் பொறுத்தமட்டில் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இதைக் கண்காணிப்பதற்கு பொதுநலவாய அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை எமக்கு மகிழ்ச்சியளித்தது.

"தேர்தல் நடத்தப்பட்ட முறைமை குறித்து பொதுநலவாய அமைப்பு கண்காணிப்பாளர் கள் திருப்தி தெரி வித்துள்ளார்கள். வாக்களிப்பில் பெரும் எண்ணிக்கையில் வாக்காளர்கள் பங்குபற்றியிருக்கிறார்கள். தேர்தல் அதிகாரிகள் கடமை உணர் வோடும், அர்ப்பணிப்போடும் செயற்பட்டுள்ளார்கள்.

"இந்தத் தேர்தலுக்குப் பின்னரான சூழ்நிலையும் அமைதியானது. இதற்கான இத்தேர்தலில் பங்குபற் றிய அரசியல் கட்சிகளின் தலைமை களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அதேவேளை, இத்தேர்தலுக்கு முன்னர் நிலவிய நிலைப்பாடு குறித்தே பொதுநலவாய அமைப்புக் கண்காணிப்புக் குழுவி னர் அதிருப்தி வெளியிட்டுள் ளனர்.

"இக்குழுவினரின் கோரிக்கையை நான் ஆதரிக்கின்றேன். தேர்தல் என்பது ஒரு முன்னெடுப்பே. இது ஒரு சம்பவமாகிவிடாது. தேர்தலுக்கு முந்தைய நிலைப்பாடு, ஆட் புல ஒருமைப்பாட்டையும் நம்பகத் தன்மையையும் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும்.

"பொதுநலவாய கண்காணிப்பாளர் குழு, சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு நிறுவப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது. இது பரந்தளவில் பெறுமானமுள்ள பொதுநலவாய அமைப்பின் சிறந்த தொரு செயற்பாடாகும். இலங்கையோடு இணைந்து செயற்படவிருக்கிறோம்.

"இலங்கையின் தேர்தல் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு உதவவும் நாம் தயாராகவுள்ளோம். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்தல் வடபகுதியினதும் முழு இலங்கையினதும் இணக்கப் பாட்டோடு கூடிய அபிவிருத்திகளுக்கு வழிகோலும் என பொதுநல வாய கண்காணிப்புக் குழுவினரும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்கள்.

செப்ரெம்பர் 14ஆம் திகதி முதல் 28ஆம் திகதிவரை இலங்கையில் பொதுநலவாய அமைப்புக் கண் காணிப்புக்குழு தங்கியிருந்தது. தேர்தல் சமயத்தில் இதன் உறுப்பினர்கள் வடமாகாணத்தில் ஐந்து மாவட் டங்களில் கண்காணிப்புக் கட மையில் ஈடுபட்டிருந்தார்கள். (த-சி)

# வடக்கு அமைச்சர்களும் அமெ. தூதுவருடன் பேச்சு



யாழ்ப்பாணம், ஒக். 31

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும், அடுத்த ஆண்டுக்கான உதவித் திட்டங்கள் தொடர்பாகவும் அமெரிக்கத் தூதுவருடன் கலந்துரையாடியதாக, வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்துக்கு நேற்றுப் புதன்கிழமை வருகைதந்த அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சிசன், வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆகியோருடன் கலந்துரையாடல் நடத்தினார்.

சுமார் இரு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர்கள்,

வடக்கு மாகாண சபை தெரிவு செய்யப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட சிநேக பூர்வமான சந்திப்பு இது. தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பில் தெளிவாகக் கூறினோம்.

போரில் பாதிக்கப்பட்டு விசேட தேவை உடையவர்களுக்கான சர்வதேச உதவிகள் தேவை என்றும் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (த-5)

# கசிப்பு விற்றவருக்கு அபராதமும் சிறையும்

யாழ்ப்பாணம், ஒக். 31

சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்தவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதமும் ஒத்திவைத்த சிறையும் விதித்தது நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மாசிலா மணி உதயசோதி என்பவருக்கு எதிராக ஊர்காவற்றுறை பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததோடு அதனைச் சேலுத்தத் தவறின் 3 மாதங்கள் சாதாரண சிறைத் தண்டனையும், மற்றும் ஒரு வருட சிறைத் தண்டனையும் விதித்து 5 வருடங்களுக்கு ஒத்திவைத்தும் தீர்ப்பளித்தது மன்று. (ஐ-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### காளி கோயில்

மேலும் தெரிவித்ததாவது:

ஒரு வருடத்துக்கு மேல் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருந்த தம்புள்ள அம்மன் கோயில் பாதுகாப்புத் தரப்பினரால் உடைத்தழிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாயமாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் வருவாரேயானால் அவரும், பிரிட்டன் பிரதமரும் அம்மன் கோயிலை நேரில் சென்று பார்வையிட வேண்டும்.

இந்த ஆலயம் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் காணி , தம்புள்ள பௌத்த புனிதநகர் திட்ட அபிவிருத்திக்குத் தேவையெனப் பாதுகாப்பு அமைச்சின் நகர அபிவிருத்திச் சபையின் புனித நகர் திட்ட இயக்குநர் எம்.ஏ.தயானந்த கடந்த ஆண்டு எழுத்து மூலம் அறிவித் திருந்தார்.

இவர்களுக்கு மாற்றுக் காணியாக, நகர எல்லைக்குள் 150 மீற்றர் தூரத்தில் பொல்லக்கையில் காணி தரப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். இதனை கோயில் நிர்வாகமும், அங்குள்ள 40 குடும்பங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன.

ஆனால் தற்போது அவர்களுக்குக் குறித்த இடத்தை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மக்களை பணம் செலுத்தி வாடகைக்கு இருக்குமாறும், 20 கிலோ மீற்றர் தூரத்தில் யானைகள் அதிகம் வாழும் திகம்பொதவில் காணி தருவதாகவும் கூறியுள்ளனர். இது தான் தற்போதைய பிரச்சினை.

இந்த அரசு ஒரு சிங்கள பௌத்த அரசு அல்ல. சிங்கள பௌத்தத்தைத் தமது தேவைக்குப் பயன்படுத்தும் அரசு. இந்த அரசில் இன்று அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம், இந்து, ஸ்லாமிய கத்தோலிக்க அரசியல் வாதிகளும் இடதுசாரிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

அம்மன் கோயில்களை விட, பள்ளிவாசல்களை விட, தேவாலயங்களைவிட தங்கள் பதவி இருப்புக்களே இவர்களுக்கு முக்கியமாக இருக்கின்றன என்றார். (த-5)

### வலி.வடக்கு வீடழிப்பு

கும் பகுதி களில் உள்ள வீடுகளை புல் டோசர் மூலம் இடித்துத் தரை மட்டமாக்கும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

இதனைப் பார்வையிடச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பி னர்கள், செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் ஆகியோர் கடந்த திங்கட்கிழமை இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்த நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுடன் பேசுவதற்கு நேற்று முயற்சி மேற்கொண்ட போதும் அவருடன் பேச முடியவில்லை என்றும், இரண்டொரு தினங்களில் இந்த விடயம் தொடர்பில் அவருடன் பேசப்படும் என்றும் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (த-5)

### வலி.வடக்கு வீடுகள்

வலி.வடக்கில் இராணுவத்தினரால் வீடுகள் இடித்தழிக்கப்படுவது தொடர்பில் அவருக்கு எடுத்துரைத்துளோம். இது அரசியல் தொடர்பான விடயம். இலங்கை அரசுடன் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினை.

இவர்களுடன் பேசி எதுவும் செய்ய முடியாது. ஆனால் நடைபெறுவதை விரிவாக எடுத்துரைத்துள்ளேன் - என்றார்.

பொதுநலவாய மாநாட்டுக்கான அழைப்பிதழ் உங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதா? அதில் கலந்துகொள்வீர்களா? என்று ஊடகவியலாளர்கள் மீண்டும் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், இன்னும் அழைப்புக் கிடைக்கவில்லை. அழைப்பிதழ் வரக்கூடும். அப்போது முடிவு செய்யப்படும் - என்றார். (த-5)

### சர்வதேச

தொடர்பிலும் கலந்துரை யாடினோம்.

எதிர்காலத்தில் வடக்கு மாகாண சபைக்குத் தொடர்ந்தும் சர்வதேச உதவிகள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். அத்துடன் தொடர்ச்சியாக வடக்கு முதல்வருடன் சந்திப்புக்களை நடத்துவேன் - என்றார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கருத்துரைத்த வடக்கு முதலமைச்சர், அமெரிக்க அரசுக்கும், மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் எங்களின் பிரச்சினைகள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும் எனவும் குறிப்பிட்டார். (த-5)

### தென்கொரியப்

தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த தென்கொரியத் தூதுவர் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று புதன்கிழமை காலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் முதலமைச்சர் மற்றும் தூதுவர் இணைந்து ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு உதவுவது தொடர்பிலும் இங்குள்ள இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாகத் தென்கொரியத் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன் இளைஞர் யுவதிகளின் மேற்படிப்புக்காகப் புலமைப் பரிசில் வாய்ப்புக்களை தமது அரச வழங்கியுள்ளதாகவும் அதற்கு வடக்கிலுள்ள இளைஞர் யுவதிகள் விண்ணப்பிப்பதில்லை எனவும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் இது குறித்து தெரிவிக்கையில்,

எங்கள் இளைஞர்கள், யுவதிகள் தென்கொரிய அரசின் வாய்ப்புகளை சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மீன்பிடி தொடர்பிலான தேவைகள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது - என்றார். (த-5)

### இந்திய

மன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்தி ரராஜா முன்னிலையில் இவர்கள் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது.

5 படகுகளில் 19 பேருடன் தீவகக் கடலில் வைத்து சில மாதங்களுக்கு முன்னர் இவர் கள் கைது செய்யப்பட்டிருந்தனர். நீதிமன்ற உத்தரவுக்கமைய அனைவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரைக்கு அமைவாக அவர்கள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணித்த படகுகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்களை மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் டிசெம்பர் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார் நீதிவான். (த-4)

### வன்புணர்வின்

தும் உடற்கூற் றுப் பரிசோதனைகள் இடம் பெற்று வருவதாகக் கூறப்படு கின்றது.

இதேவேளை அண்மையில் வண்ணார்பண்ணையிலுள்ள நாச்சிமார் கோயில் தேர்முட்டியில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்ட குடும்பப் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தொடர்ச்சியாக பெண்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதனை அடுத்து குடாநாட்டு மக்கள் மத்தியில் பலத்த சந்தேகங்கள் தோன்றியுள்ளதை அவதானிக்கமுடிகிறது. (ஐ-4-400)

### உடுவிலில்

பட்டுள்ளது.

இதனையடுத்துக் கல்லூரி வளாகம் முழுவதும் புகையூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று உடுவில் மகளிர் கல்லூரிக்கு நேரடியாகச் சென்று கல்லூரி வளாகம் முழுவதும் புகையூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (த-86-400)

### வெளிநோயாளர்

படப்போவதாக அறிவித்துள்ளன. எனவே அவசர சேவைகள் மட்டும் இங்கு இயங்கும் என்று அவர் மேலும் கூறினார்.

யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் அரச தாதியர்கள் உட்பட நாடளாவிய ரீதியில் தாதியர்கள் நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் என்பன சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை அவர்களது போராட்டம் முடிவுக்கு வந்ததன் பின்னர் வழமையான செயற்பாடுகள் இயங்கும். (த-4)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.31

மாலுசந்தி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே லீக் முறையில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு :-

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழகம் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

> மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



யாழ்.மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவ முதல்வர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட சென்றலைட் பூளுஸ் விளையாட்டுக்கழக அணித்தலைவர் ஜெகதீஸ் யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவன் மோகனிடம் இருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெறுகிறார். (த-23)

## இன்றைய ஆட்டம்



வவுனியா, ஒக். 31

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் வடதாரகை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அல்கிஜிரா விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

## ஆட்டம் சமநிலை

வவுனியா. ஒக்.31

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் பண்டாரவன்னியன் ஞாப கார்த்த வெற்றிக் கிண்ணத் துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் செவ் வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டம் சமநிலையில் முடிந்தது.


இதில் இளம்தென்றல் விளை யாட்டுக்கழக அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண் டது. இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

## மானிப்பாய் பரிஸ் அணி 44 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.31

நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றில் 3 ஆவது போட்டி கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போது மானிப்பாய் பரிஸ் அணி, நியூஸ்ரார் அணியை 44 ஓட்டங்களால் வெற்றி வெற்றிது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஸ் அணி 20 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றனர்.



வினோத் 88, சுபாஸ்கரன் 37 ஓட்டங்களைப் பெற்றனர். நியூஸ்ரார் சார்பில் மோகனதீபன், சஜீத் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 14.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றனர்.

உத்தமன் 41, றொசான், சஜீத் தலா 15 ஓட்டங்களைப் பெற்றனர். மானிப்பாய் பரீஸ் சார்பில் நிதர்சன், பிர தீஸ் தலா 3 இலக்குகளை யும், டில்சான் 2 இலக்குக ளையும், சுபாஸ், வினோத் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர்.

இந்தச் சுற்றுப் போட்டித் தொடரில் மானிப்பாய் பரிஸ் அணி 20.20 புள்ளிகள் (5 போட்டிகள்). நியூஸ்ரார் அணி 18.99 (5 போட்டிகள்) புள்ளிகளைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த)

> மானிப்பாய் பரீஸ் அணி, நியூஸ்ரார் அணியை 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

## கைதடி விக்னேஸ்வரா நடத்தும் மென்பந்து கிரிக்கெட் இன்று

கைதடி, ஒக்.31

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைர விழாவை முன்னிட்டு தென்மராட்சி மேற்கைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., கைதடி குருசாமி வித்தியாலயம், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், கைதடி நவீல்ட் பாடசாலை, நாவற்குழி ம.வி., கைதடி- நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன பங்குபற்றவுள்ளன. (த-288)



## இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ்



கொழும்பு, ஒக். 31

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று குருநாகல் இக்பாகமுவ மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து பெந்தோட்ட காமினி மகாவித்தியாலய அணி மோதவுள்ளது. (த-23)

## நல்லூர் கோட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.31

நல்லூர் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது, 16 வயது, 18 வயது பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

> *யாழ்.இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.*




# பங்களாதேஷ் இலகு வெற்றி

பங்களாதேஷுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் பங்களாதேஷ் அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.
ஷேரே பங்களா மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 49.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது.
13 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்த அந்த அணி, 25 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது.
ஆனால் 4ஆவது இலக்குக்காக 154 ஓட்டங்கள் பகி ரப்பட்டன. அதன் பின்னர் இறுதி நேரத்தில் மேலும் ஓட்டங்கள் பெறப்பட அந்த அணி 265 ஓட்டங்களைப் பெற்றது.
துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக முஷ்பிக்கூர் ரஹீம் 98 பந்துகளில் 90 ஓட்டங்களையும், நயீம் இஸ்லாம் 115 பந்துகளில் 84 ஓட்டங் களையும், மகமதுல்லா 30 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் நீஷம் 9 பந்துப்பரிமாற்றங்களில் 42 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ரிம் சௌதி 10 பந்துப்பரிமாற்றங்களில் 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கொரே அன்டர்சன் 8.5 பந்துப்பரிமாற்றங்களில் 46 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
266 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 பந்துப்பரிமாற்றகளில் 3 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது.
நீண்ட இடைவெளியின் பின்னர் 33 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு, நியூசி லாந்து அணிக்கு 206 ஓட்டங்கள் வழங்கப்பட்டன. நியூசி லாந்து அணி 29.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 162 ஓட்டங்களை மாத்திரம் பெற்று டக் வேர்த் லூயிஸ் அடிப்படையில் 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக கிரான்ற் எலியட் 77 பந்துகளில் 71 ஓட்டங்களையும், கொரே அன்டர்சன் 31 பந்துகளில் 46 ஓட்டங்களையும், அன்ரன் டேவ்சிச் 29 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் காயம் காரணமாக கேன் வில்லியம் சன் துடுப்பெடுத்தாட மைதானத்துக்கு வந்திருக்கவில்லை.
பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஹட்ரிக் சாதனை படைத்த றூபெல் ஹொசைன், 5.5 பந்துப்பரிமாற்றங்களில் 26 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கைப்பற்றினார். சொஹக் கஸி, அப்துர் ரஸாக், மகமதுல்லா ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். இப்போட்டியில் நாயகனாக றூபெல் ஹொசைன் தெரிவானார். (கு)

# பந்துவீச்சாளர்களை விமர்சிக்கமாட்டேன்




தற்போதைய நிலையைப் பொறுத்த வரையில் இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் குறித்து கருத்து தெரிவிக்க முடியாது என ராகுல் டிராவிட் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், தொடக்கத்தில் ஒருநாள் போட்டிகளில் 250 ஓட்டங்கள் எடுத்தால் அது போதுமானது. இப்போது குறைந்தது 300 ஓட்டங்கள் எடுக்க வேண்டும். நிலைமை இப்படி இருக்க, பழைய புள்ளி விவரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது.
இதனால் பந்துவீச்சாளர்கள் வெளிப்படுத்தும் திறமையின் அளவீடு குறித்து, நாம் மறுமதிப்பீடு செய்தாக வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.
இதுதவிர, சமீபத்தில் வந்த புதிய களத்தடுப்பு விதிகள், இரண்டு புதிய பந்துகள் போன்ற காரணங்களால் ஓட்டங்கள் அதிகமாக எடுக்கப்படுகின்றன.கடந்த முறை இங்கிலாந்து அணி இந்தியா வந்த போது ஒரு முறை மட்டும் தான் 300 ஓட்டங்களைக் கடந்தது.பாகிஸ்தான் தொடரில் 250 ஓட்டங்களை தாண்ட விடவில்லை.
இதனால் தான் இப்போதைய இந்திய அணியின் பந்துவீச்சாளர்கள் குறித்து விமர்சனம் செய்ய வில்லை. அதேநேரம், கடைசி கட்ட பந்துப்பரிமாற்றங்களில் இந்திய அணியின் பந்துவீச்சு குறித்து கவலையாக உள்ளது.
இருப்பினும் இப்போதுள்ள பந்து வீச்சாளர்கள் இளம் வீரர்கள் என்பதால், அனுபவத்தின் அடிப்படையில் பாடம் கற்றுக் கொள்வர் என நினைக்கிறேன்.மற்றபடி இந்திய ஒருநாள் அணியின் துடுப்பாட்டம் எப்போதும் இல்லாத வகையில் உள்ளது.
முதல் 7 வீரர்கள் வரை ஓட்டங்கள் சேர்ப்பது வியக்கத்தக் கது-என்றார். (கு)

“ இப்போதுள்ள பந்து வீச்சாளர்கள் இளம் வீரர்கள் என்பதால், அனுபவத்தின் அடிப்படையில் பாடம் கற்றுக் கொள்வர் என நினைக்கிறேன்.

# அரைச் சதமடித்து வெற்றியுடன் விடை பெற்றார் டெண்டுல்கர்

ரஞ்சி கிண்ண லீக் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 79 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க மும்பாய் அணி 4 இலக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியாவில் 79ஆவது ரஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் மும்பாய் அணியில் சச்சின் விளையாடுகிறார்.
அரியானாவின் லாலியில் நடந்த ஏ பிரிவு லீக் போட்டியில் மும்பாய் - அரியானா அணிகள் மோதின.
முதல் இன்னிங்சில் அரியானா 134 ஓட்டங்கள் , மும்பாய் அணி 136 ஓட்டங்கள் எடுத்தன.
மூன்றாவது நாள் ஆட்ட நேர முடிவில் மும்பாய் அணி, இரண்டாவது இன்னிங்சில் 6 இலக்குகளை இழந்து 201 ஓட்டங்கள் எடுத்திருந்தது.
சச்சின் 55 ஓட்டங்களுடனும், குல்கர்னி 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.
39 ஓட்டங்கள் என்ற எளிய இலக்குடன் நேற்றைய கடைசிநாள் ஆட்டத்தைத் தொடர்ந்த மும்பாய் அணிக்கு, குல்கர்னி நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.
மறுமுனையில் சச்சின் அவ்வப்போது நான்குகள் அடித்தார். பின் ரோகித் சர்மா வேகத்தில் நான்கு அடித்த குல்கர்னி மும்பாய் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.
மும்பாய் அணி இரண்டாவது இன்னிங்சில் 6 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.
சச்சின் 79 ஓட்டங்களுடனும், குல்கர்னி 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (கு)





# மெஸ்ஸியின் சாதனையை முறியடித்த 7 வயதுச் சிறுவன்

50 போட்டிகளில் 106 கோல் என்ற லயோனல் மெஸ்ஸியின் சாதனையை முறியடித்தான் பிரிட்டனைச் சேர்ந்த 7 வயது சிறுவன் சோனி கில்கென்னி. அந்தச் சிறுவன், வெர்ன்போர்ட் ரேஞ்சர்ஸ் என்ற ஜூனியர் அணிக்காக விளையாடி வருகிறான். பிரிட்டனின் டெய்லி எக்ஸ்பிரஸ் நாளிதழ் இந்தச் சிறுவன் தொடர்பான செய்தியை வெளியிட்டுள்ளது.ஜூனியர் அணிகளுக்கு இடையி லான போட்டியில் சோனி, 12 கிண்ணங்களை வென்றுள்ளான். மெஸ்ஸியின் சாதனையை முறியடிப்பதற்காகச் சோனி கடுமை யான பயிற்சி மேற்கொண்டான் என்று அவனது தந்தை கூறியுள்ளார். (கு)



# கோஹ்லி, தவான் சதத்தால் தப்பிப் பிழைத்தது இந்தியா



இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான 6 ஆவது ஒரு நாள் போட்டி நேற்று நாக்பூரில் தொடங்கி நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் இந்திய அணிமுதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இந்தப் போட்டியில் தோற்றால் இந்தியா தொடரை இழந்து விடும் என்பதால் இந்திய வீரர்கள் வெல்ல வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் களம் இறங்கினர். இந்திய அணியில் 3 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றிருந்தனர்.

ஆஸ்திரேலிய அணியின் தொடக்க வீரர்களாக பின்ஞ்-ஹியூக்ஸ் களம் இறங்கினார்கள். அணியின் ஓட்ட எண்ணிக்கை 30 ஆக இருக்கும் போது ஹியூக்ஸ் 13ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து இரண்டாவதாக இணைந்த வொட்சன் களம் இறங்கினார். 20 ஓட்டம் எடுத்திருக்கும்போது பின்ஞ் ஆட்டம் இழந்தார். அப்போது ஆஸ்திரேலிய அணி 11.1 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகள் இழப்புக்கு 45 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

3ஆவது இலக்குகளுக்காக வொட்சன் பெய்லி இணைந்து ஆரம்பத்தில் நிதானமாக விளையாடினர். பின்னர் அதிரடியாக விளையாடினார்கள். வொட்சன் 94 பந்தில் 13 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 102 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மக்ஸ்வெல் 9 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.


ஒருபுறம் இலக்குகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் இந்திய பந்துவீச்சை அடித்து நொருக்கிய பெய்லி, 156 ஓட்டங்கள் குவித்துப் பவிலியன் திரும்பினார். வோக்ஸ் 44 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதனால் ஆஸ்திரேலியா அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 350 ஓட்டங்களைக் குவித்தது.

17ஆவது பந்துப்பரிமாற்றத்தை ரவிந்திர ஜடேஜா வீசினார். இந்த பந்துப் பரிமாற்றத்தின் 4ஆவது பந்தை வொட்சன் அடிக்க ரோகித் சர்மா பிடி எடுத்தார். ஆனால் அது முறையற்ற பந்து என அறிவிக்கப்பட்டது. அப்போது வொட்சன் 25 ஓட்டங்கள் எடுத்திருந்தார். இந்த கண்டத்தில் இருந்து தப்பிய வொட்சன் சதம் எடுத்து அசத்தினார்.

இந்தியப் பந்து வீச்சு சார்பாக ஜடேஜா, அஸ்வின் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும், புவனேஸ்வர்குமார், முகமட் ஷமி இருவரும் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 351 என்ற இமாலய வெற்றி இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி தஹிர் தவான் மற்றும் விராட் கோஹ்லி ஆகியோரின் சதத்தின் உதவியடன் 3 பந்துகள் மீதமிருக்கையில் நான்கு இலக்குகளை மட்டும் இழந்து 352 ஓட்டங்களை எடுத்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கி ரோகித் சர்மா, தவான் இருவரும் அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியை முன்னிலைப்படுத்தினர். இவர்கள் இணைப்பாட்டமாக 178 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது சர்மா 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இவர் 89 பந்துகளை எதிர் கொண்டு 7 நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக இதனைப் பெற்றார். அடுத்து தவானுடன் இணைந்த கோஹ்லி அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றார். தவான் 102 பந்துகளில் 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 100 ஓட்டங்களைப் பெற்றுத் தொடரின் இரண்டாவது சதத்தை பதிவு செய்து ஆட்டமிழந்து வெளியேறினார். மறுமுனையில் அதிரடி காட்டிய கோஹ்லியும் தனது இரண்டாவது சதத்தை பதிவு செய்ததுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது 66 பந்துகளை எதிர் கொண்டு 18 நான்கு ஓட்டங்கள் ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 115 ஓட்டங்களைப் பெற்றார். டோனி 25 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.



பந்து வீச்சில் ஜோன்சன் 2 இலக்குகளையும் பல்க்கினர், பின்ஞ் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக கோஹ்லி தெரிவு செய்யப்பட்டார். இவ் வெற்றியின் மூலம் 2:2 என்ற அடிப்படையில் சமநிலையில் இந்தியா. இவ் இரு அணிகளுக்குமிடையிலான 7ஆவதும் இறுதியமான போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (கு-400)

## தேவை

தனியார் கல்வி நிலையத்துக்கு அலுவலக உதவியாளர் (clerk) (பெண்) தேவை.
யாழ். மாநகர சபை எல்லைக்குள் உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(கணினி அறிவு Tamil, English, Typing விரும்பத்தக்கது) தொ.பே. 0774696695

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர், திருநெல்வேலி, ஆனைப்பந்தி, அத்தியடி போன்ற இடங்களில் தேவை.

T.P 0771624211

# தங்கப் பந்து யாருக்கு?

சர்வதேச ரீதியில் உதைபந்தாட்டப் போட்டியில் சிறந்து விளங்கும் வீரருக்கு ஆண்டு தோறும் அளிக்கப்படும் தங்கப் பந்து விருதுக்கு இம்முறை 23 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த அறிவிப்பை சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் (பிபா) நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

அவர்களில் லியோனல் மெஸ்ஸி (ஆர்ஜென்ரீனா), பிராங் ரிபெரி (பிரான்ஸ்), கிறிஸ்ரியானோ ரொனால்டோ (போர்த்துக்கல்), கேரத் பேல் (வேல்ஸ்), நெய் மர் (பிரேசில்) உள்ளிட்டோரும் அடங்குவர்.

1994ஆம் ஆண்டு வரை தங்கப் பந்து விருதை ஐரோப்பிய வீரர்கள் மட்டுமே பெற்று வந்தனர். அந்த விதிமுறையானது 1995ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வாக்கெடுப்பு முறையில் இந்த விருதைப் பெறுபவர் தேர்வு செய்யப்பட்டு வருகிறார். இந்தப் பருவகாலத்தில் சிறப்பாக விளையாடிய வீரர் யார் என்று அணிகளின் பயிற்சியாளர்கள், அணித் தலைவர்கள், ஊடகவியலர்கள் ஆகியோர் வாக்களித்துத் தேர்வு செய்வர்.



அடுத்த ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி இந்த விருதைப் பெறுபவர் யார் என்று அறிவிக்கப்படும். 4 ஆண்டுகளாகத் தொடர்ந்து தங்கப்பந்து விருதைப் பெற்றுவரும் மெஸ்ஸி, இந்த முறையும் அந்த விருதைப் பெறுவோர் பட்டியலில் உள்ளார்.

2012-2013 பருவகாலத்தில், சிறந்த வீரருக்கான ஐரோப்பிய விருதைப் பெற்ற ரிபெரி, இம்முறை தங்கப் பந்தை வெல்லலாம் ஏன்று கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிபா பயிற்சியாளர் விருதுக்கு 10 பேர் கொண்ட பட்டியல் அறிவிக்கப்ப்ட்டுள்ளது. இவர்களில் மான்செஸ்டர் யுனைடெட் மேலாளர் அலெக் பெர்கி யூஸன், பேயர்ன்ஸ் மேலாளர் ஹிநெக்ஸ் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். (கு)

"Green Grass அமர்க்கள தீபாவளி 2013"
இன்னிசை இரவு விருந்து
இடம் : சங்கிலியன் மண்டபம், கிறீன் கிறாஸ்
33, ஆசீர்வாதம் ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
DJ Music
Night dinner party
Audience talents
Dance (cultural & western)
காலம் : 02.11.2013 மாலை 7.00
நுழைவுச்சீட்டுக்களை முற்பதிவு செய்துகொள்ள இன்றே அழையுங்கள் 0777803210
021 222 1686 | 021 222 4385 | 021 7201194 | www.jaffnagreengrass.com | greengrassjaffna@gmail.com

## யாழ்.நகரில் கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் அடுக்கு மாடிக் கடையும், அதனுடன் சேர்ந்த களஞ்சியமும் (வாகனத் தரிப்பிட வசதி உள்ளது) 2¾ பரப்புக் காணியில் அமைந்துள்ளது.
தொடர்பு: 077 387 6615 /077 772 5258 / 077 559 0069

மாபெரும் தீபாவளி சிறப்புத் தள்ளுபடி
CCTV CAMERA
எதிர்பாராத கவர்ச்சிகரமான விலைக் கழிவில்
4 Camera System only 39500/=
SPECIAL OFFER!
700 TVL CMOS NIGHT VISION CAMERA X 4
4 CH NET WORK DVR VGA, TV OUT X 1
SEAGATE 500 GB HARD DISK X 1
50 M COAXIAL /50M POWER CABLE X 1
12V 1A POWER PACK X 4
BNC CONNECTORS X 8
TOTALLY FREE WITH THIS PACKAGE
INTERNET SETTING AND MOBILE VIEW SETTING
27.10.2013 தொடக்கம் 16.11.2013 வரை
ONE YEAR WARRANTY
அல்டி எலக்ரோனிக்ஸ்
இல.15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 0212222676

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.